


COMICS PDF TIMES
HSC

# கழற்ற முடியாத விலங்கு!

COMICS PDF TIMES
HSC

மர்மநாவல்

NOT FOR SALE
FAN MADE ONLY

எழுதியது
'மேதாவி'

சத்தியா பதிப்பகம்
16, பேகம் சாஹிப் 4-வது தெரு.
சென்னை—14

முதற்பதிப்பு—ஜூன் 1971
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 1-50

COMICS OF TIMES

இக்கதையில் வரும் பெயர்களும், சம்பவங்களும் யாரையும் குறிப்பிடுவன அல்ல. யாவும் கற்பனையே.

சத்யா அச்சகம், 16, பேகம் சாஹிப் தெரு, சென்னை 1

# அத்தியாயம் 1

சரபோஜி பைத்திய வெறிகொண்ட நிலையிலிருந்தான். அன்றிரவு முழுவதும் அவன் அதே நிலையில்தான் இருநதான். அந்தப் புல்வெளி சரிவிலே, குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி மற்றவர் கண்களுக்குத் தெரியாத ஏதோ அரூப ஜீவன்களோடு, தனது கையை ஆட்டி என்னென்னவோ பேசிக் கொண்டும். விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தான். வெள்ளி முளைக்கப் போகும் நேரத்திலே, பண்டரியின் பக்கம் அவன் கவனம் திரும்பியது. தனது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், பண்டரி ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தது, அவனை ஆத்திர வெறி கொள்ளச் செய்தது. கண்மூடித்தனமான அசுர வெறியோடு பண்டரியை இழுத்துப் போட்டு அடி அடியென்று அடித்து விளாசினான். அவன் அப்படி அடிக்கும் பொழுது அங்கிருந்த மற்ற இருவருக்கும் அதில் குறுக்கிட தைரியம் இருக்கவில்லை.

அந்த நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு, சிறிது தூரத்திலேயேதான் ரங்கசாமி புல் தரையின் மீது படுத்திருந்தான். அவனுக்கு அருகாமையில் தளுக்கு சுந்தரம தனது முழங்காலைக் கட்டியபடி உட்கார்ந்திருந்தான். இருவருடைய பார்வையும், நிம்மதியில்லாமல் அலை பாய்ந்து கொண்டிருந்த சரபோஜியின் மீதே லயித்திருந்தது. சுந்தரத்தின் இதழ் கோடியிலே ஒரு புன்னகை தாண்டவமாடியது.

“பைத்தியம் நன்றாக முற்றி இருக்கிறது!” என்று மெதுவான குரலில் கூறிய ரங்கசாமி. ‘இந்த விகாரம் முடியும் வரை அவன் நல்ல நிதானத்தோடு நடந்து நம்மை ஜெயிலுக்கு அனுப்பாமல் இருந்தானானால் அவன் பெரிய அதிருஷ்டம்தான்!” என்றான்.

தளுக்கு சுந்தரம் தனது வறண்ட உதடுகளை நாவினால் தடவி ஈரமாக்கிக் கொண்டபிறகு பேச ஆரம்பித்த பொழுது அவனது குரலிலே பண்பு தொனித்தது,

COMICS PDF TIMES

''பைத்திய நிலையை அடையும் பொழுதான் அவன் அதி மேதாவியாக இருக்கிறான்!''

உள்ளபடியே தனுக்கு சுந்தரம், குற்ற பரம்பரையிலே ஒரு அங்கத்தினனாகாமலிருந்தால் அவன் கல்வித்துறையிலே ஒரு வல்லுனனாகவோ ஒரு வித்தகனாகவோ ஆகியிருப்பான். அவ்வளவு தூரம் அவனுக்கு கூறிய மதியும், வாக்குத்திறனும் அமைந்திருந்தன.

தொடர்ந்து பேசினான் தனுக்கு சுந்தரம்: ''பைத்தியம் பிடித்தவன் என்றால் புத்தி இல்லாதவன் என்று அர்த்தமல்ல. எவ்வளவுக்கெவ்வளவு புத்திக் கூர்மை அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஒருவன் பைத்திய நிலையை வேகமாக நெருங்கி விடுகிறான் ''என்று கூறிக் கொண்டு வந்தவன், சட்டென்று, ''ரங்கசாமி! அந்தப் பண்டாரி ஊளையிடுவதைக் கொஞ்சம் நிறுத்தேன்!'' என்று தவித்தான்.

ரங்கசாமி தான் சாய்ந்திருந்த இடத்தை விட்டு நகரக் கூடஇல்லை. அவனது பார்வை, சற்று தூரத்தில் கிடந்த பண்டாரியின் பக்கம் சென்றது. பண்டாரி ஈனஸ் வரத்தில் முனகிய படியும், தேம்பி அழுத படியும், இடையிடையே சரபோஜியை ஏதோ சபித்தபடியும், அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான்.

''அந்தக் கழுதை எல்லாம் சரியாகி விடும்'' என்று சர்வ அலட்சியமாகக் கூறிய ரங்கசாமி, ''எவ்வளவுக்கெவ்வளவு முரட்டுத்தனமாக சரபோஜியிடம் உதை வாங்கினானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு சரபோஜியிடம் மதிப்பு உயரும்'' என்றான்.

பிறகு என்னவோ நினைத்துக் கொண்டவனாய் தனுக்கு சுந்தரத்தின் அருகில் இன்னும் சற்று நெருங்கின ரங்கசாமி மிக மெதுவான குரலில், ''நீ எப்பொழுதாவது சரபோஜி யின் முகத்தைப் பார்த்திருக்கிறாயா?—அதாவது அவனை மறு முறை பார்த்தால், அடையாளம் கண்டு கொள்ளும் அளவுக்கு அவன் முகத்தைப் பார்த்திருக்கிறாயா?''

"நான் அவன் முகத்தைப் பார்த்ததே இல்லை, இதோடு மூன்று தடவை அவனுக்காக வேலை செய்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் அவனை நான் பார்க்கும் பொழுது அந்த விசித்திர முகமுடியுடன் தான் காட்சியளிக்கிறான். நாடகங்களில் வரும் கொள்ளைக் காரர்களைப் போல, நம்மை சந்திக்கும் நேரங்களிலெல்லாம் அவன் முகமுடிதான் அணிந் திருக்கிறான். முதல் தடவை நான் அவனை சந்தித்தபோது, இரவு மணி பன்னிரண்டு. என்னை கடற்கரை ரஸ்தாவி லுள்ள விக்டோரியா மகாராணி சிலைக்குப் பக்கத்தில் வந்து நிற்குமாறு உத்தர விட்டிருந்தான். அப்பொழுதுதான் நான் அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவனுக்கு என்னைப் பற்றிய எல்லாவிவரங்களும் தெரிந்திருந்தன. நான் எத்தனை முறை சிறை சென்றிருந்தேன் என்றும் அவன் சரியாகச் சொன்னான். என்னை அவன் செய்யத் தூண்டிய வேலையும் சுலபமாகவே இருந்தது என்று நிறுத் தினான்.

"அவன் நிறைய கூலியும் கொடுக்கிறான்" என்று கூறிய தனுக்கு சுந்தரம், "தனது வேலைகளை நிறைவேற்ற அவன் ஆட்களை நியமிக்கும் விதமும் இதே போலத்தான் இருக் கிறது" என்றான்,

பிறகு சுந்தரத்தின் பார்வை சரபோஜியின் பக்கம் திருப்பியது. நிம்மதி இல்லாமல் இப்படியும் அப்படியும் நடந்து கொண்டிருந்த சுரபோஜியின் உருவத்தையே கூர்ந்து சில வினடிகள் பார்த்துக் கொண்டிருந்தான். "அவனுக்கு பைத்திய வெறி பிடித்திருக்கிறது"—"அவன் நிறையத்தான் கூலி கொடுக்கிறான். இந்த தடவை இன்னும் அதிகமாகக் கொடுப்பான்" என்றான்.

ரங்கசாமி சட்டென்று தனுக்கு சுந்தரத்தின் முகத்தை நிமிர்ந்து பார்த்தபடி, "இரண்டாயிரம் ரூபாயும் தப்பி யோடு செலவுக்குத் தனியாக இருநூறு ரூபாயும் கொடுக் கிறான் இது நியாயம் தானே? "என்று சந்தேகத்தோடு கேட்டான்.

"இன்னும் அதிகமாகக் கொடுக்கப்போகிறான்" என்று அலட்சியமாகக் கூறிய தளுக்கு சுந்தரம், 'இந்த வேலைக்கு நிறைய கொடுக்கலாம். பல லட்ச ரூபா பெறுமானமுள்ள தங்கலாரியை வழிப்பறித்து மடக்கி, அதை ஓட்டிக் கொண்டு சென்னை வீதிகளிலே துணிச்சலாகச் செல்வதற்கு இரண்டாயிர ரூபாயும், இருநூறு பிச்சைக் காசும் போதுமா? இந்தச் செயலால் நமக்கு பத்து வருட சிறை வாசம் போதாதுச்" என்றான்.

இதைக் கூறிவிட்டு, தான் இருந்த இடத்தை விட்டு எழுந்தான் தளுக்கு சுந்தரம். சரபோஜி அதற்குள் எங்கோ புதர் மறைவில் மறைந்து விட்டான் அவர்களைச் சுற்றிலும் அரைவட்ட வடிவத்தில் அடர்த்தியான புதர் ஒன்று இருந்தது அப்புதரின் ஒரு பக்கத்தின் கோடி அவர்கள் இருந்த சில அடி தூரத்திற்கு வரை மிக அடர்ந்து இருந்தது.

'கிட்டத்தட்ட 'ஐம்பது லட்சரூபாய் பெறுமானமுள்ள தங்கம்! நமக்கு அதில் பத்து சதவீதமாவது பங்கு கொடுக்க வேண்டும்; என்று மீண்டும் கூறினான் சுந்தரம்.

ரங்கசாமி இளித்தபடி, "பண்டாரிக்கு என்ன பங்கு?" என்று கேட்டான்.

தளுக்குசுந்தரம் தன் உதட்டைக் கடித்துக்கொண்டான். "அவனை நாம் கூட்டு சேர்க்க முடியாதென்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு சுற்றிலும் ஒருமுறை சரபோஜி தென்படுகிறானா என்று பார்த்தான். அவனை எங்கும் காணவில்லை. பிறகு ரங்கசாமியின் அருகாமையில் மெதுவாக உட்கார்ந்தான் தளுக்கு சுந்தரம்.

"ரங்கசாமி" என்று மெல்லிய குரலில் பேச ஆரம்பித்த சுந்தரம், "சரக்கு முழுவதும் நமது கையில் தான் இருக்கப் போகிறது நாளையதினம் அவனது புத்தி கொஞ்சம் தெளிவடையக் கூடும். எப்பொழுதாவது தான் அவனுக்கு இந்த புத்தி மாறாட்ட நிலை ஏற்படுகிறது. புத்தி தெளிவுள்ள மனி

தன். நியாயமான வாதத்தை ஒப்புக் கொள்ளத்தான் செய்வான் இப்பொழுது நாம் இந்தத் தங்கத்தை கொள்ளையடித்துக் கைப்பற்றப் போகிறோம். வழக்கம் போலவே, ஒரு பள்ளத்தாக்கிலே விஷவாயுவை நிரப்பி காரை ஓட்டி வருபவனை மயங்கி விழச்செய்து கொள்ளையடிக்கும் முறையைத்தான் இந்தத் தடவையும் அவன் கடைப்பிடிக்கிறான். ஆனால் இன்னொரு முறை அவன் இதே வேலையைச் செய்வானா என்று சொல்ல முடியாது: சென்னை நகரத்தில் ஒரு இடத்தில் இந்த லாரியை தங்கத்துடன் ஓட்டிக்கொண்டு போய் நிறுத்தப் போகிறேன். மரியாதையாக சரபோஜி நமக்கு ஒழுங்கான பங்கு தராவிட்டால், அவன் இன்ஸ்பெக்டர் கந்தப்பாவை சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படும்'' என்றான்.

மீண்டும் அவனது பார்வை மாயமாய் மறைந்த சரபோஜியைத் தேடி அலைந்தது. அந்தப் புதருக்குப் பின்னால் சிறிது தூரத்தில் மறைவான ஒரு இடத்திலே சரபோஜியின் கார் மறைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வேலை முடிந்ததும் சர்போஜி அந்தக் க ரில் ஏறிக்கொண்டு பாதுகாப்பான இருப்பிடத்திற்குப் போய்விடுவான் அவனது சகாக்களாக வந்தவர்கள்தான் சகலவித ஆபத்துகளுக்கும் தலை கொடுத்தபடி, கொள்ளைப் பொருளைக் கடத்திக்கொண்டு போக வேண்டியிருக்கும்''

அருகாமையிலிருந்த பள்ளத்தாக்கு ஒன்றின் ஓரத்திலே நான்கு பிரம்மாண்டமான இரும்புக் குழாய்கள் இருந்தன. இரு புறமும் அடைக்கப்பட்ட அந்தக் குழாய்களுக்குள் தான் விஷவாயு அடைக்கப்பட்டிருந்தது. ரங்கசாமியிடமும், தளுக்கு சுந்தரத்திடமும், விஷவாயு தடுப்பு முக மூடிகள் இருந்தன,

தளுக்குசுந்தரம் பேச ஆரம்பித்தான்,

''சரபோஜியின் பொருளாதார நிலைமையைப் பற்றி. என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அவனிடம் ஏராளமான பொன்னும் பொருளும் குவிந்து கிடக்கும்'' என்றான் ரங்கசாமி.

“நீ நினைப்பது தவறு” என்று சிரித்த சுந்தரம் “வெறி கொண்டவனைப்போல அவன் பணத்தை செலவழிக்கிறான் உள்ளபடியே அவனது பொருளாதார நிலை ரொம்பவும் ஆட்டம் கண்டிருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். அவன் பெரிய கொள்ளை நடத்தி கிட்டத்தட்ட பன்னிரண்டு மாதங்களாகின்றன” என்றான்.

“பணத்தையெல்லாம் அவன் என்ன செய்கிறான்?” என்று ஆவலாகக் கேட்டான் ரங்கசாமி.

“செலவழிக்கிறான்—ரப் எல்லோரையும் போல!” என்று அலட்சியமாகக் கூறிய தனுக்குசுந்தரம் “கிராமியப் பகுதியில் ஒரு பெரிய மாளிகையை வாங்கி அங்கு போய் தங்கிவிடப் போவதாகபோன தடவை என்னிடம் சொன்னான். அங்கே போய் பழைய தொழிலை மறந்துவிட்டு ஒரு கனவானைப்போல் வாழ்க்கை நடத்தப் போவதாக சொன்னான். ஆனால் நேற்றிரவு நான் அவனோடு பேசிக் கொண்டிருந்த பொழுது கொள்ளையடிக்கும் பணத்திலே பாதிக்குமேல் தனது கடனை அடைக்கவே சரியாக இருக்குமென்று கூறினான்” என்று சொல்லியபடி தனது கையை விரித்து ஒருமுறை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு “அவன் ஒரு புளுகன்” என்று அலட்சியமாகக் கூறினான்.

அந்த சமயத்தில் சிறிது தூரத்திலிருந்த புதரில் சரசர வென்று ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

“அது என்ன?” என்று படபடப்புடன் கேட்டபடி துள்ளி எழுந்த தனுக்குசுந்தரம், வேகமாகப் புதர் அருகே ஓடி புதருக்குள் கூர்ந்து பார்த்தான். அங்கு யாருமே காணப்படவில்லை.

யோசனையோடு ரங்கசாமி இருந்த இடத்திற்குத் திரும்பி வந்த சுந்தரம், “ஒருக்கால் அந்தப் பிசாசு ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்ததோ என்னவோ? எவ்வளவு நேரமாக அவன் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தானோ? என்றான்.

“யார்? சரபோஜியா?’ என்று திகிலடைந்து போய் கேட்டான் ரங்கசாமி.

தனுக்கு சுந்தரம் அதற்கு பதில் சொல்லவில்லை. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டான். அதிலிருந்து அவன் ரொம்ப சங்கட உணர்ச்சிக்கு ஆளாகி இருக்கிருனென்று விளங்கியது.

"நான் பேசியதைக் கேட்டிருந்தால் அவன் நேராக வந்திருப்பான். அவன் இப்பொழுது வெறி பிடித்திருக்கிருன்— இரவு முழுவதும் அவன் வெறிபிடித்து இருந்தான்" என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான் தனுக்குசுந்தரம்

ரங்கசாமி எழுந்து தன் உடலை முறித்து விட்டுக்கொண்டான். "அவன் எப்படி வாழ்க்கை நடத்துகிருன் என்று தெரிந்து கொள்ளவேண்டும். அவனுக்கு எங்கோ ஓரிடத்தில் மனைவி மக்கள் இருக்கத்தான் இருப்பார்கள்— இப்படிப்பட்ட ஆசாமிகளுக்கு அம்மாதிரி இருப்பது இயற்கைதான் அதோ வருகிருனே!"

சரபோஜி சிறிது தொலைவிலிருந்து அவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான்.

"உங்கள் முகமூடிகள் தயாராக இருக்கட்டும்— என்னிடம் கேட்க வேண்டியது ஏதாவது இருக்கிறதா சுந்தரம்?" என்று சரபோஜி கேட்ட பொழுது அவனது குரல் அமைதியாக இருந்தது. பிறகு அவனது பார்வை பண்டரியின் பக்கம் திரும்பியது. "அவனைக் கிளப்பிவிடு!" என்று ரங்கசாமியிடம் கட்டளையிட்டான்.

பண்டரி! நீ அந்த ரஸ்தாமுனைப் பக்கம்போய் நில், உன்னுடைய சிகப்புலாந்தரைக் காண்பித்து அவர்களை நிறுத்து! அப்படியென்ருல் அவர்களை மெதுவாக ஓட்டி வரும்படிசெய் என்றுதான் சொல்கிறேன் உன்னை அவர்கள் பார்த்துவிடும்படிசெய் என்றுதான் சொல்கிறேன் உன்னைஅவர்கள் பார்த்துவிடும்படி நடந்து கொள்ளாதே, அந்தக் காரில் துப்பாக்கி தாங்கிய காவல் வீரன் ஒருவன் வருகிருன்"

அதன் பிறகு சரபோஜி அந்த விஷவாயுக் குழாய்களைக் கூர்ந்து பார்த்தான். ஒவ்வொரு குழாயின் முனையிலிருந்தும் முரட்டு ரப்பர் பைப்புகள் பொருத்தப்பட்டு ரஸ்தாவில்

COMICS PDF TIMES

போடப்பட்டிருந்த அடைப்புகளை தன் கையிலிருந்த ஸ்பானரின் உதவியால் திறந்து விட்டான் ''உஸ்'' என்ற சப்தத்துடன் விஷவாயு ரப்பர் குழாய்களின் வழியாக வெளியே பாய ஆரம்பித்தது.

''கொஞ்சநேரம் வரை விஷவாயு மேலே கிளம்பாது. அதற்குள் நீங்கள் முகமூடியைப் போட்டுக் கொள்ளலாம்'' என்று கூறிய சரபோஜி, பண்டரியைக் குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துக்கொண்டு நடந்தான். அங்கு சென்றதும் சிகப்பு விளக்கை அவனைப் பொருத்தச் சொல்லிவிட்டு அவன் நிற்கவேண்டிய இடம் எது என்று சுட்டிக்காட்டினான்.

பிறகு தனுக்கு சுந்தரத்திடம் திரும்பி வந்தான். சரபோஜி அவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை ஒட்டுக் கேட்டுக் கொண்டதாக சரபோஜி காட்டிக் கொள்ளவே இல்லை. அந்த நேரத்தில் அம்மாதிரி தகராறுகளை வளர்க்கக் கூடாதென்று அவனுக்குத் தெரியும். சொல்லப் போனால் அந்த நேரத்தில் அவனைப்போல உஷாராக இருந்தவர் யாருமே கிடையாது,

அந்த சமயத்தில் தூரத்தில் கார் வரும் சப்தம் கேட்டது அத்துடன் காரின் முன் விளக்குகளும் பளிச்சிட்டன.

''நீங்கள் துப்பாக்கியை உபயோகிக்க வேண்டாம் ஆனால் ஏதாவது தகராறு ஏற்பட்டால் அது உதவக் கூடிய விதத்தில் தயாராக வைத்திருங்கள் காவல் வீரன் மயக்கமடையாவிட்டால் ஆளைப் பார்த்ததும் சுட்டு விடுவானென்பதை மறந்து விட வேண்டாம். சரி சுந்தரம்! நாளைய தினம் என்னை எங்கே சந்திக்க வேண்டுமென்று உனக்குத் தெரியுமல்லவா?''

''தெரியும்'' என்ற பாவனையில் தலை ஆட்டினான் தனுக்கு சுந்தரம் சரபோஜி அப்பால் சென்று விட்டான்.

தங்கத்தை ஏற்றி வந்த கார் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று அந்தக் காரின் ''ஹார்ன்'' ஒலித்ததிலிருந்து அந்த டிரைவர் சிகப்பு விளக்கைப் பார்த்து விட்டானென்று சரபோஜி புரிந்து கொண்டு மறைவு இடத்திலிருந்து ரஸ்தாவைப் பார்த்தான்.

பள்ளத்தாக்கிற்கு ஐம்பது கஜ தூரத்தில் அந்தக் கார் வந்து கொண்டிருந்தபோது ரஸ்தா ஓரத்திலிருந்த ஒரு மனிதன் துள்ளி எழுந்து கார் முன்னால் ஓடிவதைப் பார்த்தான் சரபோஜி அந்த மனிதன் வேறு யாருமில்லை பண்டரிதான். தனது கையை மேலே உயர்த்தியபடி காரைநோக்கி ஓடினான் அடுத்த விநாடி அவனது உயர்த்திய கையிலிருந்த துப்பாக்கி பயங்கரமாக வெடித்தது. காரிலிருந்தவர்களின் கவனத்தைக் கவரவே பண்டரி ஆகாயத்தை நோக்கி சுட்டிருக்கிறான்.

பண்டரி துரோகம் செய்து விட்டான் என்று தெரிந்து கொண்டதும் சரபோஜியின் கண்கள் ஆத்திரத்தால் தணல் ஜொலித்தன.

"தப்பியோடுவதற்குத் தயாராக இருங்கள்!" என்று முழங்கினான் சரபோஜி.

அந்தச் சமயத்தில் எதிர்பாராத ஒரு அதிசயம் நடந்தது. காரிலிருந்த காவல்வீரன் பண்டரியையும் ஒரு கொள்ளைக் காரனென்று நினைத்து தனது துப்பாக்கியால் இருமுறை சுட்டான். பண்டரி பிணமாகக் கீழே சாய்ந்தான்.

"அற்புதம்!" என்று கரகரத்த குரலில் மெதுவாகக்கூறிக் கொண்டான் சரபோஜி.

தங்கம் ஏற்றப்பட்டிருந்த அந்த லாரி மேலே சென்று பள்ளத்தாக்கில் இறங்கியது. பள்ளத்தாக்கு முழுவதும் இதற்குள் விஷவாயு வியாபித்து விட்டதால் கார் அங்கே இறங்கிய இரண்டொரு விநாடிகளிலேயே டிரைவரும், காவல் வீரனும் மூர்ச்சையாகி விட்டார்கள். காரின் முன் சக்கரங்கள் ஒரு குன்றின்மீது மோதி மேலே நகராமல் நின்று விட்டன.

எல்லாம் சரபோஜியின் எண்ணப்படியே நடந்துவிட்டது சுந்தரம் ஒரே தாவாகத் தாவி அந்த டிரைவர்ஆசனத்தில் அமர்ந்து அதைக் கிளப்பி பள்ளத்தாக்கை விட்டு நல்ல காற்றுள்ள இடத்தில் கொண்டுபோய் நிறுத்தினான்.

பிறகு அந்தக் காவல்வீரனையும் டிரைவரையும் ரஸ்தா வில் தூக்கிப் போட்டுவிட்டு தனுக்கு சுந்தரமும் ரங்கசாமியும் தங்கள் முகமூடியைக் கழற்றினார்கள். பிறகு தங்களிடமிருந்த டிரைவர் தொப்பியையும், காவல்வீரன் தொப்பியையும் முறையே இருவரும் அணிந்துக் கொண்டார்கள்.

தங்கம் ஏற்றப்பட்ட அந்தக் கார் கொஞ்சநேரத்தில் வேகமாக நகர்ந்தது.

சரபோஜி தனது பெரிய காருக்குச் சென்று அதில் ஏறி எதிர்த் திசைப்பக்கம் ஓட்டிக்கொண்டு சென்றான்-

★ ★ ★

# அத்தியாயம் 2

அன்றிரவு நன்றாக மழைபெய்து கொண்டிருந்தது. அம்மாதிரி மழை பெய்து கொண்டிருப்பதும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று நினைத்தான் ரங்கசாமி. அந்தக் கொட்டும் மழையில் சௌக்கார் பேட்டையிலிருந்த ஒரு சிறு ஓட்டலுக்குள் நுழைந்து மாடிப் படிக்கட்டுகளில் ஏறினான். அங்கே எந்த அறையில் தனுக்கு சுந்தரம் தங்கி இருக்கிறான் என்று அவனுக்குத் தெரியும்.

சுந்தரத்தின் அறைக் கதவைத் தட்டியதும் அவன் கதவைத் திறந்தான். அறைக்குள் அவனைத் தவிர வேறு யாருமில்லை,

''கடற்கரையில் அவனைப் பார்த்தான். நீ பத்திரிகைகளைப் படித்தாயா?'' என்று கேட்டான் தனுக்கு சுந்தரம்.
ரங்கசாமி இளித்தபடி ''அந்த ஆட்கள் நல்லகாலமாக சாகவில்லை'' என்றான்.

"உன்னுடைய கருணை ரொம்ப பாராட்டத் தக்கது!" என்று இகழ்ச்சியாகக் கூறிய தனுக்கு சுந்தரம், 'இதைப் படித்துப் பார்" என்று ஒரு தினசரி பத்திரிகையை அவன் முன்னால் வீசிப் போட்டான்.

**மயிர்க்கூச்செரியும் துணிகரக் கொள்ளை! கோடிக்கணக்குப் பெறுமானமுள்ள தங்கம் களவு! கொள்ளையில் ஒருவன் கொல்லப் பட்டான்! ஏறிவந்த லாரி மாய மறைவு! சென்னை—**

நேற்று அதிகாலை நடந்த ஒரு துணிகரக் கொள்ளையிலே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கம் கொள்ளையடிக்கப் பட்டது வழியிலே ஒரு பள்ளத்தாக்கான இடத்தில் விஷ வாயுவைப் பரவ விட்டு கொள்ளைக்காரர்கள், தங்கம் ஏற்றி வந்த லாரியை மடக்கி இருக்கிறார்கள். முதலில் ஒரு கொள்ளைக்காரன் மறைவிடத்திலிருந்து ஓடிவந்து லாரியை நோக்கி சுட்டிருக்கிறான். தங்கம் இருந்த லாரியை பாதுகாத்துச் சென்ற காவலாளி அந்தக் கொள்ளைக்காரனை சுட்டு வீழ்த்தி இருக்கிறான். சுட்டுத் தள்ளப்பட்ட கொள்ளைக்காரன் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வரப்பட்ட பிறகுதான் இறந்திருக்கிறான். அவன் எந்தவித மரணவாக்கு மூலமும் கொடுக்க வில்லை. ஏதோ ஒரு பெயரைக் கூறி இருக்கிறான். அந்தப் பெயருள்ள நபர்தான் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனாக இருப்பான் என்று நம்பப்படுகிறது.

இந்த வழக்கை இன்ஸ்பெக்டர்கள் கந்தப்பாவும், பரஞ்சோதியும் புலன் விசாரித்து வருகிறார்கள்.

அதன் கீழே அரசாங்கத்தின் செய்தி அறிவிப்பு ஒன்றும் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அதில் கொள்ளை எப்படி நடந்தது என்று விசாரிக்கப்பட்டிருந்தது.

"இந்த விவகாரம் ஒரு பெரிய பர பரப்பை ஏற்படுத்தி விட்டது!" என்று புன்னகையுடன் கூறிய தனுக்கு சுந்தரம், அந்தப் பத்திரிகையை வாங்கி மடித்து ஒரு மூலையில் தூக்கிப் போட்டான்.

COMICS PDF TIMES

"சரபோஜி விவகாரம் என்ன ஆயிற்று?" என்று பொறுமையில்லாமல் கேட்ட ரங்கசாமி பங்கு பிரித்துக் கொடுக்க அவன் ஒப்புக் கொண்டானு?'; என்று கேட்டான்.

தனுக்கு சுந்தரம் தனது தலையை ஒரு தினுசாக ஆட்டியபடி, "அவன் ரொம்ப சங்கடப் பட்டுப் போனுன் அதுவும் இயற்கைதான். ஆனுல் புத்தி தெளிவோடு இருக்கும் நேரத்தில் சரபோஜி மிக சாதுரியமாக நடந்துக் கொள்வான். அவன் இப்பொழுது சங்கடப்படுவதற்குக் காரணம் ஒன்றே ஒன்று தான் அதாவது அவன் சொன்ன இடத்தை விட்டு வேமெுரு இடத்தில் லாரியைக் கொண்டு போய் நிறுத்திவிட்டோம் என்றுதான் மனக்கஷ்டப் பட்டான். நான் ஒளித்து வைத்திருக்கும் இரகசிய இடத்தை தெரிந்து கொள்ள, தவியாய் தவித்தான். ஆனுல் அந்த இடம் அவனுக்குத் தெரியாமல் இருக்கும் வரையில்தான் நமக்கு வெற்றி!'' என்ருன்.

"என்னதான் இதன் முடிவு?" என்று சஞ்சலக் குரலில் கேட்டான் ரங்கசாமி.

"இன்றிரவு அந்த லாரியை வேறு இடத்திற்கு ஓட்டிச் செல்ல வேண்டும், நாம் வேமெுரு லாரியில் அந்ததங்கத்தை மாற்றி இருக்கிருேமென்று சரபோஜிக்குத் தெரியாது. அவன் முதலில் கூறிய இடத்தில் தங்கம் ஏற்றி வந்த லாரியைக் காலியாகக் கொண்டு போய் நாம் நிறுத்தி வைத்தோமல்லவா? அதை இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி இன்று மாலை கைப்பற்றிஞல் சரபோஜியின் யோசனைப்படி நாம் நடந்திருந்தால் இநதக் கொள்ளையே பயனில்லாமல் போயிருக்கும். நல்ல வேலையாக தங்கத்தை வேமெுரு லாரியில் மாற்றி இன்னெுரு இடத்தில் வைத்திருக்கிருேம."

ரங்கசாமி யோசனையோடு நெற்றியை சுளித்தபடி" அந்தக் கொள்ளைப் பொருளைத் தட்டிக் கொண்டு போக சரபோஜி நம்மைவிட மாட்டான். அவனைத்தான் உனக்குத் தெரியுமே சுந்தரம்;'' என்ருன்-

"அதையும் பார்க்கலாம்" என்று தன்னம்பிக்கை நிறைந்த புன்னகையோடு கூறிஞன் தனுக்கு சுந்தரம்.

கொஞ்ச நேரத்தில் இருவரும் அந்த ஓட்டலை விட்டுப் புறப்பட்டார்கள். சரபோஜிக்குத் தெரியாமல் தாங்கள் தங்கத்தை மாற்றிய லாரியை மறைத்து வைத்திருந்த இடத்திற்குச் சென்றார்கள்,

அந்த இடம் ஒரு குதிரை லாயத்தைப் போல காட்சியளித்தது. வெளிப்புறமிருந்த 'கேட்டை மெதுவாகத் தள்ளிக் கொண்டு சுந்தரமும் ரங்கச்சாமியும் உள்ளே நுழைந்ததும் எதிரே இருந்த மற்றொரு கதவை நோக்கி நடந்தார்கள். தளுக்கு சுந்தரம் தனது சட்டைப் பையில் கையை விட்டு ஒரு சாவியை எடுத்து அந்தக் கதவைத் திறந்தான்.

''உள்ளே வா!'' என்று கூறியபடி ஒரு அடி உள்ளே எடுத்து வைத்தான் தளுக்கு சுந்தரம்.

அந்த சமயத்தில் ஒரு கரம் அவன் கையை இறுகப் பிடித்தது. தளுக்கு சுந்தரம் தனது துப்பாக்கியை எடுப்பதற்காக வெகுவாக முரண்டினான்.

''வீணாகத் தகராறு செய்யாதே'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி, ''உன்னைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் தளுக்கு சுந்தரம்! உன்னுடைய தங்க லாரி என்ன ஆயிற்று? அது எங்கே?'' என்று கேட்டார்.

பிரமை தட்டிப் போன சுந்தரம், தனக்கு ஏற்பட்ட படபடப்பில் உஷார் தவறியவனாய் 'எனது தங்க லாரியா? என்று மூச்சு வாங்கக் கேட்டு விட்டு ''அதுஇங்கு இல்லையா?'' என்று தவித்தான்.

''ஒரு மணி நேரத்திற்கு முன்பே அது இங்கிருந்து மறைந்திருக்கிறது என்றுஇருட்டிலிருந்து கூறியது மற்றொருகுரல்,'' சொல்லு சுந்தரம், அதை நீ என்ன செய்தாய்?'' என்று முழங்கியது. அந்தக்குரல் இன்ஸ்பெக்டர் கந்தாப்பாவின் குரல்தான்.

தளுக்கு சுந்தரம் ஒன்றுமே சொல்லவில்லை. அப்பொழுது ரங்கசாமியின் கையில் விலங்கு மாட்டப்படும் சப்தமும், அவன் ஆத்திரமாக உளறும் சப்தமும், அவனுக்கு கேட்டன.

மறு வினாடி சுந்தரமும் சிறிது தூரத்திலிருந்த போலீஸ் லாரிக்குத் தள்ளி செல்லப்பட்டான்:

தங்களை மடையர்களாக்கி விட்டு சரபோஜி அந்தத் தங்க லாரியைத் தட்டிக் கொண்டு போய் விட்டான் என்று சுந்தரம் புரிந்து கொண்டான்.

★ ★ ★

# அத்தியாயம் 3

பிரேம்குமாரியின் வாழ்க்கையே இதுவரை பிரமைதட்டும் ஏற்றத் தாழ்வுகளோடு நடந்து வந்திருக்கிறது. தனது தந்தைக்கு செல்வக் கொழிப்புகளும், பொருளாதார வீழ்ச்சிகளும் திடீர் திடீரென மாறி மாறி வந்து கொண்டிருந்ததால் அவள் ஒரு சமயத்தில பிரபாதமான ஹோட்டல்களிலும் மற்றொரு சமயத்தில் மிகப் பரதையான ஹோட்டல்களிலும் தங்கி இருக்கவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது அம்மாதிரி மாறுதல்கள் அவள் வாழ்க்கையில் மிகப் பிரமிக்கத்தக்க வேகத்தில் நடந்து வந்திருக்கின்றன. அதனால் அவளுக்கு அது ஓரளவு பழக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். எந்த நேரத்திலும் தனக்கு எந்தவித மாறுதலும் ஏற்படக் கூடுமென்று அவள் எதிர்பார்த்து வந்தாள்.

அவளது தந்தையை அறிந்தவர்கள் அவரை கர்னல். என்று அழைத்து வந்தார்கள். இருந்தபோதிலும் பட்டாளத்தில் தனது வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றி தனது மகளிடம் ஒரு தடவை கூட பேசியது கிடையாது தனது விலாசம் அச்சிட்ட காகிதங்களிலும் மற்றவற்றிலும் அவர் கர்னல் என்ற பட்டத்தைச் சேர்த்துக் கொள்ளவில்லை

ஆனால் பட்டினப் பாக்கத்திலுள்ள ''மயான மாளிகை'' க்கு குடிவந்த பிறகுதான் ''கர்னல்'' பட்டத்தை அவர் தாராளமாகச் சேர்த்துக் கொண்டார். கர்னல் வெள்ளியப்பா தனது ''மயான மாளிகைக்கு பிரேமகுமாரியை அழைத்து வருவதற்கு முன்னால் அவள் ஒரு போர்டிங் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

முதல் தடவையாக மயானமாளிகையை பிரேமகுமாரி பார்த்தபோது, அந்தக் கட்டிடம் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. கம்பீரமான அரண்மனையைப்போல காட்சியளித்த அந்தக் கட்டடம், விஜயநகர சாம்ராஜ்ய நாகரீகத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. நாறபது ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பிரம்மாண்டமான இடத்திலே அந்த மாளிகை கட்டப்பட்டிருந்தது. கர்னல வெள்ளியப்பா அதை வாங்குவதற்கு முன்னால், ஏராளமான யாத்ரீகர்கள் அதை விஜய நகர சாம்ராஜ்ய புராதனச் சின்னங்களில் ஒன்றாகப்பாவித்து கூட்டங் கூட்டமாக வந்துப் பார்த்துவிட்டுப் போவது வழக்கம். ஆனால் அந்த மாளிகை விஜயநகரத்து அரச பரம்பரையினருக்குச் சொந்தமானது அல்ல. அது அந்தக் காலத்தில் ஒரு பெரிய மதஸ்தாபனத்தாரால் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. அதில் பாதாள அறைகளும், பாதாளத்திலே சித்தர்கள் திருக் கூட்டம் என்று பெயர் வழங்கி வந்ததாம் அந்த திருக்கூட்டத்தினர் பாதாள கோயிலுக்குச் செல்வதற்காக "சித்தர் வாசல்" என்று ஒரு பிரத்தியேக வழி கூட அந்த மயான மாளிகையில் இருந்ததாம். சித்தர்களுக்கு மயானம் (சுடுகாடு) போன்றவற்றில் அளவிறந்த மோகம் உண்டாதலால் அந்த மாளிகைக்கே, "மயானமாளிகை" என்று பெயர் வைத்தார்களாம். அங்கு என்னென்ன விசித்திரங்கள் இருக்கிறதென்று ஆவலில் தான் அதை வேடிக்கை பார்க்க ஏராளமான யாத்ரீகர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் கர்னல் வெள்ளியப்பா அந்தக் கட்டிடத்தை விலக்கு வாங்கிய பிறகு அங்கு யாரையுமே நெருங்க அனுமதிக்கவில்லை.

பிரேமகுமாரிக்கு பதினேரு வயது நடந்து கொண்டிருக்கும்போது தான் கர்னல் வெள்ளியப்பாவுக்குப் பெருத்த அதிருஷ்டம் அடித்தது. எதிர்பாராத விதத்திலே அந்த அதிருஷ்டம் அவர்மீது முரட்டுத் தனமாக வந்து பாய்ந்தது. அது எப்பொழுது வந்ததென்று பிரேமகுமாரியால் நிர்ணயம் செய்து பார்க்க முடியவில்லை. அவளுக்குப் புரிந்து கொண்ட

தெல்லாம் இதுதான். முதல் வாரத்தில் பரம ஏழை நிலையில் கடன்காரர்களால் கொத்திப் பிடுங்கப்பட்டுக் கொண்டிருந்த கர்னல் வெள்ளியப்பா. மறுவாரத்தில் மயானமாளிகைக்கு அதிபராகி பல்லாயிரக் கணக்கான ரூபாய்களுக்குச் சாமான்களைத்தருவிக்கும் முதலாளித்துவ நிலைமை அடைந்து விட்டார்.

மயானமாளிகையில் பிரேமகுமாரி நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்த காலத்தில் அவள் பருவமடைந்த கவர்ச்சி மங்கையாக மாறிவிட்டாள். அவளது உருவத்தில் தோய்ந்திருந்த எழில். பார்ப்பவர் உள்ளத்தை தூண்டில் போட்டு இழுத்தது.

கீழ்ப்பாக்கத்தில் ''கோவர்த்தனம்'' என்ற ஒரு ஹோட்டல் இருந்தது. அங்கு குமரேசன் என்ற இளைஞன் அடிக்கடி வந்து தங்குவான். ஊதாரித்தனமாகச் செலவு செய்து கொண்டு எந்தவித உருப்படியான வேலையும் இல்லாத நவநாகரீக வாலிபனுக்குக்காட்சியளித்த குமரேசன், தினசரி மாலை வேளைகளில் தனது தந்தையுடன் பிரேமகுமாரி அந்த ஹோட்டல் வழியாக உலாவப் போவதை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பான்.

சில சமயங்களில் பிரேமகுமாரியின் பேரெழிலைப் பற்றி அந்த ஹோட்டல் உரிமையாளரான ஹரிஹரனிடம் வானளாவப் புகழ்ந்து பேசுவான்.

அப்பொழுதெல்லாம் ஹரிஹரன் ஒரு வரண்ட புன்னகை பூப்பான். ''குமரேசன்! நீ மயான மாளிகையிலேயே போய் தங்கி இருக்கலாமே!''

''இல்லை ஹரிஹரன்! கர்னல் வெள்ளியப்பா தனது வீட்டின் ஒரு பகுதியில் சில ஆட்களை வாடகைக்குத் தங்கி இருக்க

அனுமதித்துப் பணம் வாங்கிக்கொண்டு சாப்பாடும் போட்டு வருகிறார் என்று எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் அவர் ரொம்ப சௌரவமான மனிதர்களையே அங்கு தங்க அனுமதிக்கிறார் என்று கேள்விப்பட்டேன். நான் ஒன்றும் அவ்வளவு கௌரவமானவன் அல்ல. என்னை அவர் சேர்த்துக்கொள்ள மாட்டார் அது இருக்கட்டும் குமரேசன்! இவ்வளவு வசதியுள்ள கர்னல் வெள்ளியப்பா, எதற்காகப் பணம் வாங்கிக் கொண்டு ஆட்களை அங்கு தங்க வைத்திருக்கிறார்? அப்படிப் பட்ட அவசியம் அவருக்கு என்ன இருக்கிறது?" என்று புரியாமல் கேட்டான்.

"உள்ளபடியே ஹரிஹரனுக்கு அது புரியாத புதிராகத் தான் இருந்தது" எனக்கும் அது புரியவில்லை குமரேசன்! வெள்ளியப்பாவுக்கு கொள்ளை கொள்ளையாகப் பணம் இருக்கிறது. ஒருக்கால் தனியாக இவ்வளவு பெரிய மாளிகையில் வசிக்க வேண்டியிருக்கிறதே என்று துணைக்காக அவர் இந்த ஏற்பாட்டைச் செய்து விட்டிருக்கலாம். மயானமாளிகைக்கு அவர் குடிவந்து பத்து ஆண்டுகளாகி விட்டன. இந்தப் பத்து ஆண்டுகளிலும் அவர் குறிப்பிட்ட சிலரை பணம் வாங்கிக்கொண்டு அங்கு தங்க வைத்துக்கொண்டு வருகிறார். இருந்தபோதிலும் அந்த ஆட்களெல்லாம் பொறுக்கி யெடுத்த உயர்தரமான ஆட்கள்தான்!"

"அதனால்தான் எனக்கு அங்கே இடம் கிடைக்காதென்று சொல்கிறேன்" என்று வேதனையோடு கூறிய குமரேசன், மறு விநாடி கட, கடவென்று விழுந்து விழுந்து சிரித்தான் மறு விநாடி மீண்டும் அவனது உணர்ச்சி பாவம் மாறியது. மிக அக்கறையான குரலில் 'இந்த பிரேமகுமாரி உள்ளபடியே ஒரு பேரழகிதான்!" என்றான்.

"சமீபத்தில்தான் அந்தப்பெண், கல்லூரியை விட்டு வந்திருக்கிறாள். இந்த வட்டாரத்திலேயே அவளைப்போல் ஒரு நல்ல பெண்ணைப் பார்க்க முடியாது" என்றான் ஹரிஹரன்

இந்த உரையாடல் நடந்த மறுவினாடி குமரேசன் கோவர்த்தனத்தை விட்டு கிளம்பிவிட்டான். எதற்காக அவன் கோவர்த்தனத்தில் வந்து தங்குகிறான் என்று யாருக்குமே தெரியாது.

மயானமாளிகையில் வாழ்க்கை ரொம்ப உற்சாகமாகக் கழிவதைக் கண்டு பிரேமகுமாரிக்கு அந்த இடத்தில் அபிமானம் பிறந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். மாதா மாதம் பணம் கொடுத்து சாப்பிட்டுக்கொண்டு அங்கே தங்கியிருந்த விருந்தினர்கள் எல்லோரும் ரொம்ப நல்லவர்களாக இருந்தார்கள். முதல் முதலாக மயான மாளிகைக்கு வந்த விருந்தினரும் நீண்டகாலமாக அங்கு தங்கியிருப்பவருமான சிற்றம்பலத்தை பிரேமகுமாரிக்கு நிரம்பப் பிடித்திருந்தது. சிற்றம்பலத்தின் தலைமுடி எல்லாம் நரைகண்டிருந்தது. அவர் பேசும்போது ரொம்ப நிதானமாகத்தான் பேசுவார். அவரிடம் நெருக்கமாகப் பழகி வந்தாள் பிரேமகுமாரி.

மயானமாளிகையும் அதைச் சுற்றியிருந்த பெருந்தோட்டமும் பிரேமகுமாரிக்கு ரொம்பவும்பிடித்திருந்தன. காலம் செல்லச்செல்ல தனது தந்தையிடம் ஏற்பட்டுவரும் மாறுதல்களையும் அவள் கவனித்துக்கொண்டு தான் வந்தாள். முன்பு இருந்ததைவிட அவர் இப்போது ரொம்பக் கிழமாகி விட்டார். அவர் முகமும் வெளுத்துக்கொண்டே வந்தது. சமீப காலத்தில் கர்னல் வெள்ளிபடபா புன்னகை பூத்ததே கிடையாது, அது மட்டுமல்லாமல் ஏதோ கிலி அடித்தவர் போல எந்த நேரத்திலும் ஒரு கலவரஉணர்ச்சிக்கு அடிமைப்பட்டு கிடந்தார் நள்ளிரவில் அவர் எழுந்து நிம்மதி இல்லாமல் உலாவிக் கொண்டிருப்பதை அவள் பார்த்திருக்கிறாள். ஒரு தடவை அவர் தன்னந்தனியே தனதுஅறையில் சுவற்றை நோக்கி ஏதோ ஆத்திரமாகப் பேசிக்கொண்டிருந்ததை பிரேமகுமாரி தனது கண்களாலேயே பார்த்தாள்

நாளாக ஆக, நிலைமையில் மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது. அந்தப் பழங்கால மாளிகை அவளையும் சிலசமயங்களில் கலவரமடையச் செய்தது. நள்ளிரவில் நன்றாகத் தூங்கும்போது ஏதோ ஒரு விசித்திர ஒலி கேட்டு, திடுக்கிட்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொள்வாள். அப்படி எழுந்து உட்கார்ந்ததும் அவளுக்கு அந்த ஒலி கேட்பது நின்றுவிடும். ஒரு தடவை அவள் கேட்ட விசித்திர சப்தம் அவளது ரத்தத்தையே உறைந்து போகச் செய்தது. அதன் பிறகு அம்மாதிரி சப்தம் அவளுக்குப் பல தடவை கேட்க ஆரம்பித்தது. வெகு தூரத்திலிருந்து வரும் சங்கநாதத்தைப போலவும், ஆலாட்சி மணியோசையைப் போலவும் அந்த சப்தம் ஒலித்தது.

விடிந்தபிறகு தங்கள் சமையற்காரனை ஏகாம்பரத்திடம் அந்த சப்தத்தைப்பற்றி விசாரித்தாள் ஆனால் அவன் தனக்கு அப்படிப்பட்ட சப்தம் கேட்கவில்லை என்று கூறிவிட்டான். மற்ற வேலைக்காரர்களிடமும் அதைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள் அவர்களிலும் பலர் உண்மையிலேயே கதிகலக்கமடைந்து வேலையைவிட்டு விலகிச்சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் இரண்டொருவரை அந்தரங்கமாக பிரேமகுமாரி விசாரிக்க ஆரம்பித்தாள். ஆனால் வெள்ளியப்பா தன் மகளை வேலைக்காரர்களோடு பேச வேண்டாமென்று தடுத்து விட்டார்.

இருந்த போதிலும் பிரேமகுமாரி, வேலையைவிட்டு சென்று கொண்டிருந்த ஒரு வேலைக்காரப் பெண்ணை விசாரித்தாள்.

அந்த வேலைக்காரப்பெண், கண்ணீரும் கம்பலையுமாக விஷயத்தைக் கூறினாள்.

"இந்த இடத்தில் என்னால் தங்கி இருக்க முடியாது அம்மா இரவு நேரங்களில் யாரோ வீறிட்டு அலறுவதைப்

போன்ற சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மாளிகையில் ஏதோ ஒரு பேய் ஆதிக்கம் செலுத்துகிறது" என்றுள்.

"என் கண்ணுல் பார்த்தேன் அம்மா!" என்று விடாப்பிடியாகக் கூறிய அந்த வேலைக்காரி, "நமது தோட்டத்தில் புல் வெளியிலே சந்திர வெளிச்சத்தில் ஒரு பிசாசு நடமாடியதை என் கண்களாலேயே பார்த்தேன்!" என்றுள்.

நாளாக ஆக பிரேமகுமாரிக்கு விஷயமெல்லாம் பிரத்தியட்சமாய் தெரிய ஆரம்பித்தது. அவளைப் பார்க்க வந்த ஒரு சிநேகிதி இரண்டு இரவுகள் அங்கு தங்கி இருந்ததன் பயனுக எல்லை மீறிய சஞ்சலத்துக்குட்பட்டு அரைப் பயித்தியமாக சென்னைக்குத் திரும்பினுள்.

இதைப்பற்றி பிரேமகுமாரி தனது தந்தையிடம் பேசிய போது கர்னல் வெள்ளியப்பா ஒரு அலட்சியப் புன்னகையோடு, "இதெல்லாம் மூட நம்பிக்கை! இந்த வேலைக்காரிகளோடு அதிகம் பழகிப் பழகி உனக்கும் அவர்களுடைய மனப் போக்கு வந்துவிட்டது பிரேமகுமாரி" என்றுர்.

இந்தபோதிலும் பிரேமகுமாரிக்கு பல விஷயங்கள் நாளாவட்டத்தில் தெளிவுபட ஆரம்பித்தன. அமானுஷ்ய ஒலிகளும் ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் சப்தங்களும் நள்ளிரவு நேரங்களில் அவள் காதில் விழ ஆரம்பித்தன கடைசியாக தனது கண்களால் அவள் கண்ட காட்சி...! அவளுக்கு தன்னைப்பற்றியே தனது மனேநிலையைப் பற்றியே விபரீத சந்தேகம் ஏற்படும் அளவில் அவளுக்கும் பல நள்ளிரவுத் தோற்றங்கள் தென்பட ஆரம்பித்தன.

ஒரு நாள் அவள் தனியாக சோலைப்பக்கத்தில் சென்று கொண்டிருந்தபொழுது ஒரு வாட்டசாட்டமான இளைஞனை

வழியில் பார்த்தான். அவன் அளவு கடந்த பய்பக்தியுடனும், கருணையுடனும் அவளைப் பார்த்து புன்னகை புரிந்தான் அது தான் குமரேசனுக்கும், பிரேமகுமாரிக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

★ ★ ★

# அத்தியாயம் 4

மத்திய சிறைச்சாலையை நோக்கிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி சென்று கொண்டிருந்த போது அவர் மனதிலே என்னென்னமோ போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தன. பத்து வருஷங்களுக்கு முன்னால் எந்தக் காரியத்தை சாதிக்க முயன்று அவர் படுதோல்வி அடைந்தாரோ, அந்த காரியத்தை இப்பொழுதாவது சாதிக்க முடியுமா என்ற நாட்டம் தான் பீம்சிங்கின் மனதிலே தலைதூக்கி நின்றது பத்து ஆண்டு காலமாக அங்கு சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கும் ரங்கசாமியையும், தனுக்கு சுந்தரத்தையும் அன்றைய தினம் விடுதலை செய்யப்போகிறார்கள். ஆதலால், அவர்களை இந்தநேரத்திலாவது வசப்படுத்தி கொள்ளவேண்டிய தங்கம் எங்கே இருக்கிறதென்று தெரிந்து கொள்ளத் தவித்தார் பரஞ்சோதி.

சிறையதிகாரியிடம் அனுமதி பெற்று முதலில் ரங்கசாமியை சந்தித்தார்.

பீம்சிங்கைக் கண்டதும் அலட்சியமாக தலையாட்டினான் ரங்கசாமி அவனுக்கு பரஞ்சோதியிடம் ஆத்திரம் இருந்த தென்று சொல்ல முடியாது

விணு க ' ங்கள் நேரத்தை விரயமாக்குகிறீர்கள் இன்ஸ் பெக்டர்!" என்று முதலில் சாந்தமாக ஆரம்பித்த ரங்க சாமி திடீரென்று வெறிகொண்டவனைப்போல், "உங்களிடம் நான் சொல்வதற்கு எதுவுமில்லை. முதலில் சரரோஜியைப் பிடியுங்கள்—அவன் உங்களுக்கு எல்லாம் சொல்வான்! ஆனால் எனனுடைய கையில் அவன் சிக்குவதற்கு முன்னால் அவனை பிடித்து விடுங்கள் இல்லாவிட்டால்—என் கை அவன் முதலில் சிக்கினால் அவன் பேசாத நிலையை அடைந்து விடு வான் என்று தன் பற்களை நற நறவென்று கடித்தான்

"அவனைப் பிடிக்கத் தான் போகிறோம்! ரங்கசாமி. என்று ஆதரவாகக் கூறிய பரஞ்சோதி, "நாங்கள் அவனைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறோம்!" என்றார்.

"நீங்கள் தங்கத்தைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று சீறிய ரங்கசாமி, அதுதான் உங்களுக்கு வேண்டும்! அது கிடைத்தால் உங்களுக்கு வீர விருதுகளும் கிடைத்து விடும்!" என்று கூறிவிட்டு, வெறி பிடித்தவன் போல் கட கடவென சிரித்தவனாய் "தனக்கு சுந்தரத்திடம் மூன்று பாரப்பதுதானே!—ஒருக்கால் அவன் உங்கள் வலையில் சிக்கி பங்கு வாங்கிக் கொள்ளத் தயாராகயிருப்பான்!" என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

அந்த சமயத்தில் இரண்டு சிறை வார்டர்கள் தனுக்கு சுந்தரத்தை அங்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள் பத்து வருட சிறை வாசம், தனுக்கு சுந்தரத்திடம் எந்த மாறுதலை யும் ஏற்படுத்தி விடவில்லை எப்பொழுதும் போல் அவன் கல்லைப் போல இறுகி இருந்தது. இருந்தபோதிலும் அவ னது பேச்சில் உள்ள தனுக்கு மட்டும் அப்படியே மாறாமல் இருந்தது.

"ஓ, இன்ஸ்பெக்டரா?" என்று குழைவாக ஆரம்பித்த தனுக்கு சுந்தரம். "எங்களுடைய இராஜா மாளிகையில்

எங்களைச் சந்திக்க வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!'' என்று இடக்காகக் கூறினான். பிறகு அவனது பார்வை ரங்கசாமி யின் பக்கம் திருமபியது பரம கீழ்படிதலுள்ள ஊழியனைப் போல ரங்கசாமிக்கு தலை வணங்கி, வணக்கம் செலுத்தினான்.

மீண்டும் தனுக்கு சுந்தரத்தின் பார்வை பரஞ்சோதி யின் பக்கம் திரும்பியது!'' இன்ஸ்பெக்டர்! உடனே திரும்பி விடப் போகிறீர்களா, அல்லது எங்களுடனேயே தங்கி இருக்கப் போகிறீர்களா?''

அந்த அவமதிப்பை ஒரு புன்னகையோடு ஏற்றுக் கொண் டார் பரஞ்சோதி.

''வித்தியாசமாக நினைக்கக்கூடாது இன்ஸ்பெக்டர்!'' என்று கூறிய தனுக்கு சுந்தரம்,'' சில சமயங்களில் போலீ ஸாரும் தவறி விடுகிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் னால் ஒரு மாஜி இன்ஸ்பெக்டர் எங்களோடு இங்கு தங்கி யிருந்தார் என்றான்.

''நான் எதற்காக வந்திருக்கிறேன் என்று உனக்கே தெரியும்'' என்றார் பரஞ்சோதி.

தனுக்கு சுந்தரம் ஒன்றும் தெரியாதவன் போல் முதலில் தலையாட்டினான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல அளவுகடந்த வியப்படைந்தவன் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டான். பிறகு வேதனையோடு தன் தலையை ஆட்டிக்கொண்டான்.

''அடடா; இன்ஸ்பெக்டர்! காணாமற் போன தங்கத் தைப்பற்றி என் நண்பனைத் தொந்தரவு செய்ய வந்திருக் கிறீர்களா?—ஆம் அதற்குத்தான் வந்திருக்கிறீர்கள்? ஆண் டவனே என்ன துரதிருஷ்டம்! கொள்ளைப் பொருள் எங்கே மறைத்து வைக்கப் பட்டிருக்கிறதென தெரிந்து

கொள்ள விரும்புகிறீர்களா? உங்களுக்கு சொல்லக்கூடிய நிலையில் என் நண்பன் ரங்கசாமி இருக்கக்கூடாதா என்று தவிக்கிறேன். என்னுடைய பழைய நண்பனான சரபோஜி யாவது இருக்கக் கூடாதா என்று தவிக்கிறேன்!" என்று பரந்த புன்னகையுடன் கூறினான்.

"எனக்கு ஒன்றும் அதைப் பற்றி தெரியாது!" என்று கூச்சலிட்ட ரங்கசாமி," நான் போகலாமல்லவா?" என்று கத்தினான்.

தனுக்கு சுந்தரம் அமர்த்தலாக அவனை நோக்கி தனது கையை ஆட்டிவிட்டு "நமது நண்பா இன்ஸ்பெக்டர் பரஞ் சோதியிடம் பொறுமையாக நடந்து கொள்!" என்றான்.

ரங்கசாமி அளவு கடந்த ஆத்திரத்துடன் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதியின் பக்கம் திரும்பி, "உங்களுடைய கேள்விகள் எதற்கும் நான் பதில் சொல்லப் போவதில்லை! உங்கள் இஷ்டம் போல் நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்! உங்களால் சரபோஜியை கண்டுபிடிக்க முடியாவிட்டால் நான் அவனைக் கண்டுபிடிக்கத்தான் போகிறேன்! என்றைய தினம் நான் அவனை கண்டுபிடிக்கிறேனோ அன்றைய தினம் அவன் எல்லாவற்றையும் புரிந்து கொள்வான். இம்மாதிரி சரபோஜியை கண்டுபிடிக்க, இந்த தனுக்கு சுந்தரத்தின் உதவியை நான் நாடி நிற்கப் போவதில்லை. இந்த பத்து வருஷமாக இவன் முகத்தில் விழித்து விழித்து எனக்கு அலுத்துப் போய்விட்டது! நான் தன்னந்தனியனாகவே வேலை செய்யப் போகிறேன்! என்னைக் காட்டிக்கொடுத்தவனை பழிவாங்காமல் நான் விடப்போவதில்லை" என்று கத்தினான்,

"உன்னால் அவனைக் கண்டுபிடிக்க முடியும் என்று நினைக்கிறாயா—உண்மையிலேயே நினைக்கிறாயா..?" என்று அவசரமாக்க்

கேட்டப் பரஞ்சோதி, "அவன் எங்கே இருக்கிறான் என்று உனக்குத் தெரியுமா?" என்று தவித்தார்.

''நான்விடுதலை பெற்று வெளியே சென்றதும் நிச்சயம் அவனைக்கண்டு பிடித்து விடுவேன்!'' என்று பெருமிதத்துடன் கூறினான் ரங்கசாமி.

''பைத்தியக்காரன்'' என்று இகழ்ச்சியாகக் கூறிய பரஞ்சோதி, சென்ற பத்து வருஷங்களாக தேடிக்கொண்டிருக்கும் போலீஸாருக்கே அவன் அகப்படவில்லை!'' என்றார்.

''எனைத் தேடுகிறீர்கள்?'' என்று இகழ்ச்சியாகக் கேட்ட ரங்கசாமி ''எந்த அடையாளத்தை வைத்து தேடுகிறீர்கள்? என்று கேட்டுவிட்டு தனுக்கு சுந்தரத்தின எச்சரிக்கை பார்வையும் லட்சியம் செய்யாமல் கடகடவென சிரித்துவிட்டு ''நீங்கள் தேடும் நபர் ஒரு பெரிய சூழ்ச்சிக்காரனாகவும் அறிவுத்திறன் படைத்தவனாகவும் இருப்பானென்று எதிர்பார்க்கிறீர்கள் அதுதான தவறு! அவன் பைத்திய வியாதி பிடித்தவன்! உங்களுக்கு அது தெரியாது. தனுக்குசுந்தரத்திற்கு அது தெரியும். பத்து வருஷங்களுக்கு முன்பு சரபோஜிக்கு பைத்தியம் பிடித்திருந்தது. இடபோது அவன் எப்படி இருப்பானென்று ஆண்டவனுக்குத்தான் தெரியும்! பைத்தியங்களுக்குள்ள நயவஞ்சக குணம் சாபோஜியிடம் அப்படியே நிறைந்திருந்தது. தனுக்கு சுந்தாத்தையே கேட்டுப் பாருங்களேன்!'' என்றான்.

உள்ளபடியே இந்த விஷயம் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி கேள்விப்பட்டதாக இருந்தது. தனுக்குசுந்தாத்தின் முகத்தை திரும்பிப்பார்த்தார் பரஞ்சோதி ரங்கசாமி சொல்வது உண்மைதானென்று தனுக்குசுந்தரம் தலை ஆட்டினான்.

''சாபோஜி மகாதந்திரஞ்சகன் அந்த நயவஞ்சக குணம் பைத்திய வியாதியால்தான் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது

நாங்கள் இங்கு சிறையில் இருந்தாலும் எங்களுக்கும் தகவல் வந்துகொண்டு தானிருக்கிறது இன்ஸ்பெக்டர் சில வருஷங்களுக்கு முன்னால் சரபோஜியைப் பிடிப்பதற்கு மூன்று போலீஸ் அதிகாரிகள் புறப்பட்டு சென்றதாகவும் அவர்கள் போனஇடம் தெரியாமல் மாயமாய் மறைந்ததாகவும் கேள்விப்பட்டேன்! அப்படி மாயமாய் மறைந்தவர்கள் பாண்டிச்சேரியில் இருந்தபடி, தங்கள் பதவியை ராஜிநாமா செய்து கடிதங்கள் அனுப்பி இருந்ததாகவும் ஒரு வதந்தி வந்தது ஆனால் ஒரு விஷயம் உங்களுக்கு தெரியாது இன்ஸ்பெக்டர் சரபோஜி யாருடைய கையெழுத்தையும் மிக அற்புதமாக காப்பியடித்து எழுதக்கூடியவன. சொல்லப் போனால் அந்த மூன்று அதிகாரிகளும் சென்னையை விட்டு எங்குமே அடியெடுத்து வைக்கவில்லை'' என்று நிறுத்தினன் தனுக்குசுந்தரம்

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி முகம் வெளுத்தது. தொடர்ந்து பேசினன் தனுக்குசுந்தரம். அவர்கள் சென்னையை விட்டு வெளியே செல்லவில்லை. சரபோஜியைப் பிடிப்பதற்காக அவர்கள் தேடி அலைந்து கொண்டிருந்தபோது சரபோஜி அவர்களை தேடி அலைந்து முதலில் பிடித்துவிட்டான்.

அப்படியானல் அவர்கள் இறந்து விட்டார்கள் என்று சொல்கிருய்?'' என்று கேட்டார் பரஞ்சோதி.

''கொலையுண்டார்களென்று சொல்லுகிறேன்'' என்று தன் தோளை குலுக்கியபடி கூறிய தனுக்குசுந்தரம் தினசரி இரண்டுமணி நேரம் அவனை பைத்தியவியாதி ஆட்கொண்டு விடுகிறது. மற்ற நேரங்களில் அவன் சுவாதீனமுள்ள மனிதனுகவே இருக்கிருன் அவனைப் பிடித்து வரச்சென்ற போலீஸ் அதிகாரிகள் அவனுக்கு பைத்திய நோய் ஏற்பட்டிருந்த சமயத்தில் அவனை நெருங்கி இருப்பார்கள்'' என்ருன்.

''அவனை நான் சந்திக்கும் பொழுது நீ சாக போகிருய் என்று ஆத்திரத்தோடி இடைமறித்த தனுக்குசுந்தரம்அவனை

நான் சந்திக்கும்பொழுது" என்று நிறுத்தினான். இதுவரை சாந்தமாக இருந்த அவனது முகம் பயங்கர விகாரமடைந்தது அவன் கண்களிலே கொலைவெறி தாண்டவமாடியது.

"அவனை எங்கே நீ சந்திக்கப்போகிறாய்?" என்று இகழ்ச்சியாகக் கேட்டார் பரஞ்சோதி

"எங்கே சந்திப்பதென்று எனக்குத் தெரியும்" என்று ஆணவத்தோடு கூறினார் தனுக்குசுந்தரம்

உள்ளபடியே இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி அந்த விஜயம் பயனில்லாத விஜயமாகவே போய்விட்டது ரங்கசாமியிடமும். தனுக்குசுந்தரத்திடம் தனக்கு எந்தவித தகவலும் கிடைக்க முடியாதென்று புரிந்து கொண்டார். அவருக்கு புதியதாகக் கிடைத்த ஒரே தகவல் இந்த சரபோஜி அனுதினமும் இரண்டுமணி நேரம் பைத்தியவியாதிக்கு அடிமையாகிறான் என்பதுதான்!

# அத்தியாயம் 5

"மயானமாளிகையில் அன்றைய தினம் வழக்கம்போல விருந்தினர்களெல்லாம் ஒரு பக்கத்தில் அமர்ந்து தங்கள் பொழுது போக்கில் ஈடுபட்டிருந்தனர்.

சாதாரணமாக மாதத்தில் மூன்று தினங்கள் சிற்றம்பலம் தனது வேலையைக் கவனிக்க சென்னைக்குச் சென்று விடுவார். அன்றையதினம் அவர் போகவேண்டியநாள் தானென்றாலும் அவர் எதனாலோ போகவில்லை. அங்கு தங்கி இருந்த மற்றொரு விருந்தினளான ஸ்ரீமதி மைனாவதி தனது முகத்துக்கு பவுடர் போட்டுக் கொண்டிருந்தாள். அவளது குமாரத்தியான திலகவதி ஏதோ ஒரு அகராதியை வைத்துக்கொண்டு விடுகதை புனைவதற்காகப் போராடிக் கொண்டிருந்தாள்.

சிற்றம்பலம் ஒரு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தபடி ஒரு தினசரிபத்திரிகையை பிரித்து வைத்துக்கொண்டு தூங்கி விழுந்து கொண்டிருந்தார். மொத்தத்தில் அந்த இடம் நிசப் தமாக இருந்தது.

அவர்கள் இருந்த இடத்திற்கு அருகாமையில் ஒரு பெரிய கம்பி இல்லா ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னல் வழியாக மயான மாளிகையின் பிரமாண்டமான தோட்டக் காட்சி யளித்தது. பலவித விருட்சங்கள் நிறைந்த அந்த தோட்டத் திலே, ஏராளமான பறவை இனங்கள் வசித்து வந்தன. சதாசர்வகாலமும் அவை கூச்சலிட்டுக் கொண்டே இருப் பது வழக்கம் அன்றைய தினம் அந்த பறவைகள் போட்ட கூச்சல் சிற்றம்பலம் காதில் விழவே இல்லை. ஆனல் பிரேம குமாரி மாத்திரம் பொறுமை இழந்தவளாய் அடிக்கடிதோட் டத்துப் பக்கம் எரிச்சலோடு பார்த்தாள்.

"தூங்குகிறீர்களா?" என்று சிற்றம்பலத்தைப் பார்த்த படி கேட்ட திலகவதி, தன் கையிலிருந்த அகராதியை அப் பால் வைத்தாள். பறவைகளின் கூச்சலுக்கிடையே பாட் டெழுதுவது நடக்க முடியாத காரியமென்று அவள் தீர் மானித்து விட்டாள்.

சிற்றலம்பலம் மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

"கர்னல் வெள்ளியப்பா எதற்காக இந்த உணவு விடுதியை நடத்துகிருர்?" என்று பல்லாயிரத்தொரு தடவையாய் கேட் டாள் திலகவதி.

"அது அவர் பொழுது போக்கு!" என்று சிரித்தபடி கூறிய சிற்றம்பலம், "நான்தான் முதன்முதல் இந்த இடத் திற்கு வந்து சேர்ந்தேன். ஆனல், அன்று முதல் இன்று வரை இதை என் சொந்த வீடாகவே கருதுகிறேன்" என்ருர்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது—சொல்லட்டுமா?" என்று ஒயிலாகக் கேட்டாள் திலகவதி.

"தாராளமாய் சொல்!" என்று புன்னகையுடன் கூறினார் சிற்றம்பலம்.

"பிறவியிலேயே நான் ஒரு கற்பனைவாதி என்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்த திலகவதி, "நான் பார்க்கும் ஒவ்வொரு விஷயத்திலும் மர்மம் படர்ந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. உங்களைப் பார்த்தால்கூட ஒரு மர்ம மனிதராகவே எனக்குப் படுகிறது" என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

அதைக் கேட்டதும் கதிகலங்கிப்போனவரைப் போல சிற்றம்பலம் தனது முகத் தோற்றத்தை வைத்துக் கொண்டதைக் கவனித்த திலகவதி, "நான் கெட்ட அர்த்தத்தில் அப்படி சொல்லவில்லை!" என்றாள்.

அதைக் கேட்டதும் மன நிம்மதி அடைந்தவரைப் போல் சிற்றம்பலம் தன் முகத்தை வைத்துக் கொண்டார்.

"கர்னல் வெள்ளிப்பா நிச்சயமாக ஒரு மர்ம மனிதர் தான். இப்பொழுது நான் சொல்வது பரிபூரணமான கெட்ட அர்த்தத்தில் தான் சொல்லுகிறேன்!" என்று தீர்க்கமாகக் கூறினாள் திலகவதி.

சிற்றம்பலம் விநாடி நேரம் யோசித்தார்?" எனக்கு என்னவோ அப்படி தோன்றவில்லை என்று நிதானமாக கூறினார்.

ஆனாலும் அவர் அபபடித் தான்!" என்று விடாப்பிடியாகக்கூறிய திலகவதி "எதற்காக மனிதக் கூட்டத்தை விட்டு இந்த மயான மாளிகையை அவர் விலைக்கு வாங்க

வேண்டும்? எதற்காக அவர் இதை ஹோட்டல் போல் நடத்த வேண்டும்?'' என்று கேட்டான்.

''பணம் சம்பாதிப்பதற்காக இருக்கலாம்!''

திலகவதி பலமாக தலையை யாட்டிவிட்டு '':அவர்ஒன்றும் பணம் சம்பாதிக்கவில்லை!'' அம்மா சொல்வதைக்கேட்டால் அவர் ஏராளமாக நஷ்டமடைந்து வருவதாகவே தோன்று கிறது. மயான மாளிகை ரொம்ப கவர்ச்சிகரமான இடம் தான். ஆனால் இந்த இடத்திற்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டி ருக்கிறது. இந்த மாளிகையில் பேய் இருக்கிறதென்று உங்க ளுக்கே தெரியும்.—என்ன! உங்களுக்குத் தெரியாதா?''என்று மடக்கினாள்.

அதைக் கேட்டதும் சிற்றம்பலம் சிரித்தார். மயான மாளிகை முதல் விருந்தாளியான சிற்றம்பலம் இந்தக் கதைகளையெல்லாம் முன்பே கேள்விப்பட்டிருக்கிறார்:

தொடர்ந்து பேசினாள் திலகவதி, ''நான் எவ்வளவோ விஷயங்களை கேள்விப்பட்டிருக்கிறேன்—எவ்வளவோ விஷ யங்களை கண்ணால் பார்த்திருக்கிறேன். இந்த மயானமாளி கையில் ஏதோ பயங்கரக் குற்றம் நடந்திருக்கிறதென்று அம்மா சொல்கிறாள். நிச்சயம் அது நடந்துதான் இருக்கும்'' என்று கூறும் பொழுதே அவளது குரலில் தீவிரம் தொனித்தது.

உள்ளபடியே திலகவதியின் தாயாரான மைனாவதி பொழுது புலர்ந்தால் பயங்கர மர்மக் கதைகளைத்தான் படித்துக்கொண்டிருப்பாள்.

''அம்மாவுக்கு நல்ல படுசொல்லை என்றால் ரொம்ப பிடிக்கும்!'' என்று கூறிய திலகவதி ''அதனால்தான் போன வருடம் நாங்கள் குற்றாலம் போவதாக இருந்த பயணம்

தடைப்பட்டது அந்தச் சமயத்தில் இங்கே "சைக்கிள் ராணி படுகொலை வழக்கு" மும்முரமாக நடந்து கொண்டிருந்தது!—அதிருக்கட்டும் கர்னல் வெள்ளியப்பா எப்பொழுதாவது கொலை செய்திருப்பாரென்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

"என்ன பயங்கரமான கேள்வி" என்று பதறினார் சிற்றம்பலம்.

"பிறகு எதனால் அவர் சதா கதிகலக்கத்தோடு இருக்கிறார்" என்று விடாமல் கேட்ட திலகவதி "எதை நினைத்து அவர் திகில் பட்டுக்கொண்டிருக்கிறார்? புதிதாக அங்கே தங்க வருபவர்களை ஏன் அனுமதிக்க மறுக்கிறார்? நேற்று இங்கே இடம் கேட்டு வந்த ஒரு இளைஞரை திருப்பி அனுப்பி விட்டார்" என்றாள்.

"நாளையதினம் ஒரு புது விருந்தினர் வருகிறார்" என்று பத்திரிகையை புரட்டியபடி கூறினார் சிற்றம்பலம்.

"அந்த சாமியாரா?" என்று இகழ்ச்சியாகக் கூறிய திலகவதி ஆண்டிகளிடம் காசு இருக்காதென்று எல்லோருக்கும் தெரியும்" என்றாள்.

சிற்றம்பலம் புன்னகை பூத்துக்கொண்டார். திலகவதி தொடர்ந்து பேசினாள். இந்த இடத்தில் நிறைய வருமானம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் வெள்ளியப்பா அப்படி செய்ய மாட்டார். இன்னமும் சொல்லுகிறேன். இந்த வெள்ளியப்பா இந்த மாளிகையை விலைக்கு வாங்குவதற்கு முன்பே அம்மாவுக்கு அவரைத் தெரியும். அப்போது ஏதோ பண விஷயமாக வெள்ளியப்பா பெருந்தொல்லையில் சிக்கிக்கொண்டிருந்தாராம்—அது என்னவென்று அம்மாவுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது

வெள்ளியப்பாவிடம் கொஞ்சம் கூட பணம் இடையாது. அப்படி இருந்தால் எப்படி இந்த மாளிகையை வாங்கினார்?" என்று மடக்கினாள்.

சிற்றம்பலத்தின் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்தது. "நான் கேள்விப்பட்டதால் சொல்லுகிறேன்—இறந்துபோன உறவினர் ஒருவரின் பெருஞ்சொத்து வாரிசுக்காரர் என்ற முறையில் வெள்ளியப்பாவுக்கு கிடைத்திருக்கிறது!" என்றார்.

அதைக் கேட்டதும் திலகவதியின் முகத்தில் ஏமாற்றம் தாண்டவமாடியது. அந்தச் சமயத்தில் அவளுடைய தாயார் ங்கு வந்ததால் திலகவதி மேலே எதுவும் பேச முடியாமல் றுத்திக்கொண்டாள்.

உள்ளே நுழையும் பொழுதே மைனாவதி அளவுகடந்த படபடப்புடன் காணப்பட்டாள். நேராக சிற்றம்பலம் இருந்த இடத்தை நெருங்கினாள்.

"நேற்றிரவு உங்களுக்கு ஏதாவது கூச்சல் கேட்டதா?" என்று திடுதிப்பென்று கேட்டாள் மைனாவதி.

"எனது பக்கத்து அறையிலிருந்து யாரோ பிசாசுபோல குறைவிட்டுக் கொண்டிருந்தார்கள்—" என்று ஆரம்பித்தார் சிற்றம்பலம்?

"பக்கத்தறையில் படுத்திருந்தது நான்தான்" என்று கடுகடுப்புடன் கூறிய மைனாவதி "ஏதோ வீறிட்டு அலறிய சப்தம் உங்களுக்குக் கேட்டதா?" என்று மீண்டும் கேட்டாள்.

"வீறிட்டு அலறிய சப்தமா?" என கதிகலங்கிப் போய் கேட்ட சிற்றம்பலம் "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று விளங்காமல் கேட்டார்.

"நேற்றிரவு அந்த பயங்கரமான சங்கநாதமும் ஆலாட்சி மணியோசையும் எனக்கு கேட்டன" என்றாள் மைனாவதி.

சிற்றம்பலம் ஒரு பெருமூச்சுவிட்டுக் கொண்டார். "அதிர்ஷ்டவசமாக எனக்கு அவ்வளவு தெளிவாக காது கேட்கவில்லை சங்கநாதங்களோ அலறல்களோ இதுவரை காதில் விழுந்ததே இல்லை. சாப்பாட்டிற்குக் கூப்பிட்டார்களானால் அது மட்டும் கணீரென்று என் காதில் விழுகிறது.

"இந்த இடத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது" என்று தன் மகனைவிட அதிதீவிரமாகக் கூறிய மைனாவதி "நான் இந்த இடத்திற்கு வந்த முதல் நாளே கண்டுபிடித்து விட்டேன். ஆரம்பத்தில் இங்கு ஒரு வாரம் தங்கவேண்டுமென்ற உத்தேசத்தில்தான் வந்தேன் ஆனால் இப்பொழுதோ இந்த மர்மம் தீரும் வரையில் இந்த இடத்தைவிட்டு அசைவதில்லை என்று முடிவுகட்டி இருக்கிறேன்" என்றாள்.

சிற்றம்பலம் ஒரு புன்னகைப் பூத்தார். "அப்படியானால் இந்த மயானமாளிகை இங்கு இருக்கும் வரையில் நீயும் இங்கேயேதான் இருப்பாய்"

மைனாவதி படபடப்போடு பேச ஆரம்பித்தாள் 'இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் எனக்கு வேறொரு சம்பவத்தை நினைவு படுத்துகின்றன. செம்பியத்தைச் சேர்ந்த சிங்காரவேல் என்பவனுக்கு பத்தொன்பது, இருபத்திரண்டு, இருபத்தி நான்கு ஆகிய வயதுகளில் மூன்று மருமகள்கள் இருந்தார்கள். அவர்கள் மூவரையும் அந்த சிங்காரவேல் கழுத்தை அறுத்து கொலை செய்து தனது வீட்டிற்குள்ளேயே புதைத்து புதைத்த இடத்திற்கு சிமெண்டும் பூசி விட்டான். கடைசியாக அந்தக் குற்றம் கண்டு பிடிக்கப் பட்டு சிங்காரவேலுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. தூக்கு தண்டனை விதிக்

கும்போது அவளை மூன்று பேர் தாங்கிப் பிடிக்க வேண்டி வந்தது!......''

பயங்கரமான அந்த வர்ணனையை கேட்பதிலிருந்து தப்பியோடுவதற்காக சிற்றம்பலம் அவசரமாக தனது ஆசனத்தைவிட்டு எழுந்தார் அந்தச் சமயத்தில் கர்னல் வெள்ளியப்பாவே அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

கர்னல் வெள்ளியப்பாவுக்கு ஐம்பத்து ஐந்து வயதிருக்கலாம். பார்வைக்கு சிறிது கிலியடித்தவர் போல் காணப்பட்டார். தன்னை மறந்து இயந்திரம் போலவே அவர் ஒவ்வொரு வேலையும் செய்து வந்தார். தனது ஆடைகளைப் பற்றிகூட அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அலட்சிய சுபாவம் நாளுக்கு நாள் அதிகமாக அவரிடம் தோன்றி வருவதை சிற்றம்பலம் கவனித்து வந்தார்.

கர்னல் வெள்ளியப்பா உபசாரமாக தனது விருந்தினர்களைப் பார்த்து, ''எல்லா சௌகரியங்களும் ஒழுங்காக நடந்து வருகின்றனவா?'' என்று கேட்டார்.

''நடந்து வருகின்றன'' என்று புன்னகையுடன் கூறினார். சிற்றம்பலம் இனிமேலாவது மைனவதி தனது பேச்சை வேறு வழியில் திருப்புவாள் என்று சிற்றம்பலம் எதிர்பார்த்தார். ஆனால் அது ஏமாற்றமாக முடிந்தது!

''கர்னல்! நேற்றிரவு உங்கள் காதில் ஏதாவது விழுந்ததா?'' என்று ஆரம்பித்தாள் மைனவதி.

''காதில் ஏதாவது விழுந்ததா?'' என்று நெற்றியை சுருக்கியபடி திருப்பிக்கேட்ட வெள்ளியப்பா, காதில் விழுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று மடக்கினார்.

மைனாவதி வரிசைக் கிரமமாகக் கூற ஆரம்பித்தாள். "முதலாவது அந்த சங்க நாதமும், ஆராட்சி மணியோசையும் இரண்டாவது மகாபயங்கரமான—ரத்தத்தை உறைந்து போகச் செய்யும்—அலறல் சப்தம்; அந்த சப்தம் சித்தர் சமாதிப் பக்கமிருந்து வந்தது" என்று நிறுத்தினாள்.

கர்னல் வெள்ளியப்பா தனது தலையை ஆட்டிவிட்டு, "என் காதில் எதுவும் விழவில்லை நான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்" என்று மெதுவான குரலில் கூறினார்.

இதுவரை அவர்கள் உரையாடலை சுவாரஸ்யமாக கவனித்துக் கொண்டிருந்த திலகவதி சட்டென்று குறுக்கிட்டு, ஏன் புளுகுகிறீர்கள்? எனக்கும் அம்மாவுக்கும் அந்த கூச்சல் கேட்ட வெகு நேரத்திற்கு பிறகுகூட உங்கள் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. என் அறை ஜன்னல் வழியாகப் பார்த்தால உங்கள் அறை நன்றாகத் தெரியும்" என்றாள்.

கர்னல் வெள்ளியப்பா அவளை சற்று கடுப்புடன் பார்த்தபடி, "அப்படியா? நான் அறையின் விளக்கை எரிய விட்டுவிட்டே தூங்கிக் கொண்டிருந்தேன்!" என்று கூறிவிட்டு அவசரமாக. யாராவது பிரேம குமாரியை பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

சிற்றம்பலம் ஜன்னல் வழியாக தோட்டத்தை சுட்டிக் காட்டியபடி "அரைமணி நேரத்திற்கு முன்னால் அவளை அங்கு பார்த்தேன்" என்றார்,

கொஞ்சநேரம் வரை அங்கு தயங்கியபடி நின்றுகொண்டிருந்த கர்னல் மேலே ஒரு வார்த்தைக்கூட பேசாமல் சட்டென்று தோட்டத்துப் பக்கம் வெளியேறினார்.

கொஞ்ச நேரம் வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. தோட்டத்திலே காலல் வெள்ளியப்பா வேகமாக நடந்து செல்வது ஜன்னல் வழியாக அவர்களுக்குத் தெரிந்தது.

வைஜயந்திதான் முதலில் பேச ஆரம்பித்தாள், "இந்த இடத்தில் நிச்சயமாக எல்லவோ மர்மம் இருக்கிறது? வெள்ளியப்பாவுக்கு பைத்தியம் என்று நினைக்கிறேன்......நேற்று காலை இங்கு வந்த இளைஞனை நீங்கள் பார்த்தீர்களா, சிற்றம்பலம்? தங்கியிருப்பதற்காக இங்கு இடம் கேட்க வந்தான். அவனுக்கு இடம் இல்லை என்று கூறி திருப்பி அனுப்பி விட்டார் வெள்ளியப்பா. எதனால் அப்படி சொன்னார் என்று வெள்ளியப்பாவையே நான் கேட்டபொழுது, என்னிடம் மூடத்தனமாக சீறி விழுந்தார். அப்படிப்பட்ட பையன்களை தனது வீட்டில் சேர்க்க முடியாதென்றும், அதுவும் தனது மகள் பிரேமகுமாரி இருக்குமிடத்தில் அப்படிப்பட்ட ஊதாரிகளைத்தான் கொண்டு வந்து வைத்துக் கொள்ள இஷ்டப்படவில்லையென்றும் கூறினார்."

"உண்மையில் வெள்ளியப்பா ரொம்ப சஞ்சலமடைந்து தான் இருந்தார்" என்று கூறிய சிற்றம்பலம், "வெள்ளியப்பாவின் போக்கை நீ ரொம்ப பிரமாதப் படுத்தக்கூடாது இன்று காலையிலிருந்து அவர் ரொம்ப அதிர்ச்சி யடைந்திருக்கிறார்" என்றார்.

அதன் பிறகு சிற்றம்பலம் தனக்கு வந்த தபால்களை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தார்.

"அடடா, அந்த மனிதனுக்குள்ள ஜம்பம் இருக்கிறதே!' என்று தன் முகவாய்க் கட்டையில் கையை வைத்த வைஜயந்தி 'அந்த மனிதனின் மகளும் அதில் குறைந்தவளல்ல! உள்ளபடியே சிற்றம்பலம், நான் இப்படி பேசக்கூடாது தான் இருந்தாலும் அந்தப் பெண்ணைப் போல ஒரு—" என்று தயங்கியபடி நிறுத்தினாள்.

"குலுக்கி?" என்று வார்த்தை எடுத்துக் கொடுத்தாள் திலகவதி. தனது மகள் அந்த வார்த்தையை உபயோகப் படுத்தியதைக் கேட்டதும் மைனுவதி அதிர்ச்சி யடைந்து விட்டாள்.

"அந்த வார்த்தையை எல்லோரும் சாதாரணமாக உப யோகப் படுத்துகிறார்களே" என்று சமாதானம் கூறினாள் திலகவதி.

"ஆனால் நாம் சாதாரண தெரு ஜனங்களல்லவே!" என்று மறுதளித்த மைனுவதி, "நீ அவளை ஜம்பக்காரி என்று வேண் டுமானால் சொல்லலாம். உண்மையில் அவள் ஜம்பக்காரி தான்—அவளுடைய பழக்க வழக்கங்கள் வெறுக்கத் தக்கவை தான் அன்றைய தினம் அவளிடம் அம்சவல்லி கொலை வழக்கைப் பற்றி சொல்ல ஆரம்பித்தேன். உங்களுக்கு நினை வருக்கிறதா, சிற்றம்பலம் இன்ஷூரன்ஸ் கம்பெனியை மோசடி செய்து பணம் வாங்குவதற்காக தனது மாமியார் அம்சவல்லியை விஷமிட்டுக் கொன்றாரே சாம்பவசிவம்— அந்த ரசனையான வழக்கைத்தான் அவளிடம் சொல்ல ஆரம் பித்தேன். அவள் சட்டென்று தன் முகத்தை திருப்பிக் கொண்டு தனக்கு இந்த பயங்கர அபத்தங்களெல்லாம் பிடிக் காது என்று சொல்லி விட்டாள்" என்றாள்.

அந்தச் சமயத்தில் அங்குள்ள பரிசாரகனான ஏகாம்பரம் அங்கே வந்து சேர்ந்தான். சாதாரணமாக எப்பொழுது பார்த்தாலும் சோகக்களை தவழும் முகத்துடன் காட்சி யளித்த ஏகாம்பரம் யாரிடமும் பேசுவது கிடையாது தனது கையில் கொண்டு வந்த சில கடிதங்களை அங்கிருந்த மேஜை மீது வைத்து விட்டு அவன் திரும்பி சென்ற போது மைனு வதி அவனை அழைத்தாள்.

"ஏகாம்பரம்! நேற்றிரவு உனக்கு ஏதாவது கூச்சல் கேட்டதா?"

## ௰

ஏகாம்பரம் ஆயாசத்தோடு திரும்பியபடி, "இல்லை அம்மா! நான் படுத்ததும் தூங்கிவிடுவேன்—தூங்கி விட்டால் துப்பாக்கியால் சுட்டால்கூட எழுந்திருக்க மாட்டேன்!" என்றான்.

"உனக்கு அந்த சங்கநாதம் கேட்டதா? என்று விடாமல் கேட்டாள் மைனாவதி.

"எனக்கு ஒன்றும் கேட்பதில்லை அம்மா!"

"இந்த மனிதன் ஒரு மடையன் என்று நினைக்கிறேன்" என்று வெறுப்புடன் கூறினாள் மைனாவதி.

"நானும் அப்படித்தாம்மா நினைக்கிறேன்!" என்று ஒப்புக்கொண்ட ஏகாம்பரம் அந்த அறையைவிட்டு வெளியே சென்றான்.

★ ★ ★

# அத்தியாயம் 6

அன்று காலை தபால் ஸ்டாம்புகள் வாங்குவதற்காக பிரேம குமாரி சீம்ட்பாக்கம் தபாலாபீஸ் சென்றாள். வழியிலே "சோவாத்தனம்" ஹோட்டலின் வெளியே குமரேசன் உட்கார்ந்திருந்ததை அவள் ஜாடையாக கவனித்துக் கொண்டுதான் சென்றாள். அவனைப் பற்றி அவள் அவ்வளவாகக் கவலைப் படவில்லை. ஆனால் அவன் மயான மாளிகையில் வந்து தங்குவதற்குத் தனது தந்தையிடம் அனுமதிகேட்டு தோல்வியடைந்து திரும்பினான். என்றும், அதன் மூலம் தனது தந்தைக்கு எரிச்சல் மூட்டி விட்டான் என்றும் அவள் அறிவாள்

அது வரையில் அவள் குமரேசனிடம் பேசியது இல்லை. அப்படிப்பட்ட துரதிருஷ்டம் தனக்குஏற்படுமென்றும் அவள் எதிர் பார்க்கவில்லை! ஆனால் தபாலாபீஸ்ற்குப் போய் விட்டு அவள் மயான மாளிகை தோட்டத்திற்குள் நுழைந்து அங்கிருந்த ஒற்றையடிப் பாதையில் ஒரு சிறு புதர்மீது அவன் சாய்ந்து உட்கார்ந்திருப்பதை கவனித்தாள் பிரேம குமாரி எங்கேயோ வெட்டவெளியை வெறிக்கப் பார்த்தபடி குமரேசன் உட்கார்ந்திருந்தான்.

தன்னை அவன் கவனிக்க வில்லை என்று நினைத்த பிரேம குமாரி அவன் கண்ணில் படாமல மாளிகைக்குச் சென்றுவிட நினைத்து வேறுபக்கமாக திரும்பினாள். அந்த சமயத்தில் சட்டென்று எழுந்தான் குமரேசன்,

''வணக்கம்! தாங்கள் இந்த வழியாகவே போகலாம்" என்று ஒரு குதூகலப் புன்னகையுடன் கூறினான் குமரேசன். ஆனால் குதூகலப்படும் நிலையில் பிரேம குமாரி இல்லை.

' உன்னுடைய மாளிகை வரையில் உன்னோடு நான் வந்தால் உனது மதிப்பிற்குரிய தந்தையார் ஒரு துப்பாக்கியைத் தூக்குவாரா, அல்லது நாயை அவிழ்த்து விடுவாரா?'' என்று ஆரம்பித்தான்.

பிரேம குமாரி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ''உங்கள் பெயர் குமரேசன்தானே?''

குமரேசன் டவ்யமாகத் தலையை ஆட்டினான். அவன் பவ்யம் கொஞ்சம் அளவு கடந்து இருந்ததால் அது பார்வைக்கு இடக்காகவே தோன்றியது. அதைப் பார்த்த பிரேம குமாரி ஆத்திரமடைந்தாள்.

''குமரேசன்! இந்த சூழ்நிலையில் நீர் தன்னோடு பேச முயலுவது கண்யமான செய்கை அல்ல!''

''கண்யமான செய்கை அல்லாமல் இருக்கலாம். ஆனால் இது புத்தி சாலித்தனமான செய்கை'' என்றுபுன்னகையோடு கூறிய குமரேசன், ''உலகத்திலே பரிபூரண அழகு, காணக் கிடைப்பதே இல்லை. அப்படிப்பட்ட அழகைக் கண்டு ரசிக்கும் வாய்ப்பு கிடைக்கும் பொழுது கண்யத்தைப் பற்றி நினைக்க மாட்டான் புத்திசாலி!'' என்றான்.

''என் வழியில் குறுக்கே நிற்க வேண்டாம்!'' கடு கடுப்புடன் கூறினாள் பிரேமகுமாரி.

உள்ளபடியே அன்று காலை அவள் மனநிலை சரியாக இல்லை. அளவு கடந்த உணர்ச்சி வேகத்தில் அவளது நரம்புக் கோளங்கள் தறிகெட்டு நின்றன. முதல் நாள் இரவு முழுவதும் அவள் திகிலிலேயே கழித்திருந்தாள். விசித்திரமான ரகசிய குரல் பேச்சுக்கள் இரவு முழுவதும் அவள் காதில் விழுந்து கொண்டிருந்தன. அவற்றைக் கேட்கும்

பொழுதெல்லாம் அவள் ரத்தம் உறைந்து விட்டிருந்தது. அதோடு எங்கோ தூரத்திலிருந்து பயங்கரமான சங்கநாதம் கேட்டுக்கொண்டிருந்தது அந்த சப்தம் அவள் நிலை கலக்கச் செய்தது அது மட்டுமல்லாமல் முதல் நாள் இரவு அவள் பார்வையிலும ஒரு தோற்றம் தென்பட்டது—அதற்கு முன்னால் அவள் அதைப் பார்த்ததே இல்லை ஏதோ ஒரு முரட்டுக்காட்டு மிராண்டி உருவம் ஒன்று அவள் அறை ஜன்னலுக்கு நேர்கீழ தோட்டத்தில் பாய்ந்து மறைந்தது. அதைப்பார்த்த பொழுது விடியும் வரை அவள் அளவு கடந்த திகிலோடு படுக்கையில் விழித்திருந்தாள்.

பிரேமகுமாரியையே சில விநாடிகள் பார்த்துக்கொண்டிருந்த குமரசேன், "உன் அப்பாவுக்கு உண்மையாக உன் மேல் அன்பு இருக்கிறதா?" என்று ஆதரவாகக் கேட்டான்.

அதிபயங்கரமான அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கூட உணர்வில்லாமல் பிரமித்துப் போனாள் பிரேமகுமாரி

"அவருக்கு உன்னிடம் உண்மையான அன்பு இருக்குமேயானால் நீ கேட்கும் எதையும் அவர் மறுக்கமாட்டார் என் அருமை பிரேமகுமாரி! எனக்கு இடம் கொடுக்கும்படி அவரிடம் நீ கூறினால்—"

"வழிவிடப் போகிறீர்களா இல்லையா?" என்று ஆத்திரத்தால் நடுங்கும் குரலில் கேட்டாள் பிரேமகுமாரி.

குமரேசன் சட்டென்று பவ்யத்துடன் தலை வணங்கினான் பிறகுதான் முதலில் அமர்ந்திருந்த புதர்மீதுபோய் சாய்ந்து கொண்டான்.

பிரேமகுமாரி நேராக மாளிகையை நோக்கி நடந்தாள். பாதிவழிச் செல்லும் போது பின்னால் திரும்பிப் பார்த்தாள்,

குமரேசன் அவளைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான்.

அந்த சமயத்தில் மாளிகை தோட்டத்தில் மூன்றாவது நபர் ஒருவனும் வந்து 'கொண்டிருந்ததை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லை. பைஞுவதியும், சிற்றம்பலமும் மாளிகைத் தோட்டத்தில் தென்மேற்கு மூலையிலே சாக்கறி தோட்டம் போடச் சென்ற பிறகுதான் அந்த மூன்றாவது நபர் அங்கு நுழைந்திருந்தான். பார்வைக்கு முரடனாக இருந்த அந்த மனிதனிடம் ஒரு பெரிய தோல்பை இருந்தது. அது தவிர உடையாத குடைகள் பலவற்றை நன்றாகக்கட்டி தோளில் வைத்துக்கொண்டிருந்தான். தோட்டத்திற்குள் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்த அவனை, பின்புற வாசலை நெருங்கிய பொழுது அவனை ஏகாம்பரம் பார்த்து விட்டான், "உனக்கு என்ன வேண்டும்?" என்று முரட்டுத் தனமாகக் கேட்டான் ஏகாம்பரம்.

"ஏதாவது ரிப்பேர் செய்ய வேண்டிய குடை இருக்கிறதா?' என்று மந்திரம் போல வரிசையாகக் கேட்டான் அந்த மனிதன்.

ஏகாம்பரம் ஜம்பமாக வெளிசேட்டை சுட்டிக் காட்டிய படி. "போ வெளியே! உன்னை உள்ளே விட்டது யார்?" என்று முழங்கினான்.

"ஏதாவது பழைய குடை இருக்குமென்று வந்தேன்" என்று கூறிய அந்த மனிதன் "இது யார்?" என்று கேட்டான்.

"கர்னல் வெள்ளியப்பாவின் பங்களா நீ போ! இங்கே நிற்காதே" என்று சீறினான் ஏகாம்பரம்

அந்த குடை ரிப்பேர் காரனோ ஏகாம்பரம் கூறியதைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

"எவ்வளவு காலமாக அவர் இங்கே வசித்து வருகிறார் இந்த கர்னல் வெள்ளியப்பா என்ற ஆள்!"

"பத்து வருஷமாக!" என்று ஆயாசத்தோடு கூறிய ஏகாம்பரம். "நீ தொலையப் போகிறாயா, இல்லையா?" என்று கேட்டான்.

"பத்து வருஷம்-ம்!" என்று தலையை ஆட்டிய அந்தக் குடை ரிப்பேர்காரன், "நான் கர்னல் வெள்ளியப்பாவைப் பார்க்கவேண்டும்" என்றான்.

"உன்னை அவசியம் அறிமுகம் செய்து வைக்கிறேன் அவருக்கு குடைரிப்பேர்காரர்களை ரொம்ப பிடிக்கும்" என்று இகழ்ச்சியாகக் கூறினான் ஏகாம்பரம்.

அந்த சமயத்தில் பிரேமகுமாரி மூச்சுவாங்க அங்கே வந்தாள்.

"அதோ தோட்டத்தில் வந்து கொண்டிருக்கும் அந்த இளைஞனை விரட்டு ஏகாம்பரம்" என்று தூரத்தில் வந்து கொண்டிருந்த குமரேசனை சுட்டிக் காட்டினாள். குடைரிப்பேர்காரன் அங்கே நின்றதை அவள் கவனிக்கவில்லை.

"நீ ஒன்றும் கிழிக்க வேண்டாம்" என்று சீறினான் ஏகாம்பரம்.

"நீ யார்?" என்று கேட்டாள் பிரேமகுமாரி.

"நான் ஒரு குடைரிப்பேர்காரனம்மா. என்ற பேராசையோடு கூறினான் அவன். அவனது பார்வையில் காணப்

பட்ட ஏதோ ஒன்று பிரேமகுமாரியை நிலைகுலையச் செய்தது.

"இவன்— இவன் யாரையும் கேட்காமல் உள்ளே நுழைந்திருக்கிறான் அம்மா! நீங்கள் இப்போது வராதிருந்தால் இந்நேரம் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளி இருப்பேன்" என்று தடுமாறினான் ஏகாம்பரம்.

"இவன் யாராக இருந்தாலும் பரவாயில்லை. இவனையும் சேர்த்துக்கொண்டு அந்த இளைஞனை விரட்டு" என்று ஏதோ சொல்ல வந்தவள் சட்டென்று மௌனமாகிவிட்டாள் ஏனென்றால் குமரேசன் தோட்டத்துப் பக்கமிருந்த ஜன்னலை நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்தான்.

"என்னைப் பின்தொடர்ந்து வர உனக்கு எவ்வளவு தைரியம்!" என்று ஆத்திரமாக தரையில் காலை உதைத்தாள் பிரேமகுமாரி. ஆனால் அதை குமரேசன் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை,

"உன் எதிரே நிற்காமல் விலகச் சொன்னாய். அதனால் உன் பின்னால் நடந்து வந்தேன். இப்போது புரிகிறதா?" என்று கேட்டபடி அவள் இருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தான் குமரேசன்.

"உன் முகத்தைப் பார்க்கவே எனக்கும் என் தந்தைக்கும் பிடிக்கவில்லை என்று உனக்குப் புரியவில்லையா? உடனே வெளியே போ! நீ யாரென்று தெரிந்து கொள்ளக்கூட நாங்கள் விரும்பவில்லை" என்று கர்ஜித்தாள் பிரேமகுமாரி,

"என்னை உனக்குத் தெரியாதா." என்று வேதனையோடு கேட்ட குமரேசன் என் பெயர் குமரேசன் என்று கூடவா தெரியாது?" என்று அழுகைக் குறையாகக் கேட்டான்.

"நீ வலுக்கட்டாயமாக என்னிடம் பழக முயல்கிறாய். உன் அறிமுகம் எனக்குத் தேவையில்லை என்று நான் தெளிவாகக் கூறிவிட்டேன்."

"நான் இங்கே ஜாகை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன் என்று இடைமறித்துக் கூறிய குமரேசன், "நான் ஏன் இங்கு ஜாகை எடுத்துக் கொள்ளக்கூடாது?" என்று இடக்காகக் கேட்டான்.

"உனக்கு இங்கே ஜாகை தேவையில்லை, கோவர்த்தனம் ஹோட்டலிலே நீ இருக்கலாம் அதுதான் உனக்குப் பொருத்தமான இடம்" என்று கடுமையாகக் கூறினாள் பிரேமகுமாரி

அந்தச் சமயத்தில் தான் குடைரிப்பேர்காரன் குறுக்கிட்டான் "இதோ பார் முதலாளி! இந்த அம்மாள் உன்னைப் போகச் சொல்கிறாள் போய்விடு" என்றான்.

ஆனால் குடைரிப்பேர்காரனை குமரேசன் சட்டை செய்யவில்லை.

"நான் ஒன்றும் கோவர்த்கனம் ஹோட்டலுக்குப் போகப்போவதில்லை" என்று உறுதியான குரலில் ஆரம்பித்த குமரேசன் தோள்மீது ஒரு கரம் விழுந்தது.

'மரியாதையாகப் போகிறாயா இல்லையா?" என்று மிரட்டலாகக் கேட்டாள்.

குமரேசன் சட்டென்று குடைரிப்பேர்காரன் பக்கம் திரும்பினான். "அந்த வேலை வேண்டாம் பையா அது முரட்டு வேலை எப்பொழுதும் முரட்டு வேலைக்குப்போகாதே பையா!' என்று இடக்காகக் !"கூறினான்.

"நட வெளியே என்று குமரேசனைத் தள்ள முயன்றான் குடைரிப்பேர்காரன்.

மறுவிநாடியே குடைரிப்பேர்காரனின் மணிக்கட்டை தனது இரும்புக்கரங்களால் இறுகப்பிடித்து ஒரு சொடுக்கு சொடுக்கிய குமரேசன் ஒரு செத்தநாயை இழுத்தெறிவது போல் அவனை அப்பால் எறிந்தான். தடாலென சிறிது தூரத்தில் தரையில்போய் விழுந்தான் குடைரிப்பேர்காரன்.

"ஊமை அடி!" என்று மிருதுவாகக் கூறினான் குமரேசன்.

அந்த சமயத்தில் கர்னல் வெள்ளியப்பா ஆத்திரமாக அங்கு வந்தார்.

"இங்கு என்ன களேபாரம் நடக்கிறது?" என்று கர்ஜித்தார் கர்னல்.

ஆத்திரத்தால் கொதித்துப் போயிருந்த பிரேமகுமாரி நடந்த விவரங்களை தொடர்பில்லாமல் உளறினாள்.

"இந்த குடைரிப்பேர்காரனை தெருப்பக்கம் அழைத்துப் போய் ஏதாவது வேலை கொடு ஏகாம்பரம்!" என்று உத்தரவிட்டார் கர்னல்.

ஏகாம்பரமும் அந்த குடைரிப்பேர்காரனும் அப்பால் சென்ற பிறகு குமரேசன் பக்கம் திரும்பினார் வெள்ளியப்பா.

"நீ எங்கே வந்தாய்?" என்று சாந்தமான குரலில் குமரேசனை கேட்டார்."

"ஜாகை கேட்க வந்தேன்!" என்று சளைக்காமல்கூறினான் குமரேசன்.

"நான் நேற்றே சொல்லிவிட்டேன். உனக்கு இங்கே இடமில்லை. நீ போகலாம்" என்று கடுமையாகக் கூறினார் கர்னல்.

பிறகு பிரேமகுமாரியின் பக்கம் திரும்பி அவளை உள்ளே போகுமாறு தலை ஆட்டினார் வெள்ளியப்பா. பிரேமகுமாரி வேகமாக உள்ளே சென்றாள்.

காவல் வெள்ளியப்பா ஆத்திரமான குரலில் குமரேசனிடம், "உன்னைப்போன்ற உதவாக்கரை இளைஞர்களையெல்லாம் நான் இங்கு சேர்த்துக்கொள்ள மாட்டேன்!" என்றார்.

"சேர்த்துக் கொள்வீர்களென்று நினைத்தேன்!" என்று விடாமல் கூறினான் கார்த்திகேயன்.

ஏகாம்பரம் என்று முழங்கினார் காவல்.

"ஏகாம்பரம்! இந்த கனவானை வெளியே அனுப்பு நமது தோட்டத்தை விட்டே வெளியேறு!"

ஏகாம்பரத்திற்கு அந்த சிரமத்தை வைக்க விரும்பாதவன் போல் குமரேசன் வேகமாக வெளியே நடந்தான். அவன் தோட்டத்தைக் கடந்து சென்றுகொண்டிருந்த போது ஒரு புதர் மறைவிலிருந்து வேகமாக வெளியே வந்த குடைரிபபேர்வரன் அவன் எதிரே வந்து நின்றான். சில விநாடிகள் சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டான்.

"ஆண்டவனே! நீயா! உன்னை நான் பத்துவருஷங்களாக பார்க்கவில்லை. அந்தப் பீடியை மாத்திரம் நான் சிக்காமலிருந்தால் உன்னை நான் அடையாளம் கண்டு கொண்டிருக்கவே முடியாது" என்று மூச்சு வாங்க கூறினான்.

குமரேசனின் குரல் இப்பொழுது கடுமையாக ஒலித்தது. கணீரென்று இரும்புக் குரலில் பேச ஆரம்பித்தான் 'நீ தெரிந்துகொள்ள வேண்டியதற்குமேல் ரொம்ப அதிகமாகத் தெரிந்து கொண்டுவிட்டாரி ரங்கசாமி!"

"உன்னிடம் என்று ஒன்றும் பயம் கிடையாது" என்று உறுமிய குண்டரிப்பேரி அவதாரியான ரங்கசாமி, "என்னை பயமுறுத்த முயலாதே! இத்துடன் பழைய வேலைத்தனம் அல்லவா என்று சீறினான்.

"ரங்கசாமி! உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கடைசியாக உனக்கு ஒரு சந்தர்ப்பம் தருகிறேன்" என்று நிதானமாகவும் ஆணவத்தோடும் கூறிய குமரேசன், "எவ்வளவு சீக்கிரமாக இந்த இடத்தை விட்டு உன்னால் ஓட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஓடிவிடு! இன்றிரவு நீ இங்கு தங்கி இருந்தால் பிணமாகி விடுவாய்" என்றான்.

தாங்கள் இருவரும் சந்தித்ததைப் பார்த்துக்கொண்டு பேசியதைக் கேட்டுக்கொண்டும் ஒரு பெண் மறைந்து இருந்ததை ரங்கசாமியோ, குமரேசனோ கவனிக்கவில்லை.

* * *

# அத்தியாயம் 7

மைனாவதி தன்னை ஒரு ரசிகை என கூறிக்கொண்டாள். எதுவாக இருந்தாலும் அதை ரசித்துப் பார்க்கும் கலையுணர்ச்சி தனக்கு உண்டு என்று சொல்லிக் கொண்டாள். ஆனால் மற்றவர்கள் அவளை வேவுகாரி என்றும் ஒளிந்திருந்து பார்க்கும் ஒழுக்கங் கெட்டவள் என்றும் இகழ்ச்சியாகப் பேசி வந்தார்கள். ஏகாம்பரத்துக்கு அவளை அடியோடு பிடிக்காது. தனது செய்கைகளையெல்லாம் அவள் மறைந்து பார்க்கிறாள் என்ற ஆத்திரம் அவனுக்கு நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அன்றைய தினம் அந்த குடை ரிப்பேர்காரன் ஏகாம்பரத்தை தனியாக சந்தித்து மயான மாளிகையின் பாதாள அறைகளில் கொள்ளை கொள்ளையாக ஐசுவரியம் புதைக்கப்பட்டிருக்கிறதென்று ரகசியமாக சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில் மைனாவதி அங்கே வந்தது அவனது ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்கியது.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் மைனாவதி இந்த தகவலை கர்னல் வெள்ளியப்பாவிடம் ஓடிப்போய் கூறினாள். வெள்ளியப்பாவுக்கு சாதாரணமாகவே அவ்வளவாக மைனாவதியைப் பிடிக்காது. அதனால் அவள் சிறிய செய்தியை அவர் அவ்வளவு சுவாரஸ்யமாக கேட்கவில்லை.

அன்றிரவு அதைப்பற்றி தன் மகனிடம் கூறினாள் மைனாவதி. 'அந்த மனிதனிடம் நான் அந்த தகவலை கூறியபோது அவன் இடித்த புளிமாதிரி உட்கார்ந்திருந்தான்" என்று இகழ்ச்சியாகக் கூறினாள்.

இதைச் சொல்லிவிட்டு அருகாமையிலிருந்த ஜன்னலின் திரைச் சீலையை மெதுவாக ஒதுக்கி இருண்டு கிடந்த தோட்டத்தை கலவரத்தோடு பார்த்தான்.

அன்றிரவு நிச்சயம் ஏதாவது பேய் வரத்தான் போகிறது!'' என்று கூறிய மைனாவதி நான் இதை சிற்றம்பலத்திடம் கூறியபோது அவர் என்னை பைத்தியக்காரி என்று கேலி செய்தார்! என்று குறைபட்டுக் கொண்டாள்.

இப்படியெல்லாம் பேசாதே அம்மா என்றுகடுகடுப்புடன் கூறிய திலகவதி எனக்கு அதைக் கேட்கவே குலை நடுங்குகிறது என்றாள்.

மைனாவதி ஒரு சிறு கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்துக் கொண்டே, "நான் அந்தப் பிசாசை இரண்டு தடவை பார்த்திருக்கிறேன்'' என்று சங்கடத்தோடு கூறினாள் திலகவதியின் உடல் நடுங்கியது.

கொஞ்சநேரம் வரையில் மைனாவதி ஒன்றும் பேசவில்லை, பிறகு திடீரென்று தன் மகளின் பக்கம் திரும்பி, "இந்த ஏகாம்பரம்!'' என்று ஒரு சிறுபாக கூறிவிட்டு. "இவன் உண்மையிலேயே சமையற்காரன் அல்ல! இன்று பகல்பூராவும் அவன் ஒவ்வொரு இடமாக ஆராய்ந்து கொண்டிருந்தான், பாதாள அறைப் படிக்கட்டு காரிலிருந்து அவன் மேலே வருவதை நான் பார்த்து விட்டதைக் கண்டதும் அவன் ரொம்பவும் தடுமாறிப் போய்விட்டான்!'' என்றாள்.

திலகவதி தனது தாயாரின் முகத்தை யோசனையோடு பார்த்தபடி "அன்றிரவு நீ வீறிட்டு அலறினாயே எதைப் பார்த்து விட்டு அப்படி அலறினாய்?'' என்று கேட்டாள்.

"அது சைவை ஆட்டிக் கொண்டு புலியெளியில் ஓடியதைப் பார்த்தேன்—அப்ப!"

"அது என்றால் எது?" ஈனஸ்வரத்தில் கேட்டாள் திலகவதி.

"அந்த மயான ருத்ரன்! தலையிலிருந்து கால்வரை அது சுறுப்பு அங்கி போட்டிருந்தது!—அது என்ன சத்தம்?" என்று திடுக்கிட்டு எதிர்ப்பக்கம் திருப்பிப் பார்த்தாள் மைனுவதி.

அன்றிரவு காற்றும் மழையுமாக இருந்ததால் அந்த அறையில் பொருத்தப்பட்டிருந்த 'காற்றுப் போக்கியின் கண்ணுடிக் கதவு படபடத்த சத்தம் தான் மைனுவதியை அச்சம் கொள்ளச் செய்தது.

"நாம் கீழ்த்தளத்திற்குப் போய்விடலாம்—ஆண்டவனே!" என்று திகிலுடன் கூறியபடி எழுந்தாள் மைனுவதி.

கீழ்த்தளத்தில் சிற்றம்பலம் வழக்கம்போல உற்சாகமான தோற்றத்தோடு உட்கார்ந்திருந்தார். அங்கு மைனுவதியும் திலகவதியும் வருவதைப் பார்த்ததும் மெதுவாக இருமிக் கொண்டார்.

"அன்றிரவு அபிமானன் கண்களால் என்ன பார்த்தான் என்று உங்களிடம் சொன்னாளா?" என்று ஆரம்பித்தாள் திலகவதி,

சிற்றம்பலம் சங்கடத்தோடு, "இதோ பார்! பிசாசுகளைப் பற்றி நீங்கள் பேச ஆரம்பித்தால—" என்று நிறுத்தினார்.

"பிசாசுகளைப் பற்றி அல்ல, சித்தர்களைப் பற்றி!" என்று வறண்ட குரலில் கூறினாள் திலகவதி.

"மயான ருத்ரனைப் பற்றி!" என்று திருத்தம் கொடுத்தாள் மைனாவதி.

சிற்றம்பலம் தனது புருவங்களை நெரித்தபடி "மயான ருத்ரனா?" என்று புன்னகையுடன் கேட்டுவிட்டு தனது ஆசனத்தை விட்டு எழுந்து சிறிது தூரம் நடந்து சென்று, ஒரு இடத்தை விரலால் தட்டிக் காண்பித்து "அது மயான ருத்ரன் என்ற சித்தராக இருந்தால், இந்த வழியாகத்தான் வந்திருக்க வேண்டும்" என்றார்.

மைனாவதி தன் வாயைப் பிளந்தபடி அவரை வெறிக்கப் பார்த்தாள். "எந்த வழியாக?" என்று கேட்டாள். "சித்தர் வாசல் என்று அழைக்கப்படும் வழி! இந்த வழியாக பாதாள அறைகளுக்குச் செல்லலாம்!" என்றார் சிற்றம்பலம்.

சிற்றம்பலம் சுட்டிக் காட்டிய சிறு கதவை நன்றாக உற்றுப் பார்த்தாள் மைனாவதி.

"இந்த வழியாகத்தான் சித்தர்கள் மேலே வருவார்களாம்" என்று ஆரம்பித்த சிற்றம்பலம், "நரபலி முதலியன கொடுக்கக் கூடாதென்று ஏட்டிலேயே சட்டமேற்பட்ட பிறகு, அந்த சித்தர்கள் பாதாளத்திலுள்ள ஒரு கோயிலில் அந்த சடங்குகளையெல்லாம் நடத்தி வந்தார்களாம். அவர்கள் வெளியே வருவதற்கு அந்த வழியைத் தான் உபயோகிப்பார்களாம். இப்பொழுது இந்த சட்டத்தால் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டதால் பாதாளத்திற்குச் செல்லும் வழிகூட செங்கற்கள் வைத்து அடைக்கப்பட்டிருக்கலாம். அந்த சித்தர்கள் அனுதினமும பாதள கோவிலில் பலி பூஜை நடத்தி வந்தவர்களாம்" என்றார்.

திலகவதி ஒரு நெடு மூச்சுவிட்டாள். "இந்தக் கதைகளைக் கேட்பதைவிட அம்மா சொல்லும் படுகொலைக் கதைகளை கேட்பதே ரொம்ப இனிமையாக இருக்கும்போலிருக்கிறதே!" என்று தவித்தாள்.

மைனுவதி யோசனையோடு, பாதாளக் கோவிலா?—அப்படியானல் அந்த சங்கொலையும், ஆராடசி மணி ஓசையும் எங்கிருந்து கேட்கிறதெதன புரிகிறது!—நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

சிற்றம்பலம் தனது தலையை ஒரு தினுசாக ஆட்டிவிட்டு' "சங்கநாதமாவது, ஆராட்சி மணியோசையாவது!" என்று அவ நம்பிக்கையோடு கூறிவிட்டு, "அஜீணத்தால் தூக்கங் கெட்டு. கெட்ட கனவுகள் கண்டு கொண்டு அலேகிருய்!" என்று கூறிவிட்டு சட்டென்று பேச்சை மாற்றி, : குமரேசன் என்ற அந்த இளைஞன் இங்கு வரப் போவதாக சொன்னுயே? அவன் எப்பொழுது வருகிறுன்?" என்று கேட்டார்.

அவன் வரமாட்டான்! என்று தீர்க்கமாகக் கூறிய மைனுவதி. "அவன் ரொம்ப சுவாரஸ்யமான இளைஞன்! அம்மா திரி ஆட்களை இங்கே சேர்க்க மாட்டார்கள்! இங்கே தொண்டு கிழங்களும் தொப்பரைகளும்தான் இடம் பெறுவார்கள்!" என்றுன்.

சிற்றம்பலம் சிரித்தார். உடனே மைனுவதி அவசரமாக „உங்களை நினைத்துக் கொண்டு ' நான் அப்படிப் பேசவில்லை சிற்றம்பலம் என்ருள்.

அந்த சமயத்தில் கதவு திறக்கப்படும் சத்தங்கேட்டு சட்டென்று திரும்பினுள் திலகவதி.

பிரேமகுமாரி உள்ளே வருவதைக் கண்டதும், மைனுவதி ' நாங்கள் குமரேசனைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்!"

"அப்படியா?" என்று ஒரு தினுசாகக் கேட்ட பிரேம குமாரி இது ரொம்ப சுவாஸ்ரயமான விஷயமாயிற்றே!" என்றாள்.

அதன் பிறகு அவர்கள் பேச்சு வெவ்வேறு விஷயங்களில் திரும்பாது. கொஞ்சநேரங்கழித்து எல்லோரும் தங்கள் படுக்கைக்குச் சென்றார்கள்.

கர்னல் வெள்ளியப்பா அன்று இரவு பிரேமகுமாரியின் கண்ணில் படவேயில்லை, தனது அறையில் தாளிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எல்லோரும் படுக்கைக்குச் சென்றபின் வெள்ளியப்பாவின் அறைப் பக்கம் சென்றாள் பிரேமகுமாரி. மெதுவாக கதவைத் தட்டினாள். உள்ளே வெள்ளியப்பா ஒரு அலமாரியை மூடி சாத்திய சப்தம் பிரேம குமாரிக்குக் கேட்டது.

அதன் பிறகு மெதுவாகக் கதவைத் திறந்த கர்னல் வெள்ளியப்பா, பிரேமகுமாரியைப் பார்த்ததும், "நீ இன்னும் படுக்கப் போகவில்லையா அம்மா?" என்று கேட்டார்.

"உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும் அப்பா" என்றாள்.

வெள்ளியப்பா ஆயாசத்தோடு, "இப்பொழுது எனக்கு ரொம்ப அசதியாக இருக்கிறது அம்மா!" என்றார்,

பிரேமகுமாரி அவரது அறைக்குள் நுழைந்து அவரது கரத்தைப் பற்றியபடி மெதுவான குரலில், "அப்பா இந்த இடத்திலிருந்து நாம் கிளம்பிவிட முடியாதா அப்பா? இந்த மாளிகையை உங்களால் விற்றுவிட முடியாதா அப்பா" என்று கேட்டாள்.

வெள்ளியப்பா தனது மகளின் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமலேயே இந்த இடம் உனக்கு அவ்வளவு சுவாரஸ்ய மாக இல்லை போலிருக்கிறது!" என்றார்.

"சுவாரஸ்யத்தைப் பற்றி நான் சொல்லவில்லை. ஆனல்—" என்று கூறும்போழுதே பிரேமகுமாரியின் உடல் நடுங்கியது. இது பயங்கரமான இடம்! இது ஏனே பயங் கரமடைந்திருக்கிறது!" என்றாள்.

வெள்ளியப்பா அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்காம லேயே "எனக்கு விளங்கவில்லையே—" என்றார்.

அப்பா, இதில் ஏதோ பயங்காம் அடங்கி இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும்! நான் திலல் வாய்ப்பட்டு உளர வில்லை! நேற்றிரவு நான் அதை காதால் கேட்டேன்—முத லில் சங்கநாதமும், ஆராட்சி மணியோசையும் முழங்கின. பிறகு யாரோ வீறிட்டு அலறும் சப்தம் கேட்டது! என்று கூறும் பொழுதே தன் முகத்தை பொத்திக் கொண்ட பிரமகுமாரி. என்னல் அதை சகிக்க முடியவில்லை! அந்த உருவம் ஒரு கறுப்பு அங்கி அணிந்து கொண்டிருந்தது! மைனு வதி கூட அந்த சப்தத்தை காதால் கேட்டிருக்கிருள்' என்று கூறிக்கொண்டே வந்தவள் சட்டென நிறுத்திவிட்டு— அது என்ன?" என்று படபடப்போடு கேட்டாள்.

"ஏதோ காற்று சப்தம்" என்று கரகரத்த குரலில் கூறிய வெள்ளியப்பா காற்றைத் தவிர வேறொதுவும் இல்லை என்றார்.

நன்ருக காது கொடுத்துக் கேளுங்கள்.

தொலை தூரத்திலிருந்து வருவதைப் போல ஒலித்து அந்த சங்கநாதமும், ஆலட்சி மணியோசையும் வெள்ளி யப்பாவுக்கும் கேட்டிருக்க வேண்டும்.

"உங்கள் காதில் எதுவும் விழுகிறதா?"

"எதுவுமே இல்லை" என்று ஒரேயடியாக மறுத்தார் வெள்ளியப்பா.

பிரேமகுமாரி தரைப்பக்கமாக குனிந்து காது கொடுத்து கேட்டாள்.

பிறகு பரபரப்போடு, இப்பொழுது கேட்கிறதா அப்பா! யாரோ கல்தரையில் நடந்து போவதைப் போன்ற சப்தம்— ஆண்டவனே, அது என்ன? என்று நிறுத்தினாள்.

அந்த சப்தம் யாரோ இடைவிடாமல் கதவை இடித்த சத்தம்தான்.

"யாரோ வெளிக் கதவைத் தட்டுகிறார்கள்" என்று திகிலுடன் மெல்லிய குரலில் கூறினாள் பிரேமகுமாரி.

கர்னல் வெள்ளியப்பா தனது மேஜையை திறந்து எதையோ எடுத்து தனது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார்.

மாடியிலுள்ள உன் அறைக்குப் போ! என்றார்.

பிறகு தெருக் கதவை நோக்கி நடந்த அவர், தன் முன்னால் எதிர்ப்பட்ட ஏகாம்பரத்தையே பார்த்தார். எங்கோ வெளியே செல்வதற்குத் தயாராக அவன் ஆடை உடுத்திக் கொண்டிருந்தான்.

"அது என்ன சத்தம்?" என்று கேட்டார் வெள்ளியப்பா

"யாரோ தெருக் கதவை தட்டுகிறார்கள், என்று நினைக்கிறேன்—திறக்கட்டுமா?" என்று கேட்டான் ஏகாம்பரம்,

விஞடி நேரம் கர்னல் வெள்ளியப்பா தயங்கினர். பிறகு சரி திற என்ருர்.

ஏகாம்பரம் கதவைத் திறந்தபோது வெளியே குமரேசன் நின்று கொண்டிருந்தான்.

வெளியே மழை பெய்து கொண்டிருந்ததால் குமரேசன் ஆடைகளெல்லாம் நனைந்து ஈரமாக இருந்தது.

"மன்னிக்க வேண்டும்! அகாலத்தில் வந்திருக்கிறேன்! என்று ஆரம்பித்தான்.

உனக்கு என்ன வேண்டும்? என்று கடுமையாகக் கேட்டார் கர்னல்

எக்காரணத்தாலோ குமரேசனின்வருகை கர்னல் வெள்ளியப்பாவின் மனதிலே ஒரு விசித்திரமான சாந்தியை ஏற்படுத்தியது.

"கோவர்த்தனம் ஹோட்டலில் என்னைக் காலி செய்ய சொல்லிவிட்டார்கள். எனக்கு இங்கே தங்க இடம் வேண்டும் என்று கர்னலின் முகத்தைப் பார்த்தபடி கூறினன் குமரேசன்.

அந்த சமயத்தில், அவர் தங்குவதற்கு இடம் கொடுங்கள் அப்பா! என்ற குரல் பின்புறமிருந்து வந்ததைக் கேட்டதும் கர்னல் வெள்ளியப்பா சடடென்று திரும்பினர். பிரேமகுமாரி நின்று கொண்டிருந்தாள்.

அவர் தங்கி இருந்து விட்டுப் போகட்டும் அப்பா அவர் ஏழாம் நம்பரில் தங்கி இருக்கலாம் என்ருள் பிரேமகுமாரி.

அதைக் கேட்டதும் குமரேசனின் முகத்திலே புன்னகை படர்ந்தது.

"வாழ்க வாழ்க! என்று உற்சாகமாக வாழ்த்தினன் குமரேசன்.

குமரேசனை வியப்போடு பார்த்தாள் பிரேமகுமாரி. மழையில் தொப்பரையாக நனைந்திருக்கும் அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு வியப்பாக இருந்தது. இந்த மழையில் அவன் எங்கே அலைந்து விட்டு வருகிறன்? அது மட்டுமல்லாமல், வழக்கத்தைவிட, அவன் பவ்யமாக வாயடக்கத்துடன் இருப்பது ஏன்......

ஏழாம் நம்பர் அறைக்கு குமரேசன் அழைத்துச் செல்லப்பட்டான். அந்த அறைக்கு நேர்மேலே மாடியில் பிரேமகுமாரியின் அறை இருந்தது.

படுப்பதற்காக தனது அறைக்குள் பிரேமகுமாரி நுழைந்த போதிலும் அவளால் அன்றி வு தூங்கமுடியவில்லை வெகுநேரம் வரையில் என்னென்னவோ யோசித்த வண்ணம் நிம்மதி இல்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

வெகுநேரம் கழித்து உடல் அயர்வினல் அவளது கண்கள் இலேசாக மூட ஆரம்பித்தன. அப்பொழுது திடீரென ஏதோ சப்தம் கேட்கவே சட்டென்று தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். வெளியே கடுமையான காற்று வீசிக்கொண்டிருந்தது. அடை மழை போல கொட்டிக் கொண்டிருந்த மழையில் தூவானம் அவளது அறை ஜன்னல் மீது வந்து மோதிக் கொண்டிருந்தது. அந்த சப்தங்களிலெல்லாம் அவள் விழித்துக் கொள்ளவில்லை கீழ்த்தளத்திலே, யாரோ மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. முதலில் அது ஏகாம்பரத்தின் குரலோ என்று

சந்தேகப் பட்டாள். பிறகு அது தன் தந்தையின் குரலாக இருக்குமோ என்று அவளுக்கு சந்தேகம் உண்டாயிற்று.

அப்பொழுது அவளது ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் பயங்கர அலறல் எத்த களத்திலிருந்து கேட்டது—வெறி கொண்ட பைத்தியக்காரனின் அலறலைப்போல அது இருந்தது அவளால் அசையக்கூட முடியவில்லை. பிறகு சமாளித்தவளாய் படுக்கையைவிட்டு துள்ளி இறங்கி பிரேமகுமாரி, மாடிப்படிக்கட்டை நோக்கி ஓடினாள். அப்போது தோட்டத்துப் பக்கம் யாரோ நடமாடுவது அவள் கண்ணில் பட்டது.

"யார் அது?"

"நான்தான் அம்மா!" என்று அவள் தந்தையின் குரல் வந்தது.

கர்னல் வெள்ளியப்பாவின் அறை கீழ்த்தளத்தில்தான் இருந்தது.

உங்களுக்கு சப்தம் எதுவும் கேட்டதா அப்பா?

ஒன்றும் கேட்கவில்லை என்று கடுமையாகக் கூறிய வெள்ளியப்பா. நீ படுக்கப் போ. அம்மா என்றார்.

ஆனால் பிரேமகுமாரி மசியவில்லை "நான் படுக்கப் போவதில்லை என்று கூறியபடி கீழ்த்தளத்திற்கு இறங்கிய பிரேமகுமாரி, கீழ்த்தளத்தில் யாரோ இருந்தார்கள்!—அவர்கள்பேச்சுக் குரல் என் காதில் விழுந்தது" என்றாள்.

கீழ்த்தளத்திலுள்ள ஒரு அறையைத் திறப்பதற்கு பிரேமகுமாரி கைவைத்தபோது, கர்னல் வெள்ளியப்பா சட்டென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டார்.

"ஆண்டவனே! நீ உள்ளே போகாதே பிரேமகுமாரி நீ உள்ளே போகாதே! என்று தடுத்தார்.

பிரேமகுமாரி பொறுமை இழந்தவளாக அவரது கையை உதறி விட்டு, அந்த அறைக் கதவை வேகமாகத் திறந்தாள். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. மின்சார விளக்கின் ஸ்விட்சை பொருத்தினாள் பிரேமகுமாரி. விநாடி நேரம் அவள் கண்களில் எதுவும் படவில்லை. பிறகு அறையின் மத்தியிலே குப்புற விழுந்து கிடந்தது ஒரு உருவம். சவமாகிவிட்ட அந்த உருவத்தின் முகத்திலே கோரச் சிரிப்பு தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அந்த உருவத்தைப் பார்த்ததும் அன்று குடைரிப்பேர் செய்ய வந்தவன் தானென்று புரிந்து கொண்டாள் பிரேமகுமாரி, அவன் குடரேஸனிடம் சண்டை போட்டுக் கொண்டதும் அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்று கார்த்திகேயன் கூறியதும் பிரேமகுமாரிக்கு சட்டென்று நினைவுக்கு வந்தன.

# அத்தியாயம் 8

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ஒரு போலீஸ் புகைப்படக் காரரோடும், தனது உதவியாளர்களோடும் மயானமாளிகைக்கு வந்து சேர்ந்தார், அங்கே வந்திருந்த உள்ளூர் போலீஸ் அதிகாரியோடு கொலையுண்டவனின் பிணத்தைப் பார்ப்பதற்குச் சென்றார். அந்தப் பிணத்தைப் பார்த்த மறுவிநாடியே அது யாரென்று அடையாளம் கண்டுகொண்டார்.

ரங்கசாமி! சிறைத்தண்டனை அனுபவித்து இப்பொழுது தான் வெளியே வந்த ரங்கசாமி! சரப்பஜியை எதிர்நோக்கி இருந்தா

லும் கண்டுபிடித்து பழிவாங்கப் போவதாக சூளுரைத்த ரங்கசாமி! அவன்தான் கழுத்து முறிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டு கிடக்கிறான் இந்த ரீதியில் கொலை நடத்துவது தான் சரபோஜியின் வழக்கம்.

மாளிகையில் இருந்தவர்களை ஒருவர்பின் ஒருவராக விசாரிக்க ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி.

ஏகாம்பரம் தான் நிறைய பேசினான். தனக்கு அந்த மனிதனை நன்றாக நினைவிருக்கிறதென்றும், ஆனால் அவன் எப்படி அந்த அறையில் நுழைந்தானென்று தனக்கே விளங்கவில்லை என்றும் கூறினான். விதிக் கதவு நன்றாக தாளிடப்பட்டு பூட்டப்பட்டு இருந்ததென்றும் ஜன்னல்களெல்லாம் சாத்தி வைக்கப்பட்டவைபோலவே இருந்தனவென்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறினான்.

அடுத்தபடியாக சிற்றம்பலம் விசாரிக்கப்பட்டார். சாதாரணமாகவே அவர் ஆழ்ந்து நித்திரை செய்யக்கூடியவர். அதோடு பிணம் கிடந்த அறைக்கும் அவரது அறைக்கும் ரொம்ப தூரம் இருந்தது.

மைனாவதியை விசாரித்ததிலும் உருப்படியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை, அவள் என்னென்னவோ கற்பனை செய்து புதுப்புது சித்தாந்தங்களை கூறினாளே தவிர பயனுள்ள துப்பு எதுவும் அவளால் கூறமுடியவில்லை.

"இன்னும் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார் பரஞ்சோதி.

"குமரேசன் இருக்கிறார்."

"குமரேசனா?—யார் அந்த குமரேசன்? என்று கேட்டார் பரஞ்சோதி.

குமரேசனின் விசித்திர நிலையையும் அவன் வந்த விசித்திர நேரத்தையும் கூறினான் ஏகாம்பரம்.

அந்த ஆளை பிறகு பார்க்கிறேன். உங்கள் பதிவு புத்தகத்தில் இன்னொரு விருந்தினர் பெயர் இருக்கிறதே! அவர் எங்கே!" என்று மீண்டும் விருந்தினர் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார் பரஞ்சோதி.

நாக நந்தி அடிகளா? அவர் இன்றுவரைவரவில்லை. அவர் ஒரு சாமியார்" என்றான் ஏகாம்பரம்.

சரி நான் பிரேமகுமாரியைப் பார்க்கவேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

இதுவரை சிற்றம்பலம் அந்த அறையில் தான் இருந்தார். இப்பொழுது அவர் பேச முன் வந்தார்.

பிரேமகுமாரியை நீங்கள் தொந்தரவு செய்யவேண்டிய அவசியமிருக்காது என்று நினைக்கிறேன். அந்தப் பெண் ரொம்பத் தங்கமானவள் எனக்கு அவள் மீது அளவுகடந்த பிரியம்" என்று புன்னகை புரிந்தார்.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ஒரு புது அக்கறையோடு சிற்றம்பலத்தின் முகத்தைப் பார்த்தார். பரஞ்சோதியின் கழுகு கண்களுக்கு சிற்றம்பலம் அந்த வயதிலும் பிரேமகுமாரியிடம் காதல் உணர்வு கொண்டு தவிப்பது தெளிவாகத் தெரிந்தது.

நான் ரொம்பவும் கோழை என்று நினைக்கிறீர்களா! என்று சிரித்தபடி கேட்டார் சிற்றம்பலம்.

காதல் கொள்வது கோழைத்தனமல்லவா? என்றுநிதா" னமாகக் கூறினார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி.

சிற்றம்பலம் அந்த அறையை விட்டு வெளியே நடந்தார்.

உள்ளபடியே, தனக்கு எந்த நேரத்திலும் அழைப்பு வருமென்று தான் பிரேமகுமாரி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இன்ஸ்பெக்டர் பரஞ்சோதியின் முன்னால் போய் நின்றதும் அவள் உள்ளம் மரத்துப் போயிருந்தது. அவள் உள்ளே நுழையும்பொழுது ஏகாம்பரத்தை ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார் பரஞ்சோதி. பிரேமகுமாரி உள்ளே நுழைந்ததை இருவருமே கவனிக்கவில்லை.

"ஏகாம்பரம்! ஜன்னல் கதவுகளெல்லாம் சாத்தியபடி இருந்தன, தெருக் கதவும் தாளிடப்பட்டபடி இருந்தது. அப்படி இருந்தும் ரங்கசாமி உள்ளே வந்திருக்கிறான் அவன் எப்படி வந்தானென்று உன்னால் ஊகிக்க முடிகிறதா?"

"எனக்குத் தெரியவில்லை ஸார்! அவனுக்கு நான் கதவு திறந்து விடவில்லை" என்றான் ஏகாம்பரம்.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தனது புருவத்தை நெறித்தபடி, "இரண்டு தடவை அதையே திருப்பிக் கூறிவிட்டாய்! இன்று காலை நான் வந்ததுமே நீயாகவே வலுவில் வந்து இம்மாதிரி கூறினாய் அது மட்டுமல்லாமல் நீ குமரேசனின் அறைக்கதவு திறந்திருந்ததாகவும் அறை காலியாக இருந்ததாகவும் என்னிடம் கூறினாய்" என்று நிறுத்தினார்.

"ஆம்" என்ற பாவனையில் தலையை ஆட்டினான் ஏகாம்பரம்.

"ஏகாம்பரம் என்ற பெயரில் போலீஸாருக்கு டெலிபோன் செய்து தகவல் கொடுத்தது நீ அல்ல என்று வேறு

யாரோ உனது பெயரை உபயோகித்து இருப்பதாகவும் கூறி ளுய்!"

"அது உண்மைதான் ஸார்."

அப்பொழுதுதான் பிரேமகுமாரி அங்கு வந்து காத்திருப்பதைக் கவனித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ஏகாம்பரத்தை வெளியே அனுப்பினுர்,

பிரேமகுமாரி! கொலையுண்ட இந்த மனிதனைப் பார்த்ததில்லையா நீ?"

ஒரே ஒரு தடவை அதுவும் சில விஞடிகள் பார்த்திருக்கிறேன்.

பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டாயா?

ஆம் என்ற பாவனையில் தலை ஆட்டினுள் பிரேமகுமாரி.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி யோசனையோடு தரையை குனிந்து பார்தது உட்கார்ந்திருந்தார்.

நீ இரவில் எங்கே தூங்குவது வழக்கம்? என்று கேட்டார்

இந்த ஹாலுக்கு நேர் மேலேயுள்ள அறையில்தான்: கூறும் விபரங்களை இன்ஸ்பெக்டரின் உதவியாளர் ஒரு நோட்டுபுத்தகத்தில் கவனமாக குறித்துக்கொண்டு வருவதை உணர்ந்தாள் பிரேமகுமாரி.

உனக்கு எதாவது சத்தம் கேட்டிருக்க வேண்டும். ஒரு போராட்ட சத்தம் ஒரு கூச்சல்?" என்று ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி பிரேமகுமாரி தலை அசைப்பதைப்

பார்த்துவிட்டு, எத்தனை மணிக்கு இந்தக் கொலை நடந்த தென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

இரவு ஒரு மணிக்கு நடந்ததாக என் தந்தை கூறினார்"

இல்லை என்று தீர்க்கமான குரலில் கூறினாள் பிரேம குமாரி.

எதனால் அவ்வளவு நிச்சயமாகக் கூறுகிறாய்? என்று விடாமல் கேட்டார் பரஞ்சோதி.

ஏனென்றால் கதவு சாத்தும் சத்தம் கேட்டது?—"

எந்தக்கதவு? என்று அவசரமாகக் கேட்டார் பரஞ் சோதி அவரது கேள்வி அவளை வினாடி நேரம் குழம்பிப் போகச் செய்தது,

அந்தக்கதவு! என்று ஹால்கதவை சுட்டிக்காட்டிய பிரேமகுமாரி நான் மாடியிலிருந்தபடி எட்டிப் பார்த்தேன். அப்பா நடந்து வருவது தெரிந்தது" என்றாள்.

சரி! அவர் அறையை நோக்கி நடந்து கொண்டிருந் தாரா? அப்பொழுது அவர் எந்த உடை உடுத்திக்கொண்டி ருந்தார்?"

நான் அவரைப் பார்க்கவில்லை என்று ஒரேயடியாக சாதித்த பிரேமகுமாரி அப்பொழுது இங்கே விளக்கு வெளிச் சம் இல்லை அது அப்பாதானா என்றும் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை" என்றாள்.

பரஞ்சோதி புன்னகை பூத்தார். வீணாக பரபரப்படை யாதே பிரேமகுமாரி! கொலையுண்ட ரங்கசாமி என்ற இந்த

ஆள் பெயர் பெற்ற கொள்ளைக்காரன். அவன் இங்கு ஏதாவது திருட முயன்றிருக்கலாம். அந்தப போராட்டத்தில் அவன் கொலையுண்டு இருக்கலாம் அதாவது அப்படியும் விஷயங்கள் நடந்திருக்கக்கூடும் என்றுதான் சொல்கிறேன்"

பிரேமகுமாரி வேகமாக தலையை ஆட்டினுள்.

அப்படி நடந்திருக்க முடியாது என்று நினைக்கிறயா? போராட்டத்தில் அவன் இறந்து விட்டதைக் கண்டு திகிலடைந்து உனது தந்தை தனக்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லியிருக்க முடியாதென்று நினைக்கிறயா? என்று விடாமல் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

இல்லை அப்படி நடந்திருக்க முடியாது! என்று தீர்க்கமாகக் கூறினுள் பிரேமகுமாரி.

நேற்றிரவு ஏதாவது அதிபயங்கரமான சப்தம் உனக்கு கேட்டதா?''

பிரேமகுமாரி பதில் ஒன்றும் சொல்லவில்லை.

மயானமாளிகையில் நீ ஏதாவது பயங்கர உருவங்களைப் பார்த்திருக்கிறயா?

அதெல்லாம் வெறும் கற்பனை என்று மெல்லிய குரலில் கூறிய பிரேமகுமாரி ஒரே ஒரு தடவை தோட்டத்துப் புல்வெளியில் ஒரு உருவத்தைப் பார்த்தேன் என்று நினைக்கிறேன் முழுகறுப்பு ஆங்கி அணிந்த உருவம் என்றுள்.

ஒரு பிசாசு! என்று புன்னகையோடு கேட்டார் பரஞ்சோதி.

பிரேமகுமாரி மெதுவாக தலையை அசைத்தபடி இன்னெரு விஷயமும் நீங்கள் கவனிக்கவேண்டும். நான் ஒரளவு

திகில் வாய்ப்பட்டிருக்கிறேன் அதனால் நான் பல விஷயங்களை கற்பனை செய்து கொண்டிருக்கவும் கூடும். சில சமயங்களில் என் அறையில் நான் இருக்கும்பொழுது நிசப்தத்தில் இந்த இடத்தில் காலடியோசைகள் கேட்பதைப்போன்ற சப்தங்கள் எனக்குக் கேட்கும் அதோடு எங்கிருந்தோ சங்கநாதமும் ஆலாட்சி மணியோசையும் ஒலிப்பதைப்போலவும் தோன்றும்!" என்று நிறுத்தினாள்.

அந்த சப்தங்களெல்லாம் உனக்குத் தெளிவாகக் கேட்குமா?"

"கேட்கும்"

"அப்படி இருந்தும் நேற்றிரவு உனக்கு எந்தவித போராட்ட சத்தமும் கேட்கவில்லையா? நன்றாக நினைவுபடுத்திச் சொல் பிரேமகுமாரி, நன்றாக நினைவுபடுத்திச் சொல்!' என்று விடாமல் கேட்டார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி.

பிரேமகுமாரி அளவு கடந்த கதிகலக்கத்தில் இருந்தாள். "எனக்கு எதுவும் ஞாபகமில்லை— என் காதில் எந்தச் சப்தமும் விழவில்லை"

"எந்தச் சப்தமும் 'விழவில்லையா?" என்று வற்புறுத்திக் கேட்ட பரஞ்சோதி, "கொலையுண்டவன் தடாலெனக் கீழே விழுந்திருக்க வேண்டும் நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாலும் அந்த சத்தத்தில் விழித்திருக்க வேண்டும் நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை. சொல் பிரேமகுமாரி சொல்லு ஒன்றுமில்லாத விஷயத்தை நீ ஏதோ மர்மமாக்குகிறாய். உண்மையிலேயோ அல்லது கற்பனையிலோ நீ கண்ட கறுப்பு அங்கி உருவத்தை எண்ணி ரொம்பவும் கதிகலங்கிப் போயிருக்கிறாய்" என்று கூறிக்கொண்டே வந்தவர் தனது குரலை ரொம்பவும் ஆதரவாகவும், இனிமையாகவும்,

COMICS PDF TIMES

மாற்றிக்கொண்டு, "கள்ளடடியே ஏதோ சத்தம் கேட்டு நீ உன் அறைக்கதவைத் திறந்து கொண்டு வந்திருக்கிறாய். அப்பொழுது ஒன்றுமில்லை அம்மா என்பதைபபோல உனது தந்தையின் குரல் உனக்கு கேட்டிருக்கிறது அப்படித்தானே அதுதானே நடந்தது?'' என்று கேட்டார்.

பரஞ்சோதியின் குரலில் காணப்பட்ட கருணை, பிரேம குமாரியை ஏமாந்து போகச் செய்தது."

"ஆம்"

"அப்பொழுது உன் தந்தை படுக்கைக்குச் செல்வதற்காக சட்டை முதலியவற்றை கழற்றிவிட்டு பனியனுடன் தானே காட்சியளித்தார்?"

"ஆமாம்" என்று மீண்டும் கூறினாள் பிரேமகுமாரி. இன்ஷ்பெக்டர் பரஞ்சோதி மெதுவாக தலையை ஆட்டிவிட்டு "இப்பொழுதுதான் சொன்னாயே அவரைப் பார்க்கவே இல்லை என்று" என்று நிறுத்தினார்.

சட்டென்று உணர்வு அடைந்த பிரேமகுமாரி, "நீங்கள் என்னை மடக்கப் பார்க்கிறீர்கள்! உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லமாட்டேன்! என் காதில் எந்த சப்தமும் விழவில்லை நான் எதையும் பார்க்கவில்லை. என் தந்தை இந்த இடத்திற்கு வரவேயில்லை அது அவர் குரலும் இல்லை" என்று படபடப்போடு பேசினாள்.

"அது என் குரல் சுவாமி" என்று ஒரு குரல் வந்தது. பரஞ்சோதி சட்டென்று திரும்பிப் பார்த்தார். வாயிற்படியருகே புன்னகை பூத்தபடி நின்று கொண்டிருந்தான் குமரேசன்.

"என் பெயர் குமரேசன் காலஞ்சென்ற கனவான் எந்த நிலையில் இருக்கிறார்?"

'குமரேசன்! ம்?" என்று சுவாரஸ்யத்தோடு குமரேசனை மேலும் கீழும் பார்த்தார் பரஞ்சோதி.

அது என் குரல்தான் சுவாமி என்று மீண்டும் கூறினன் குமரேசன்.

அப்படியா?

பிறகு சற்றும் எதிர்பாராத நிலையில் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தனது குறுக்கு விசாரணையை நிறுத்திக்கொண்டு தனது உதவியாளனையும் அழைத்துக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியே சென்றார்.

பிரேமகுமாரி அளவுகடந்த வியப்போடு குமரேசனை வெறிக்கப் பார்த்தாள்.

அது உங்கள் குரல் அல்ல என்று தீர்க்கமாகக் கூறிய பிரேமகுமாரி பிறகு ஏன் அதை உங்கள் குரல் என்று கூறினீர்கள்? போலீசார் இங்குள்ள எல்லோரையும் சந்தேகிக்கிறார்களென்று உங்களுக்குத் தெரிகிறதா உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா நீங்களும் நானும் சேர்ந்து கொண்டு இப்படி ஒற்றுமையாய் பேசுவதாக அவர்கள் நினைக்கமாட்டார்களா என்று பதறினள்,

ரொம்ப சுவாரஸ்யமானவிஷயம்தான் என்று சிரித்தான் குமரேசன், பிரேமகுமாரி கதவுப் பக்கம் சென்று வெளியே பார்த்தாள். பரஞ்சோதியும் அவரது உதவியாளரும் ஏதோ ஆழ்ந்த சர்ச்சையில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்ததும் அவள் மனம் சோர்வடைந்தது

மீண்டும் குமரேசன் இருந்த இடத்திற்கு திரும்பி வந்தாள். அவர்கள் விரைவில் திரும்பி வருவார்கள். வந்த பிறகு

என்னே என்னென்ன கேள்விகள் கேட்கப் போருர்களோ? இந்த நிலையில் நீங்கள் இருக்கும் இடத்தில் ஒரு புத்திசாலி இருந்தால் எனக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும்! என் மனதிலுள்ளதை திறந்து கூறி எனக்கு உதவி செய்யும்படி நான் மன்ருடலாம் ஆனுல் நீங்கள் ஒன்றுக்கும் உதவாத கோமாளி பொறுப்பற்ற கோழை! என்ருள்.

என்னைத் திட்டியது போதும்! என்று கடுமையான குர லில் கூறிய குமரேசன் உன்னுடைய பைத்தியக்காரத்தனத் திற்கு நீதான் வெட்கப்பட்டுக் கொள்ள வேண்டும்! நீ என்ன சொல்லவேண்டுமாஞலும் தடங்காமல் என்னிடம் சொல்லு! என்ருன்.

உண்மையில் அவளால் மட்டும் அப்படிச் சொல்ல முடிந் தால் அப்பொழுது ஏகாம்பரம் அங்கே வந்ததால் அவர்கள் பேச்சு தடைப்பட்டது. வழக்கம்போல ஓசைப்படாமல் உள்ளே நுழைந்தான் ஏகாம்பரம்.

புதிதாக வரவேண்டிய இன்னொரு விருந்தினரும் வந்து விட்டார். அம்மா நாகநந்தி அடிகள் வயதானவர்தான் அவ ரது தலைமுடி துல்லியமாக நரைத்திருந்தது. கண்ணுடியும் அணிந்திருந்தார். அவர் குரல் மிருதுவாக இருந்தது. அவர் நடந்துகொண்ட தோரணை ஏராளமான நண்பர்களோடு கலந்து பழகி அனுபவம் பெற்றவர் போலிருந்தது.

வணக்கம் பிரேமகுமாரி! நான்தான் நாகநந்தி அடிகள் கிம்ப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து நடந்துதான் வந்தேன் அங்கு ஏதாவது வாகனம் அனுப்புவீர்கள் என்று எதிர் பார்த்தி தேன் என்ருர்.

உள்ளபடியே அந்த நேரத்தில் ஒரு புது விருந்தினர் வந்து சேர்ந்தது பிரேமகுமாரியை சங்கடத்தில் ஆழ்த்தியது.

மன்னித்துக் கொள்ளுங்கள் அடிகளே! இன்று காலையிலிருந்து நாங்கள் கொஞ்சம் தடுமாறிப்போயிருக்கிறோம் ஏகாம்பரம்! அடிகளின் சாமான்களை மூன்றும் நம்பர் அறைக்கு எடுத்துக் கொண்டுபோ என்றாள் பிரேமகுமாரி,

நாகநந்தி அடிகள் சிறிது அதிர்ச்சியடைந்தவராக காணப்பட்டார். தடுமாற்றமா இயற்கையழகு பொங்கி வழியும் இந்த அற்புதமான இடத்திலே ஏதாவது விபரீதம் நடந்துவிட்டதா என்று துக்கத்தோடு கேட்டார்.

எல்லாவற்றையும் என் தந்தை உங்களுக்குச் சொல்வார் என்று கூறிய பிரேமகுமாரி குமரேசனின் பக்கம்திரும்பி இவர்தான் குமரேசன் என்று அறிமுகம் செய்து வைத்தாள்

அந்த சமயத்தில் இன்ஸ்பெக்டர் வேகமாக உள்ளே வந்தார்.

பிரேமகுமாரி தோட்டத்தில் யாராவது நடிகர்கள் வந்திருக்கிறார்களா என்று ஆவசரமாகக் கேட்டார்.

"நடிகர்களா?" என்று வியப்போடு அவர் முகத்தை வெறிக்கப் பார்த்தாள் பிரேமகுமாரி.

பரஞ்சோதி பொறுமையிழந்தவராய் "வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கும் சினிமா நடிகர்கள் இம்மாதிரி பழங்கால கட்டடங்களுக்கு படமெடுக்க வருவார்கள். இந்த தோட்டத்தில் யாரோ ஒரு மனிதன் தலைமுதல் கால்வரை கறுப்பு அங்கி அணிந்து வந்து கையிலே ஒரு நீள துப்பாக்கி வைத்துக்கொண்டு நடமாடுவதாக எனது போலீஸ்காரரில் ஒருவர் கூறினர். ஆண்டவனே அதோ அந்த உருவம்!" என்று பரபரப்புடன் தோட்டத்து இருளைச்சுட்டிக் காட்டினார்.

அந்த கிளுடி ப்ரேமகுமாரியை தனது முரட்டுக் கரங்க ளால் கட்டிப் பிடித்து வேகமாக அப்பால் இழுத்து விட்டான் குமரேசன் அந்தக் கணமே அவள் சற்றுமுன் நின்றுகொண்டி ருந்த இடத்தை ஊடுருவிக்கொண்டு ஒரு துப்பாக்கிக்குண்டு "விர்ர்" என்று பறந்து சென்று எதிர் சுற்றிலிருந்த கண்ணா டியின் மீது தாக்கி தூள் தூளாக சிதறிப்போகச் செய்தது குமரேசன் மட்டும் தன்னை அப்பால் இழுத்து விடாமல் இருந்திருந்தால் தன் பிணமாகியிருப்போமென்று புரிந்து கொண்டாள் ப்ரேமகுமாரி.

* * *

# அத்தியாயம் 9

தோட்டம் முழுவதையும் நன்றாக அலசி அலசித்தேடியும் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதிக்கு எந்தவித தடயமும் கிடைக்க வில்லை. எனவே இன்ஸ்பெக்டர் வேதாசலத்தை அந்த வேலை யில் ஈடுபடுத்திவிட்டு அவர் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பயங்கரமான அந்த இரவைப் பொழுது எவ்வளவு சங்க டத்துடன் கழிந்தது என்று ப்ரேமகுமாரிக்கு சரியாககூட

நினைவு இல்லை. போலீஸ் கமிஷனர் ஆபீஸைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த வீட்டில் நடமாடியது, அவளுக்கு சிறிது தைரியத்தைக் கொடுத்தது. ஆனால் அந்த அதிகாரிகளின் நடமாட்டம் கர்னல் வெள்ளியப்பாவுக்கு எரிச்சலை மூட்டியதாகவே தோன்றியது. அதிருஷ்டவசமாக போலீஸாரெல்லாம் பார்க்க அடக்கமாகவே நடந்துகொண்டார்கள்.

அன்றைய நாடகத்தால் பாதிக்கப்படாத நபர்கள் இரண்டே இரண்டுபேர் தான் ஒருவன் குமரேசன். மற்றொரு ஆசாமி நாகநந்தி அடிகள்.

நாகநந்தி அடிகளுக்கு சளசளவென்று பேசும் துர்க்குணம் இருந்தது. அதோடு அவரது பேச்சும் சுவாரஸ்யமில்லாத வீண் கதையாகவே இருந்தது. இருந்தபோதிலும் மைனுவதிக்கு மட்டும் நாகநந்தி அடிகளை ரொம்ப பிடித்திருந்தது.

குமரேசனின் போக்கு பிரேமகுமாரியை குழப்பமடையச் செய்தது அவளுக்குப் பிடிக்காத எவ்வளவோ குறைபாடுகள் குமரேசனிடம் இருந்தபோதிலும், அவனிடமிருந்த வேறு சில கவர்ச்சிகள் அவள் உள்ளத்தை வெகுவாக ஆகர்ஷித்தன. சில சமயங்களில் தனக்கு அவன்மீது ஏற்பட்டிருக்கும் அன்பு எவ்வளவு ஆழமானது என்பதை சிந்தித்துப் பார்க்கக்கூட அவளால் துணிய முடியவில்லை. அன்றைய தினம் நடந்த துப்பாக்கி பிரயோகத்தால் அவர்கள் இருவருடைய உயிருக்குமே ஆபத்து ஏற்பட்டிருந்த போதிலும், குமரேசன் அந்த நிகழ்ச்சியை சிறிதுகூட லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

அன்று பிற்பகல் குமரேசனைச் சந்தித்து கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தாள் பிரேமகுமாரி.

"இங்கு விசாரணை நடத்துவதற்காக இன்ஸ்பெக்டர் கந்தாபபாவை கமிஷனர் ஆபீஸிலிருந்து அனுப்பி வைக்கப்

போகிறார்களென்ற வைஜயந்தி சொன்னாள்—" என்று ஆரம்பித்தாள் பிரேமகுமாரி.

"கந்தப்பா!" என்று இகழ்ச்சியாகக் கூறிய குமரேசன், "அந்த மாஜி பனிசரையா? என்று கேட்டுவிட்டு பிரேமா குமாரியின் மனோபாவத்தை ஒருவாறு யூகித்தவனாய், அந்த அம்மையார் வேறு இன்னும் என்ன சொன்னார்கள்?"—என்று கேட்டான்.

அவர்கள் இருவரும் மகாண மாளிகைத் தோட்டத்திலே அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களினூடே நடந்தபடி பேசிக் கொண்டு சென்றார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் குமரேசனைப் பார்த்திருந்தால் பிரேமகுமாரி விழுந்தடித்துச் ஓடி மறைந்திருப்பாள். ஆனால் இப்பொழுது அவன் அருகாமையிலிருப்பது, அவளுக்கு ஒரு விசித்திரமான மாறுதலுக்கும் அவளாலேயே காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை.

"வைஜயந்திக்கு குற்ற ஆராய்ச்சியில் அளவுகடந்த மோகம் உண்டு. சென்ற பல வருஷங்களில் நடந்த பயங்கர நிகழ்ச்சிகளைப் பற்றிய பத்திரிகைச் செய்திகளை எல்லாம் அவள் ஒன்று விடாமல் சேமித்து வைத்திருக்கிறாள். கொலையுண்ட இந்த ரங்கசாமி பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெரிய தங்கக் கொள்ளையில் சம்பந்தப் பட்டவனென்று சாதிக்கிறாள். அந்த விவகாரத்தில் மற்றொரு பெரிய கொள்ளைக்காரனும் சம்பந்தப்பட்டிருந்தானாம். அவன் பெயர் சரபோஜி.

"சரபோஜி!" என்று அவசரமாகக் கூறினான் குமரேசன் அப்பொழுது அவன் முகம் மாறுபட்டதைக் கவனித்தாள் பிரேமகுமாரி.

தொடர்ந்து பேசினான் குமரேசன்.

"சரபோஜியைப் பற்றி பேசுகிறாள்? அவள் கொஞ்சம் உஷாராக இருப்பது நல்லது—" என்று சற்று கடுமையாக கூறியவன் சட்டென்று தனது போக்கை மாற்றியபடி, மன்னித்துக்கொள், என்னவோ யோசனையில் பேசிவிட்டேன்!" என்று புன்னகை பூத்தான்.

"நீங்கள் சரபோஜியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"வெறும் வதந்திகள்தான் கேள்விப் பட்டிருக்கிறேன்" என்று சிரித்தபடி கூறிய குமரேசன், மைனுவதி வேறு என்ன சொன்னாள்?" என்று ஆவலாகக் கேட்டான்.

"அவள் என்னவோ சொன்னாள். ஏராளமான தங்கம் மாயமாய் மறைந்து விட்டது என்றும், அது எங்கோ புதைபுண்டு கிடப்பதாகவும், அநேகமாக அது அந்த மயான மாளிகைத் தோட்டத்தில்தான் புதைக்கப்பட்டிருக்கக் கூடுமென்று, தான் நம்புவதாகவும் அவள் கூறினாள். அதுமட்டும் அல்லாமல் ஏகாம்பரத்தை கையில் போட்டுக்கொண்டு ரங்கசாமி இந்த மாளிகைக்குள் புகுந்து அந்த தங்கம் இருக்கும் இடத்தை தேடி அலைந்திருக்கிறானென்றும் மைனுவதி கூறினாள்- ஏகாம்பரத்தின் உதவியால்தான் ரங்கசாமி இந்த மாளிகையில் புகுந்திருக்க வேண்டுமென மைனுவதி கூறினாள். இந்த விவரங்களையெல்லாம் நாகநந்தி அடிகளிடம் அவள் சொல்லிக் கொண்டிருந்தபோதுதான், நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னை மைனுவதிக்கும் பிடிக்காதாகலால், என்னிடம் இம்மாதிரி விஷயங்களையெல்லாம் சொல்ல மாட்டாள்.

இருவரும் கொஞ்சதூரம் மௌனமாக நடந்தனர்.

"உனக்கு நாகநந்தி அடிகளைப் பிடிக்கிறதா?" என்று கேட்டான் குமரேசன்.

"பார்த்தால் நல்லவராகவே தோன்றுகிறது"

குமரேசன் சிறுடிநேரம் புன்னகை பூத்துவிட்டு பிறகு திடீரென்று, நீ ஏன் சென்னைக்குப் போய் தங்கி இருக்கக் கூடாது?" என்று கேட்டான்.

பிரேமகுமாரி சட்டென்று நின்றுள். அவன் முகத்தையே வெறிக்கப் பார்த்தபடி, "மயான மாளிகையை விட்டுப் போகச் சொல்கிறீர்களா? ஏன்?" என்று கேட்டாள்.

குமரேசன் அவள் முகத்தையே பார்த்தபடி, "மயான மாளிகை அவ்வளவு ஆரோக்கியமான இடமாக எனக்குத் தோன்றவில்லை—சொல்லப்போனுல் இது ஒரு ஆபத்தான இடம்" என்றுன்,

"எனக்கா?" என்று அவநம்பிக்கையோடு கேட்டாள் பிரேமகுமாரி.

"ஆம்" என்ற பாவனையில் தலையசைத்த குமரேசன் "உனக்குக் கூடத்தான்! உனக்கு சிறு துன்பம் ஏற்பட்டால் கூட அதைத் தவிர்ப்பதற்காக தங்களது உயிரையே பணயம் வைக்கக்கூடிய பலர், உன்னைச் சுற்றி இருக்கிருர்கள் என்றுலும், உனக்குக்கூட இங்கு ஆபத்து ஏற்படலாம்!" என்றுன்

"எனக்காக உயிரைக்கொடுக்கக் கூடியவர்கள் என்றுல்? என் தந்தையைச் சொல்கிறீர்களா?" என்று இடக்காகக் கேட்டாள் பிரேமகுமாரி.

"நான் இரண்டு பேரைக் குறிப்பிட்டேன் உதாரணமாக சிற்றம்பலம் ஒருவர்!"

சிற்றம்பலம் தன்மீது காதல் கொண்டு அலைகிருர் என்று குமரேசன் மறைமுகமாகக் குறிப்பிட்டது அவளுக்கு முதலில்

ஆத்திரத்தை ஏற்படுத்தியபோதிலும் அதைச் சமாளித்து வாய்விட்டுச் சிரித்தாள்.

"என்ன பைத்தியக்காரத்தனம், குமரேசன் சிற்றம்பலத் திற்கு என் அப்பாவின்வயதாகிறது!"

"ஆனால் அவர் உள்ளம் ஒரு இளைஞனின் உள்ளத்தைதப் போல உன்னைக் காதலிக்கிறது!" என்று நிதானமாகக் கூறிய குமரேசன், "அந்த அரைக் கிழவருக்கு உன்மீது எல்லையற்ற ஆசை இருக்கிறது பிரேமகுமாரி இன்னொரு ஆள் இருக்கிறார் அந்த ஆளுக்கும் உன் மீது துல்லியமான அன்பு இருக்கிறது!" என்று நிறுத்தினான்.

"அத்துடன் வக்கிரபுத்தியும் நிறைய இருக்கிறது!" என்று தாக்கினாள் பிரேமகுமாரி.

அந்தச்சமயத்தில் மாளிகையில் தனக்கு ஒரு முக்கிய வேலை இருப்பது பிரேமகுமாரிக்கு நினைவு வந்தது இருவரும் மயான மாளிகைக்குத் திரும்பினர்

சென்னைக்குத் திரும்பிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ரொம்பவும் குழம்பிப் போயிருந்தார். ஆனால் அவரது உதவி யாளர் நினைத்ததைப்போல அவர் அடியோடு குழம்பிப்போயி ருந்ததைப் போல அவர் அடியோடு குழம்பிப்போய்விடவில்லை மயானமாளிகையில் மர்மத்தோடு சரபோஜியின் மர்மமும் பிணைக் கிடக்கிறதென்று அவருக்குத் தெளிவாகத் தெரிந் தது.

ஆபீசை அடைந்ததும் சரபோஜியின் தங்கம் கொள்ளை யைப்பற்றிய கரரார்டுகளை கொண்டுவரச் சொல்லி நன்ரு கப் பரிசோதித்துப் பார்த்தார். அவற்றிலிருந்து இரண் டொரு குறிப்புகளையும் எழுதிக் கொண்டார்.

அன்றையதினம் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் எந்த இடத்திலிருந்து நடத்தப்பட்டது என்று அவர் கண்கூடாகவே பார்த்தார் மயான மாளிகையின் தோட்டத்தில் பிரம்மாண்டமான விருட்சங்கள் இருந்தபோதிலும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தவன், தற்காலிகமாகத்தான் அங்கு ஒளிந்து கொள்ள முடியும். ஆனால் அவன் யாருடைய கையிலும் சிக்காமல் அன்றையதினம் மாயமாய் மறைந்தது, அவருக்கு புரியாத மர்மமாகவே இருந்தது அந்தத் தோட்டத்திலிருந்து புதர்களின் மறைவில் எங்காவது ஒரு சுரங்கவழி இருந்திருக்கலாம் என்று நினைத்தார் பரஞ்சோதி.

ஆனால் இதைப்பற்றி அவர் இன்ஸ்பெக்டர் ரகுநாத்திடம் கலந்தபோது ரகுநாத் இகழ்ச்சியாக, "பாதாளசுரங்கங்களும் பயங்கர படிக்கட்டுகளும், மர்மநாவல்களில் காணப்படும் குப்பைச் சரக்குகள்! என்று இகழ்ச்சியாகக் கூறினார்.

"இருந்தபோதிலும் மயானமாளிகையைப் பொருத்த வரையில் நான் அவற்றை நம்பத் தயாராக இருக்கிறேன்," என நிதானமாகக் கூறிய பரஞ்சோதி, "அது ரொம்ப பழங்கால கட்டடம்!" என்று கூறிவிட்டு சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவராய், "ரகுநாத்! நீங்கள் எப்பொழுதாவது சரபோஜியை சந்தித்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

ரகுநாத் அவரை வெறிக்கப்பார்த்தபடி, "சரபோஜியையா? அந்தப் பிரசித்திபெற்ற கொள்ளைக்காரனையா? இல்லை நான் அவனை பார்த்ததில்லை அவன் இப்பொழுது மலேயாவில் தான் இருக்கிறான் இல்லையா?" என்று கேட்டார் "அவன் இங்குதான் இருக்கிறான் எனக்கு அப்படித் தான் தோன்றுகிறது" என்றார் பரஞ்சோதி

"எனக்கு அப்படித் தோன்றவில்லை" என்றுகூறிய இன்ஸ்பெக்டர் ரகுநாத் வினாடிநேர யோசனைக்குப் பிறகு, "அவன்

இவன்தான் இருக்கிறான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி இருந்திருந்தால் அவன் இத்தனை ஆண்டுகள் சும்மா இருந்திருப்பானா? கடைசியாக அவன் நடத்திய கொள்ளையில் அவனைப்போன்ற குற்றவாளிகள், தாங்கள் சம்பாதிக்கும் பணத்தை கண்மூடித்தனமாக விரயம் செய்து விடுவது வழக்கம் அதோடு அவன் பிறவியிலேயே பைத்திய வெறி கொண்டு திரிபவன்" என்று நிறுத்தினார்.

"உங்களுக்கு அது எப்படி தெரியும்?" என்று அவசரமாகக் கேட்டார் பரஞ்சோதி.

இன்ஸ்பெக்டர் ரகுநாத் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தபடி. "சரோஜி உண்மையில் பைத்தியவெறி பிடித்தவன்தான்! அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை" என்றார்.

"எனக்கு அது சமீபகாலம்வரை தெரியாது! சிறையிலே சிவாமியோடு பேசிக்கொண்டிருந்தபோது தான் நான் அதைத் தெரிந்துகொண்டேன்" என்று கூறிய பரஞ்சோதி "உங்களுக்கு அது எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

அதற்கு ரகுநாத் கூறிய விளக்கம், உண்மையிலேயே பரஞ்சோதி கேள்விப்பட்டதாக இருந்தது.

"பல வருஷங்களுக்கு முன்னால் நான் சரோஜியின் வழக்கு ஒன்றில் புலன் விசாரணை செய்யவேண்டி வந்தது அதாவது இந்த தங்கக் கொள்ளை நடைபெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த சம்பவத்தைப் பற்றி சொல்லுகிறேன் அப்பொழுது நீங்கள் சரோஜியின் வழக்கில் ஈடுபடவில்லை அந்தச் சமயத்தில் சரோஜியைப் பற்றி எங்களால் எந்த தகவலும் சேகரிக்க முடியவில்லை ஆனால் அவன் கையால் எழுதப்பட்ட ஒரு சிறு துண்டுக்காகிதம் மட்டும்

எங்களிடம் கிடைத்திருந்தது. அந்தச் சமயத்தில் நான் லைப் இன்ஸ்பெக்டராக இருந்தேன். சரபோஜியின் புகைப்படமும் கைரேகை அடையாளமும் எனக்கு கிடைக்கவில்லை என்றாலும் அவனது குடும்பத்தாரைப்பற்றி எனக்கு தகவல்கள் கிடைத்தன. அவனது தந்தை ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இறந்திருக்கிறார் அவனுடைய சகோதரி தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறாள் அவனது பாட்டனார் ஒரு கொலையை செய்துவிட்டு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது இறந்திருக்கிறார் என்று நிறுத்தினார்.

இந்த விஷயங்களெல்லாம் பரஞ்சோதிக்கு புதுமையாக இருந்த போதிலும் ரங்கசாமி கூறியதை இவை உண்மையென்று நிரூபித்தன.

அந்தச் சமயத்தில் சரபோஜி சம்பந்தப்பட்ட வேறு சில தஸ்தாவேஜுகளை ஒரு குமாஸ்தா எடுத்து வந்தார். அவற்றையும் புரட்டி சில குறிப்புகளை எழுதிக் கொண்டார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி அவரது செயல்களை ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தார் ரகுநாத்.

"என்ன பரஞ்சோதி! மாயமாய் மறைந்த தங்கத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கிறதா? அந்த தங்கமெல்லாம் எங்கோ ஓரிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று நினைத்ததும் உன் நாக்கில் ஜலம் ஊறுகிறதா பாவம் இந்த வழக்கு விசாரணை சமயத்தில் இன்ஸ்பெக்டர் கந்தப்பா இங்கு இல்லாமல் கடல் கடந்து போய்விட்டார். அவருக்கு இந்த வழக்கு விபரங்களெல்லாம் தலைகீழ்ப்பாடமாக இருக்கின்றன உள்ளபடியே இந்த படுகொலைக்கும் சரபோஜிக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று நீங்கள் நினைத்தால் பேசாமல் இன்ஸ்பெக்டர் கந்தப்பாவை உடனே புறப்படும்படி தந்தி கொடுப்பது தான் புத்திசாலித்தனம். உங்களுடைய இடத்

நம் நான் இருந்தால் அதைப்பேதான் செய்திருப்பேன்" என்றார்.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தன்னெதிரே இருந்த தஸ்தாவேஜுகளை மெதுவாகப் புரட்டினார்'

ரங்கசாமியைப் பொறுத்தவரையில் எதிர்பார்த்த முடிவைத்தான் அவன் அடைந்தான் தண்டனை பெற்ற பொழுது தன்னை சரபோஜி துரோகம் செய்துவிட்டானென்று ஓரேயடியாக அமர்க்களப்படுத்தினான் ஆனால் அவனும் தனுக்கு சுந்தரமும் எவ்வளவோ பேருக்கு துரோகம் செய்து காட்டிக் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் இருவரையும் நான் நன்றாக அறிவேன். தங்கக்கொள்ளை நடப்பதற்கு முன்னால் சரபோஜியை காட்டிக்கொடுக்க அவர்கள் இருவருமே தயாராக இருந்தார்கள்

இ பொழுது தனுக்கு சுந்தரம் எங்கே என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்ட இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தனது தலையை இலேசாக ஆட்டிவிட்டு தன் முன்னால் இருந்த தஸ்தாவேஜுகளை அப்பால் ஒதுக்கியவராய் அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லைநீங்கள் நமதுடிவிஷன்களுக்கு சொல்லியனுப்பி தனுக்கு சுந்தரம் எங்கேயாவது தென்பட்டால் என்னை வந்து பார்க்கும்படி சொல்லுங்கள் அவனைக் கொஞ்சம் எச்சரிக்கை செய்து வைக்கவேண்டும்" என்றார்.

இன்ஸ்பெக்டர் ரகுநாத் சிரித்துவிட்டு "உங்களால் தனுக்கு சுந்தரத்தை எச்சரிக்கை செய்ய முடியாது. அவன் ரொம்ப தெரிந்தவன் அதிகம் படித்தவன் உள்ளபடியே இப்படிப்பட்ட புத்தி கூர்மையுள்ள குற்றவாளிகளைத்தான் எனக்கு ரொம்ப பிடிக்கும் ஏனென்றால் அவர்களை சிக்க வைக்க நாம் அதிக கஷ்டப்பட வேண்டியதில்லை அவர்களாகவே வலுவில்வந்து சிக்கிக் கொள்வார்கள் என்றான்.

அவனுகவே சிக்கிக் கொள்வதால் நான் ஒன்றும் கவலைப் படப்போவதில்லை என்று கூறிய பரஞ்சோதி ஆனுல் அவன் சரபோஜியிடம் சிக்கிக் கொள்ளுவாரே என்று கவலைப்படு கிறேன் நிச்சயம் இதுநடக்கக்கூடியது" என்றார் உள்ளபடியே இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ஒருதிரிகால் ஞானியைப்போலத் தான் பேசினுர்

பிறகு டெலிபோன் மூலம் மயான மாளிகையிலிருந்து ஸப்-இன்ஸ்பெக்டர் வேதாந்தத்துடன் பேசினு* பரஞ்சோதி அங்கு எந்தவித விசேஷமும் நடைபெறவில்லை என்று பதில் வந்தது

மைனுவதி அங்கிருந்து கிளம்பிவிட்டாளா?" என்று கேட்டார் பரஞ்சோதி.

அவளா! என்று இகழ்ச்சியுடன் கேட்ட வேதாந்தம் அவள் கடைசி நிமிஷம்வரை இங்குதான் இருப்பாள் அவ ளும் சரி நமது துப்பறியும் நாய்களும் சரி குற்றவாளி அகப் படும்வரை மோப்பமிட்டுக் கொண்டே அவர்கள் அலைந்து கொண்டிருப்பார்கள்! இந்த குமரேசன் மறுபடியும் அரை கிறுக்கு பிடித்தவன் போல் பேசிக்கொண்டு அலைகிறுன் என் றுர்.

"அவன் அ[illegible] இருந்தான்!" என்று அலட்சியமாகக் கூறினுர் பரஞ்சோதி.

குமரேசனைப் பற்றி தகவல்களை தெரிந்து கொள்வதில் பரஞ்சோதிக்கு அவ்வளவு அக்கறை இருக்கவில்லை.

ஆனல் பயங்கரமான [illegible] கொலை நடந்த பிறகும் மயான மா[illegible] வழக்கம் போல [illegible] கொண்டுதான் இருக்

றது என்று கேள்விப்பட்டதுதான் அவருக்கு வியப்பாக இருந்தது.

தொடர்ந்து பேசினார் வேதாந்கம் "பத்திரிகை நிருபர்கள் க னல் வெள்ளியப்பாவை சந்திப்பதற்காக வந்தார்கள். ஆனல் நான் அவர்கள் எல்லோரையும் தி ருப்பி விட்டேன். இங்கு ஒரு வதந்தி அடிபடுகிறது. அதாவது ரங்கசாமிதனது கூட்டாளி ரங்கசாமியைக் கொலை செய்து விட்டு கொள்ளைப் பொ ளோ டு ஓடிவிட்டான்—இப்படித் த ன் இங்கே நினைக்கிறார்கள்— ானும் அப்படித்தான், நினைக்கிறேன்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், ஸார்?"

"குப்பை!" கூறிய பரஞ்சோதி டெலிபோனைக் கீழே வைத்தார்,

★ ★ ★

# அத்தியாயம் 10

போலீஸ் விசாரணை ரொம்ப ஜரூராக நடந்து கொண்டிருந்தது. ஒ நவர்கூட பாக்கி விடாமல் எல்லாவழிகளிலும் விச ரணை ந த்தினர்கள். மனைவதியையும் அவன் மகள் நிலைமையையு கூட பே லீஸார் பாக்கிவிடவில்லை. நள்ளிரவுவரை விசாரணை நடத்திய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி

மயான மாளிகையிலிருந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தையும் நன்றாக புரிந்து கொண்டார்,

மைனாவதி உண்மையிலேயே வசதிகள் நிறைந்தவள், தனது கணவன் இறந்த பிறகு ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல தனது மகளோடு சுற்றி அலைகிறாள். ஒவ்வொரு ஊராக சென்று ஒவ்வொரு ஹோட்டலாக தங்கி, தனது நாட்களைக் கழிப்பதில் அவளுக்கு அலாதி உற்சாகமிருந்தது. அந்த அளவுக்கு அவளுக்கு பணவசதி இருந்தது.

சிற்றம்பலம் ஒரு தேயிலை கம்பெனியில் முதலீடு செய்திருந்தார், அந்த தேயிலை கம்பெனியும் அவ்வளவு செழிப்பாக நடைபெறவில்லை, பணம் முதலீடு செய்ததோடு நிறுத்திக் கொண்டு கம்பெனியின் நிர்வாக பொறுப்பை மற்றொரு கூட்டாளியிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார் சிற்றம்பலம்,

ஏகாம்பரத்தைப் பற்றிய விவரங்கள்தான் சிறிது [illegible] குறைவாக இருந்தன. இதற்கு நான் அவன் வேலைபார்த்த மூன்று இடங்களிலிருந்து சந்தேகத்தின் பேரில் வெளியேற்றப்பட்டிருக்கிறான். ஆனால் அவன் சிறைத்தண்டனை பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. அவரது கைரேகை அடையாளத்தை எப்படியாவது சேகரிக்கவேண்டுமென்று இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி குறித்துக்கொண்டார் இதற்குமுன் அவன் வேலைபார்த்த இடங்களிலெல்லாம் திடீர் திடீரென சிறு நகைகளும் சாமான்களும் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவனுக்குத் தெரியாமல் அவை காணாமல் போயிருக்க முடியாதென்றே எல்லோருக்கும் தோன்றி இருக்கும்,

கர்னல் வெள்ளியப்பாவைப்பற்றி ஒரு காகிதம் நிறைய எழுதி வைத்திருந்தார். இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி

கர்னல் வெள்ளியப்பா ராணுவத்திலே வைத்திய துறையில் வேலை பார்த்து வந்திருக்கிறார். யுத்தம் முடிவதற்கு சில காரணங்களுக்காக லீவு அளவு கடந்து எடுத்திருந்ததற்காக ராணுவ கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கிறார். பிறகு ராணுவ இலாகாவைச் சேர்ந்த தர்ம ஸ்தாபனத்தில் மேல் பொறுப்பான உத்தியோகத்தில் ஒன்று கிடைத்தது. அங்குள்ள நிதி மாயமாய் மறைய ஆரம்பித்ததைத் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது. அதன் விளைவாக போலீஸாரும் வழக்கு போடுகிறார்களென்று ஒரு வதந்தி உலாவ ஆரம்பித்தது. கர்னல் வெள்ளியப்பாவை நேரடியாக சம்பந்தப்படுத்தக் கூடிய சாட்சிகள் எதுவுமே இல்லாததால் போலீஸார் வழக்கு தொடரவில்லை. மாயமாய் மறைந்த தொகைக்கு ஈடாக பதில் தொகை கொடுக்கப்பட்டு விட்டதால், அந்த விஷயம் அத்துடன் அடங்கிவிட்டது. அதன் பிறகு மயான மாளிகையை வாங்கும் சமயத்தில்தான் கர்னல் வெள்ளியப்பாவின் பெயர் வெளிவந்தது.

கர்னல் வெள்ளியப்பா ராணுவத்தில் டாக்டராகப் பணியாற்றினார் என்ற செய்தி இன்ஸ்பெக்டர் பரஞ்சோதிக்கு புதுமையாக இருந்தது.

அன்று இரவு முழுவதும் மயான மாளிகையின் அமைப்பைப் பற்றிய படங்களை ஆராய்ச்சி செய்வதிலே தனது பொழுதை கழித்தார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி. கொலை நடந்த அறையின் அமைப்பைப் பற்றிய படங்களையும் ரொம்ப கூர்மையாக கவனித்துப் பார்த்தார், ஒரு விஷயம் மட்டும் அவருக்கு பூட்டை உடைத்தோ ஜன்னலை பெயர்த்தோ மயான மாளிகைக்குள் நுழையவில்லை. மாளிகைக்குள்ளிருந்த யாரோ அவனுக்குக் கதவைத் திறந்து விட்டவர்கள், கர்னல் வெள்ளியப்பாவோ, அவரது மகளாகவோ இருக்க முடியாது. யாராவது வேலைக்காரன்தான் திறந்தி

ஏக்க வேண்டும் அந்த வேலைக்காரன் ஏகாம்பரமாகத் தான் இருக்க வேண்டும். உள்ளிருப்பவர் உதவி இல்லாமல் அந்த வீட்டிற்குள் திருட்டுத்தனமாக உள்ளே நுழைபவரை காட்டிக் கொடுக்கும் மின்சாரமணி போன்ற சாதனங்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்தன. சொல்லப் போனால் அந்த மயான மாளிகை ஒரு பெரிய முற்றுகைக்கே தயாரா யிருந்தது. எந்த நேரத்திலும் ஒரு கொள்ளைக்காரன் வருவான் என்று முன்கூட்டியே கர்னல் வெள்ளியப்பா தயாராக இருந்ததைப் போலவே தோன்றியது.

அன்றிரவு அளவு கடந்த அயர்வோடு படுக்கைக்கு சென்றார் பரஞ்சோதி, தன்னை யாரும் டெலிபோனில் அழைக்கக்கூடும் என்று அவர் படுக்கைக்குச் சென்ற போதி லும் அன்று இரவு முழுவதும் எந்தவிதமான டெலிபோனும் வரவில்லை.

மறுநாள் காலை வெளியே புறப்படுவதற்கு முன்னால் பரஞ்சோதி, மயான மாளிகையிலிருந்த ஸப் இன்ஸ்பெக்டர் வேதாந்தத்திற்கு டெலிபோன் செய்தார்.

"எந்த வித விசேஷமும் இல்லை" என்று கூறிய வேதாந் தம், "நேற்று இரவு பூராவும் நான் படுக்கைக்கே செல்ல வில்லை, எந்தவிதமான விபரீதமும் இங்கு நடக்கவுமில்லை. அந்த பிசாசு நேரில் வரவுமில்லை, சத்தம் போடவுமில்லை" என்றார்.

"பிசாசு" என்று மகிழ்ச்சியாகக் கூறிய பரஞ்சோதி "உனக்கு பிசாசு வந்து காட்சி தரப்போகிறது என்று எதிர் பார்க்கிறாயா?" என்று கேட்டார்,

"அதெல்லாமில்லை" வர வர 'இந்த இடத்தில் ஏதோ அமானுஷ்ய சக்தி நடமாடுவதாக எனக்குத் தோன்ற ஆரம் பித்திருக்கிறது" என்றார்.

அபாஹஞ்சமான எதவும் எந்த இடத்திலும் கிடை யாதூர்" என்றார் பரஞ்சோதி.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதிக்கு வேறு இரண்டு வழக்கு கள் இருந்தன. அவற்றை விசாரித்துவிட்டு அவர் தன் ஆபீஸிற்குத் திரும்புவதற்கு வெகு நேரமாகி விட்டது. அவர் ஆபீஸிற்குத் திரும்பிய பொழுது அங்கிருந்த ஒரு குமாஸ்தா அவர் சற்றும் எதிர்பாராத ஒரு விவரத்தைக் கூறி னார்.

"சிற்றம்பலம் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார் அவரை பக்கத்து அறையில் இருக்கச்சொல்லி இருக்கிறேன்"

"சிற்றம்பலம்" என்று வியப்போடு புருவத்தை நெறித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி "அவருக்கு என்ன வேண்டு மாம்!" என்று கேட்டார்.

"அவர் உங்களை நேரில் பார்க்க விரும்புவதாகக்கூறினார். அதற்காக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருப்ப தாகச் சொன்னார்"

"அவரை இங்கு அழைத்து வா" என்றார் பரஞ்சோதி. சிற்றம்பலம் தன்னம்பிக்கை இல்லாத ஒரு பயங்கரவாதிபோல மெதுவாக உள்ளே நுழைந்தார்.

"மன்னிக்கவேண்டும், இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு இருக் கும் எவ்வளவோ வேலைகளில் என்னைப் பார்க்க முடியா தென்று சொல்லி அனுப்பி விடுவீர்களென்று நினைத்தேன்" என்று பவ்யமாகக் கூறிய சிற்றம்பலம், "சென்னையில் எனக்கு சில வேலைகள் இருந்தன. அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றார்.

"உட்காருங்கள் சிற்றம்பலம்!" என்று உபசரித்த பரஞ் சோதி, "இந்த வழக்கு சம்பந்தமாக உங்கள் மனதில் ஏற் படும் அபிப்பிராயங்களை விவரித்துக்கூற வந்திருக்கிறீர்களா" என்று கேட்டார்.

சிற்றம்பலம் புன்னகை பூத்தார் இந்த வழக்கு சம்பந் தமாக எனக்கு எந்தவித அபிப்பிராயமே கிடையாதென்று முன்பே உங்களிடம் கூறி இருக்கிறேன் இருந்தபோதிலும் பிரேமகுமாரி விஷயமாக நான் கவலைப்பட்டுக் கொண்டிருக் கிறேன் என்று மயங்கிய சிற்றம்பலம் தொடர்ந்து நீங்கள் அவளை குறுக்கு விசாரணை செய்தீர்கள் அதனால் அவள் ரொம்பவும் மனச்சங்கடமடைந்தாள் என்று நிறுத்தினார் அப்பொழுது இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ஏதாவது மேலே பேசுவார் என்று சிற்றம்பலம் எதிர்பார்த்த போதிலும் பரஞ் சோதி ஒன்றும் பேசவில்லை. எனவே தொடர்ந்து பேசினார் சிற்றம்பலம், "நான் உங்களிடம் சொல்லி இருக்கிறேன் என்று நினைக்கிறேன். எனக்கு பிரேமகுமாரியிடம் அளவு கடந்த அன்பு இருக்கிறது. இந்த விஷயத்தில் அவளது தந் தைக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்று நிரூபித்து அவரை உங்கள் கண் முன்னால் நிரபராதியாக்கிக் காட்ட எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்"

"பிரேமகுமாரியின் தந்தைக்கும் இந்தக்கொலை நிகழ்ச் சிக்கும் சம்பந்தம் உண்டென்று நான் எந்தக் காலத்திலும் சொல்லவில்லையே" என்று இடைமறித்தார் பரஞ்சோதி.

"ஒப்புக்கொள்கிறேன்!" என்று பவ்யமாக ஆரம்பித்த சிற்றம்பலம் பார்வைக்கு நான் அப்பாவி போல இருந்தா லும் விஷயஞானம் இல்லாதவன் அல்ல! அவரை நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும் சொல்லப் போனால் அந்த வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் என்னை யும் சேர்த்து நீங்கள் சந்தேகித்துத்தான் ஆகவேண்டும்"

என்று நிறுத்திவிட்டு பரஞ்சோதி வேண்டுமென்றே மௌனமாக இருந்தார். அடுத்தபடியாக சிற்றம்பலம் என்ன சொல்லப்போகிறார் என்பதை வியப்போடு எதிர்பார்த்திருந்தார்.

கடைசியாக சிற்றம்பலம் பேச ஆரம்பித்தார். தான் சொல்ல வந்த விஷயத்தை மிகச் சிரமப்பட்டு சொல்லுவதைப்போலுள்ள "பந்தா"வில் ஆரம்பித்தார். எனக்கு நிறைய சொத்து இருக்கிறது. அந்தப் பணத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டு கர்னல் வெள்ளியப்பா மீது ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை நீக்குவதற்காக பாடுபடத் தயாராக இருக்கிறேன் நாடுகளில துப்பறிவாளர்களை பணம் கொடுத்து நியமித்து உண்மையைக் கண்டுபிடிப்பவற்குப் பாடுபடுகிறார்கள் என்று படித்திருக்கிறேன்.

அதேபோல இங்கு போலீஸ் இலாகாவில் பணம் கட்டினால் எனக்கு தனியாக துப்பறிவாளர்களை ஒதுக்கித் தருவார்களா? அந்த வழக்கம் இங்கு உண்டா?" என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தலையை ஆட்டியபடி இல்லை என்றார்.

சிற்றம்பலத்தின் முகம் சோர்வடைந்தது "என்ன பரிதாபம்" இந்த நேரத்தில் எனக்குப் பரிபூரண உதவியளிக்கக் கூடிய ஒருவர் இங்கு இருக்கிறார் என்று மைனுவது ரொம்ப நிக்கமாக கூறினன் அவர் பெயர் கந்தப்பா என்று சொன்னான்.

பரஞ்சோதி சிரித்தார். இன்ஸ்பெக்டர் கந்தப்பா இந்த நேரத்தில் அயல் நாட்டில் இருக்கிறார்" என்றார்.

"அடாடா" என்று சோர்வோடு கூறிய சிற்றம்பலம் இது ரொம்ப பரிதாபத்திற்குரிய விஷயந்தான் மைனுவதி சொல்கிறான் என்று ஏதோ ஆரம்பித்தார்.

"அந்த அம்மாளின் உபயோகமில்லாத விஷயங்களை எவ்வளவோ சொல்கிறாள்!" என்று புன்னகையுடன் கூறிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி "இல்லை சிற்றம்பலம் இந்த விஷயத்தில் நான் உங்களுக்கு எந்தவித உதவியும் செய்வதற்கில்லை. நீங்கள் இந்த விவகாரத்தை எங்கள் கையில் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருங்கள். அதனால் நான் உங்களுக்கு எந்தவித நஷ்டமும் கிடையாது. உண்மையைக் கண்டுபிடிப்பதைத் தவிர எங்களுக்கு எந்த ஆசையும் கிடையாது. அநியாயமாக நாங்கள் யார் மீதாவது சந்தேகம் கொண்டிருந்தால் அதை நிச்சயம் போக்கிக்கொள்ளத்தான் பாடுபடுவோம்! எக்காரணத்தைக் கொண்டும் நிரபராதிகளுக்குத் தீங்கு செய்ய நினைக்கமாட்டோம் என்றார்.

அத்துடன் அவர்கள் பேச்சு முடிந்திருக்கவேண்டும். ஆனால் சிற்றம்பலம் ஏதோ சங்கட உணர்ச்சி கொண்டு சில வினாடிகள் உட்கார்ந்திருந்தார். "பரிதாபம்!" இன்ஸ்பெக்டர் கந்தப்பா அயல்நாட்டிலா இருக்கிறார்? இன்னொரு அல்ப ஆசையுடன் வந்தேன், அதுகூட நிறைவேறாமல் போய்விட்டது—அதாவது இன்ஸ்பெக்டர் இந்த மைலுவதி கந்தப்பாவைப் பற்றி ரொம்பப் பிரமாதமாக வர்ணித்துக் கொண்டே இருப்பார். அவர் ரொம்ப புத்திசாலிதானே?" என்று கேட்டார்.

"மகாமேதை!" என்று ஒப்புக் கொண்ட இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி, "எங்கள் இலாகாவிலே மிகச் சிறந்த அதிகாரிகளில் அவர் ஒருவர்" என்றார்.

"அப்படியா" என்று தலையாட்டிய சிற்றம்பலம், "நீங்கள் சொன்னதை கேட்ட பிறகு எனது ஏமாற்ற உணர்ச்சி இன்னும் அதிகமாகிறது: பார்வைக்கு அவர் எப்படி இருப்பார் என்று இந்தக் கண்களால் காணும் ஆசையோடுதான் இங்கே வந்தேன். இவ்வளவு பிரக்யாதி பெற்றவர் என்றால் அவர் எப்படி இருப்பார் என்று நேரில் பார்க்கும் ஆசை ஏற்படுவது சகஜந்தானே—" என்று நிறுத்தினார்.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி அவர் முகத்தை ஒரு விநாடி பார்த்தார். பிறகு எழுந்து சுவற்றிலே மாட்டப்பட்டிருந்த ஒரு புகைப் படத்தை எடுத்து வந்தார். அந்தப் புகைப் படத்தில் மூன்று வரிசையில் முப்பது நாற்பது போலீஸ் கமிஷனர் ஆபீசைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகள் ஒன்றாக நின்று எடுத்துக் கொண்ட படம் அது.

"உங்கள் அல்ப ஆசையை யாராவது தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று சிரித்தபடி கூறிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி போலீஸ் கமிஷனருக்கு இடதுபக்கத்தில் நான்காவதாக உட்கார்ந்திருப்பவர்தான் இன்ஸ்பெக்டர் கந்தப்பா என்றார்.

சிற்றம்பலம் அந்த உருவத்தைக் கூர்ந்து பார்த்தார். பிரமாண்டமான முகமும், வாட்டசாட்டமான உடலமைப்பும் கிட்டத்தட்ட ஐம்பது வயது நிறைந்தவருமாக காணப்பட்ட அந்த உருவத்தைப் பார்த்ததும் சிற்றம்பலத்திற்கு சிறிது ஏமாற்றம் ஏற்பட்டதென்று கூடக் கூறலாம்.

"இவர்தான் கந்தப்பாவா?"

அவர்தான்!—பார்வைக்கு அவ்வளவு பிரமாதமாக இருக்கமாட்டார். ஆனால் எங்கள் இலாகாவின் ஜீவநாடி அவர்! என்றார் பரஞ்சோதி.

சிற்றம்பலம் அந்தப் புகைப் படத்தை சிறிது சங்கடத்தோடு வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு ஒரு புன்னகை பூத்தார்.

"ரொம்ப நன்றி, இன்ஸ்பெக்டர்! பார்வைக்கு பரஞ்சோதி ஒரு துப்பறிவாளராகவே தோன்றவில்லை—சொல்லப் போனால் எந்தத் துப்பறிவாளர்களும் அம்மாதிரி தோன்று

வதில்லை! அவர்களிடம் உள்ள விசேஷம் அதுதான். அவர் களைம் பார்க்கும் பொழுதும்—என்று தடுமாறினர்.

"அம்மாஞ்சி போலத் தோன்றுகிறார்கள்—அப்படித் தானே?" என்று கண்களை சிமிட்டியபடி கேட்ட இன்ஸ்பெக் டர் கந்தப்பா, "அவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு அந்தப் புகைப் படத்தை எடுத்துச் சுவற்றில் மாட்டினர்.

பிரேமகுமாரியைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம்' சிற்றம்பலம்! ஒரு தனி துப்பறிவாளரை நியமிப்பதால் அவ ளுக்கோ, அவளது தந்தைக்கோ எந்த விதமான பயனும் ஏற்படுமென்று கனவில் கூட நினைக்காதீர்கள். நிரபராதிகள் எதற்குமே பயப்பட வேண்டியதில்லை. குற்றவாளிகள்தான் என்னென்னவோ எண்ணி கவலைப்பட வேண்டும்—உங்க ளுக்கு கர்னல் வெள்ளியப்பரவை பல வருஷங்களாக தெரி யுமா?" என்று கேட்டார்.

"எனது பழைய கால நண்பர்"

"அவரது கடந்த கால வாழ்க்கையைப் பற்றியும் உங்க ளுக்குத் தெரியும் அவரது வாழ்க்கையில் இரண்டொரு அபக் யாதியான செயல்கள் நடந்திருக்கின்றன. அவரே என் னிடம் கூறினர். துரதிருஷ்டவசமாக அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற சமயத்தில் அவர் மதுபானத்திற்கு அடிமை யாகி இருக்கிறார்" என்றார்.

பிறகு சில விநாடிகளில் இன்ஸ்பெக்டரிடம் விடைபெற் றுக்கொண்டு புறப்பட்டார் சிற்றம்பலம் அவரை வெளி கேட் வரை அழைத்துக் கொண்டு போய் விட்டார் இன்ஸ் பெக்டர் பரஞ்சோதி போகும் பொழுது சிற்றம்பலம் ஏராளவு மனத்திருப்தியோடுதான் சென்றார். அதைக்

கவனித்த பரஞ்சோதி தனக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டார். அவர் சந்தோஷப்பட்டதற்கும் காரணம் இருந்தது.

★ ★ ★

# அத்தியாயம் 11

சிற்றம்பலம் சோலைப் பக்கம் ரயில்வே ஸ்டேஷனை அடைந்த போது மாலை நான்கு மணி இருக்கும். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மயான மாளிகை கிட்டதட்ட நான்கு மைல் தூரம் இருந்தது. மாலை நேரமானதால் நடந்தே செல்லலாமென்று தீர்மானித்தார். சிற்றம்பலம் ரஸ்தாவில் ஒரு மையில் தூரம் நடந்து வந்திருப்பார். அவருக்குப் பின்னால் ஒரு மோட்டார் கார் வரும் சப்தம் கேட்டது யார் வருகிறார்களென்று அவர் திரும்பிக்கூட பார்க்கவில்லை, இருந்த போதிலும் அந்தக் கார் அவர் அருகே வந்து நின்றது குமரேசன் தான் அந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்தான்,

„ஏறிக் கொள்ளுங்கள் சிற்றம்பலம்! வேறொருவருடைய காரின் டயர்கள் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் பொழுது உங்கள் சொந்த செருப்பின் தோலை ஏன் தேய்த்து நாசமாக்குகிறீர்கள்?" என்று உற்சாகமாகக் கேட்டான் குமரேசன்.

அவனது கிறுக்குத்தனமான போக்கு, சிற்றம்பலத்திற்குத் தெரியுமாதலால், அவனது காரில் ஏற பயந்தார்.

"பரவாயில்லை குமரேசன்! நான் நடந்தே செல்கிறேன்!

"பயப்படாதீர்கள்! நான் ரொம்பவும் மெதுவாகக் கார் ஓட்டிச் செல்கிறேன்" என்று கூறிய குமரேசன் காரின் கதவைத் திறந்து விட்டான். தயங்கியபடி காரில் ஏறி அமர்ந்தார் சிற்றம்பலம்.

"நான் பயப்படுகிறேன் என்று நினைத்தாயா?" என்று ஜம்பமாகக் கேட்டார் சிற்றம்பலம்.

"அதில் எனக்கு சந்தேகமில்லை" என்று உற்சாகமாகக் கூறிய குமரேசன், எங்கே போய்விட்டு வருகிறீர்கள்? என்று கேட்டான்.

"சென்னைக்கு சென்றிருந்தேன்" என்றார் சிற்றம்பலம்.

"போய் வருவதற்கு அது அற்புதமான இடந்தான்" என்று கூறிய குமரேசன், "வசிப்பதற்குத்தான் அது ரொம்ப மோசமான இடம்" என்றான்.

காரை நிதானமாகவே குமரேசன் ஓட்டிச் சென்றான். அவனுக்கு எங்கிருந்து இந்தக் கார் கிடைத்தென்று சிற்றம்பலத்திற்கு வியப்பாக இருந்தது. அதை வாய்விட்டும் கேட்டுவிட்டார்.

"சோலைப்பாக்கத்திலுள்ள ஒரு ஊர் சுற்றியிடமிருந்து வாடகைக்கு வாங்கி இருக்கிறேன்". என்று கூறிய குமரேசன் "உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டான். தெரியாதென்று தலை ஆட்டினார் சிற்றம்பலம்,

"இந்த ரஸ்தாவில் கார் ஓட்டுவது ஆபத்தானது; அதுவும் நிலாவு இருந்தால் ரொம்ப ஆபத்து. உங்களுக்கு நீலக் குன்று இருக்குமிடம் தெரியுமல்லவா"?

"தெரியும்" என்ற பாவனையில் தலையை ஆட்டினார் சிற்றம்பலம்.

அங்கு ஒரு லாரி சிக்கிக்கொண்டு கிடக்கிறது அந்தக் குன்றின்மேல் செல்லும் ரஸ்தா அவ்வளவு மோசமானது அப்படிப்பட்ட ரஸ்தாவில் மழை பெய்து கொண்டிருக்கும் போது இருளிலே நிறைய பளு ஏற்றிய லாரியை செலுத்திக் கொண்டு போவது ரொம்ப கஷ்டமாக இருக்கும். அந்தக் குன்றிலே எவ்வளவோ பேருடைய உள்ளங்கள் உடைந்து போயிருக்கும் என்று சம்பந்தமில்லாமல் பேசிக்கொண்டு போனான் குமரேசன்.

கொஞ்சநேரத்தில் இருவரும் மயானமாளிகையை அடைந்தார்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் குமரேசன் அங்கே காத்துக்கொண்டிருந்த காரின் டிரைவருக்கு வாடகை கொடுத்துவிட்டு உள்ளே சென்றான்.

காரைவிட்டு இறங்கிய சிற்றம்பலம் சிறிது தூரத்தில் உலாவிக் கொண்டிருக்கும் பிரமகுமாரியைப் பார்த்துவிட்டார். நேராக அவள் இருந்த இடத்திற்கு வந்தார்.

அப்பொழுது தான் தேநீர் அருந்த வீட்டிற்குச் செல்லலாமென திரும்பிய பிரமகுமாரி அவரை புன்னகையுடன் வரவேற்றாள்.

வழக்கத்தைவிட அவள் முகம் வெளுத்துச் சோர்வடைந்திருப்பதாக சிற்றம்பலத்திற்குத் தோன்றியது.

"இன்று ஏதாவது விசேஷம் நடந்ததா?" என்று அவசரமாகக் கேட்டார் சிற்றம்பலம்.

“ஒன்றும் நடக்கவில்லை இரவுப் பொழுது நெருங்கு கிறதே என்று நான் திகில்பட்டுச் கொண்டிருக்கிறேன்” என்றாள் பிரேமகுமாரி.

பிரேமகுமாரியின் தோளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்த சிற்றம்பலம் “பிரேமகுமாரி” நீ இந்த இடத்தை விட்டுப் போய்விட த்தான் வேண்டும். நான் கர்னலிடம் இதைப்பற்றிப் பேசுகிறேன்” என்றார்.

“தயவுசெய்து வேண்டாம்” என்று அவசரமாகக் கூறிய பிரேமகுமாரி “அப்பாவுக்கு நான் இதைவிட்டுப் போவது பிடிக்கவில்லை. நானும் கொஞ்சம் சலியடித்துப் போயிருக்கி றேன்” என்றாள்.

“அந்த இளைஞன் ஏதாவது” என்று ஆரம்பித்தார் சிற் றம்பலம்.

இல்லை இல்லை நீங்கள் குமரேசனைப் பற்றித்தானே கேட்கிறீர்கள்? அவர் ரொம்ப அற்புதமாக நடந்து கொள் கிறார் எப்போதாவது சில நிமஷங்கள் என் கண்களில் படு வார். இன்றையதினம் வெளியில் காரில் ஏறிக்கொண்டு சென்றார். என்ன அவர்! என்று சட்டென்று நிறுத்தினாள்.

“தன்னோடு வரும்படி அழைத்தானா? அவனுக்கு என்ன துணிச்சல!”

“அவர் ரொம்ப அற்புதமாக நடந்து கொண்டார்” என்று அவசரமாக கூறிய பிரேமகுமாரி, எனக்குத்தான் காரில் செல்ல பிடிக்கவில்லை இப்பொழுது வதத காரில் அவர்தான் வந்தார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் நீங்கள் வந்திருக்கிறீர்கள்” என்றாள்.

வழியில் நடந்த விபரங்களை சிற்றம்பலம் கூறினார். பிரேமகுமாரியின் முகத்தில் அன்றையதினம் முதன் முதலாக அப்பொழுதுதான் புன்னகை அரும்பியது.

"குமரேசன் ஒரு விசித்திரமான ஆள்தான்" என்று கூறிய பிரேமகுமாரி சில சமயங்களில் அவர் ரொம்ப சாதுர்யமாகவும், அருமையாகவும் நடந்து கொள்கிறார் ஆனால் தமது ஏகாம்பரம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அவர் மீது ஆத்திரப்படுகிறான் அவரை இங்கிருந்து வெளியே அனுப்பாவிட்டால் தான் வெளியேறிவிடப் போவதாக என்னிடம் கூறினான்" என்றாள்.

சிற்றம்பலம் ஒரு புன்னகை பூத்தார். உனக்கு வீட்டுத் தொல்லை நிறைய இருக்கும் போலிருக்கிறதே என்னையும் அந்தப்புது விருந்தாளியையும் தவிர மற்ற எல்லாருமே உனக்குத் தொல்லை கொடுப்பார்கள் போலிருக்கிறதே என்னையும் அந்தப் புது விருந்தாளி அவர் பெயர் என்ன நாக நந்தி அடிகளார் அவர் ஒழுங்காக நடந்து கொள்கிறாரா?" என்று கேட்டார்.

பிரேமகுமாரி ஒரு மெல்லிய புன்னகை பூத்தாள். அவர் ரொம்ப நல்லவர். இன்று பூராவும் அவர் என் கண்ணில் படவில்லை" என்றாள்.

"அதோ வருகிறார்!" என்று சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்த நாகநந்தி அடிகள் இது ரொம்ப அற்புதமான இடம்! பூமியில் அமைந்துள்ள சொர்க்கம் இது" என்றார்.

இப்பொழுதுதான் நாகநந்தி அடிகளின் முகத்தை பிரேமகுமாரி நன்றாகப் பார்த்தாள் அந்த முகம் அவ்வளவு கவர்ச்சிகரமாக இல்லை. பல சங்கடமான அனுபவங்களுக்கு இலக்காகி கரடு முரடாக மாறியிருந்தது அவரது முகத்தோற்றம்

அவரது கண்களும் அவ்வளவு கவர்ச்சிகரமானவை யாக இல்லை. குரல் மிருதுவானதாக இருந்த போதிலும் அதில் தளுக்குத்தனம் கலந்திருந்தது எக்காரணத்தாலோ நாகநந்தி அடிகளும் பிரேமகுமாரிக்கு அவ்வளவு நல்ல அபிப் பிராயம் ஏற்படவில்லை.

கொஞ்சநேரத்தில் எல்லோரும் தேநீர் அருந்தும் இடத் திற்கு சென்றனர். குமரேசனும் அங்கு வந்திருந்தான். மைனு வதியும் அங்கே இருந்தாள். வழக்கத்திற்கு விரோதமாக குமரேசன் ரொம்ப அடக்கமாக இருந்தான் அங்கு நடந்த பேச்சுக்கள் எதிலும் அவன் தீவிரமாக ஈடுபடவில்லை.

பிரேமகுமாரி அளவு கடந்த அக்கறையோடு அவனை ஜாடையாக கவனித்தாள். தான் நினைத்ததைவிட குமரேச னுக்கு அதிக வயது ஆகியிருக்குமென்று அவளுக்குத் தோன் றியது, அவனது முகத்திலே இளமை தாண்டவமாடிய போதி லும் அவனுக்கு வயது கூடுதலாகத்தான் ஆகியிருக்கும் என்று எண்ணிக்கொண்டாள்.

அவனது சிந்தனைகள் அந்த நேரத்தில் வெகுவாக கலங்கி யிருக்க வேண்டுமென்று பிரேமகுமாரிக்கு தோன்றியது, ஏனென்றால் இடையிலே அவனை அழைத்து பேசிய போது அவன் திடுக்கிட்டு உணர்வு பெற்றதை பிரேமகுமாரி கவனித்தாள்.

தேநீர் அருந்தி முடிந்ததும் பிரேமகுமாரி அவனை தனியே சந்தித்தாள். ''இன்றையதினம் ரொம்ப அடக்கமாக இருந் தீர்களே!''

''நானா?'' என்று உற்சாகத்தை தருவித்துக்கொண்டு கேட்க முயன்ற குமரேசன் இந்தசாமியார்களை பார்த்தாலே தான் அப்படி ஆகிவிடுகிறேன்! ஒருக்கால் அவர்களைக் கண்டு

தும் என் மனச்சாட்சி வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறதே. என்னவோ மனச்சாட்சி வேலை செய்ய ஆரம்பித்தால் மனிதன் அவ்வளவுதான்!" என்றான்.

"இன்று முழுவதும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"பிசாசு வேட்டையாடிக் கொண்டிருந்தேன்!" என்றான் பிரேமகுமாரி அதைக் கேட்டதும் பிரேமகுமாரியின் முகம் இன்னும் வெளுத்துப் போனதைக் கண்ட குமரேசன் மன வேதனை அடைந்தவனாய் "மன்னித்துக்கொள் பிரேமகுமாரி! நான் விளையாட்டுக்கு அப்படிச் சொன்னேன்!" என்றான்.

அதன் பிறகு கொஞ்சநேரத்தில் பிரேமகுமாரி தன் அறைக்குச் சென்றாள். அங்குபோய் அமரிக்கையாய் அமர்ந்து சிந்தனை செய்த பொழுது தான், குமரேசன் உண்மையிலேயே பிசாசு வேட்டை தான் ஆடிக்கொண்டிருந்திருக்கிறானென்று அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

ஒருநாள் முழுவதும் பிசாசைத் தேடிக்கொண்டுதான் குமரேசன் அலைந்திருக்கிறான்! ஒருக்கால் அவனேதானா அந்தப் பிசாசோ? அதை அவளால் நம்ப முடியவில்லை.

★ ★ ★

# அத்தியாயம் 12

இரவு வந்தது. பயங்கரமான மர்மங்களைப் பரப்பும் இரவுப்பொழுதும வந்தது.

வெளிஹாலில் யாருமே இல்லை- அங்கிருந்த டெலிபோன் மணி பயங்கரமாக அலறியது. எங்கோ ஒரு இடத்திலிருந்து திடீரென அங்கு தோன்றிய ஏகாம்பரம் டெலிபோனை கையிலெடுத்தான் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி தான் பேசினர், அவர் குரலைக் கேட்டதுமே ஏகாம்பரத்திற்கு ரொம்ப சங்கடமாக இருந்தது. அவனுக்கு பரஞ்சோதியைப் பிடிக்காது. என்றாவது ஒருநாள் தனது பழைய வாழ்க்கையை அவர் கண்டுபிடித்து விடுவார் என்ற திகில் ஏகாம்பரத்திற்கு இருந்தது.

“வேதாந்தத்தோடு தான் பேசவேண்டும்” என்று மூழங்கினர் இன்ஸ்பெக்டர்.

வேகமாகச்சென்று வேதாந்தத்தை டெலிபோனுக்கு அனுப்பிவிட்டு அப்பால் சென்றுன் ஏகாம்பரம்.

“ஏதாவது புது தடயம் கிடைத்ததா?” என்று கேட்டார் பரஞ்சோதி.

“ஒன்றுமில்லைஸார்!” என்றுர் வேதாந்தம்.

கொஞ்சநேரம்வரை பரஞ்சோதி மௌனமாக இருந்தார் பிறகு பேச ஆரம்பித்தார்)

“இன்றிரவு ஏதாவது நடக்கக்கூடுமென எனக்குத்தோன்றுகிறது என் வீட்டு டெலிபோன் நம்பர் உனக்குத் தெரியு

மல்லவா?... நல்லது! ஏதாவது அசாதாரணமான நிகழ்ச்சி நடைபெற்றால் என்னை உடனே கூப்பிடு! சின்ன விஷயமாக இருந்தாலும் பரவாயில்லை எனது கார் தயாராக காத்துக் கொண்டிருக்கும் ஒரே மணி நேரத்தில் நான் அங்கு வந்து விடுவேன்:"

வேதாந்தம் டெலிப்போனை கீழே வைத்தபோது சிற்றம் பலம் அங்கு வந்து சேர்ந்தார்- வெளியே செல்ல முயன்ற வேதாந்தத்தை சிற்றம்பலம் அழைத்தார்.

"இன்றிரவு நீங்கள் எங்களோடு தங்கி இருக்கப் போகு நீர்கள் அல்லவா?... ஆண்டவனுக்கு நன்றி!"

"நீங்கள் ரொம்பவும் கலக்கமடைந்திருக்கிறீர்கள் ஸார் என்று புன்னகையோடு கூறிய வேதாந்தம், 'அப்படித்தானே என்று கேட்டார்.

சிற்றம்பலத்தின் முகத்தில் புன்னகை படர்ந்தது. ஆமாம சிறிது கலங்கிப்போய் தான் இருக்கிறேன் இப்படி நான் ஆவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை" என்றார்.

பிறகு ஒரு சுருட்டை எடுத்துப்பற்றவைத்த சிற்றம்பலம் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தபடி, புதுத்தடயம் ஒன்றும் கிடைக்கவில்லையே?" என்று கேட்டார்.

"இல்லை ஸார்!" என்றார் வேதாந்தம்.

சிற்றம்பலம் சிரித்தார். அப்படியே ஏதாவது தடயம் கிடைத்தாலும் என்னிடம் சொல்ல மாட்டீர்கள் இல்லையா அது போலீஸ் இலாகாவைப் பிடித்த ஒரு வியாதி, நேற்று துப்பாக்கி பிரயோகம் செய்த ஆளை நீங்கள் கண்டு பிடிக்க

வில்லையே ஏன் கேட்கிறேன் என்றால் இன்று பகல் பூராவும் சென்னையில் சுற்றிவிட்டு நான் இங்கு திரும்பி வந்தபோது இங்கு எதுவுமே நடக்கவில்லை என்று கேள்விப்பட்டதும் சிறிது ஏமாற்றமாகவே இருந்தது.

"இல்லை, துப்பாக்கிப் பிரயோகம் செய்தவனை நாங்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை." என்றார் வேதாந்தம்.

அந்தச் சமயத்தில் ஹால் கதவை இலேசாகத் திறந்து கொண்டு உட்புறம் எட்டிப் பார்த்த தாசநந்தி அடிகளை அவர்கள் இருவருமே கவனிக்கவில்லை.

"இன்று போலீஸ் கமிஷனர் ஆபீஸிற்குப் போயிருந்தேன். இன்ஸ்பெக்டர் பரஞ்சோதியிடம் கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்தேன். ரொம்ப நல்ல மனிதர்;" என்றார் சிற்றம்பலம்.

"தங்கமானவர்" என்று மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார் வேதாந்தம்.

பொதுவாக இன்ஸ்பெக்டர் பரஞ்சோதியை போலீஸ் இலாகாவிலுள்ள எல்லாருக்குமே நிரம்ப பிடித்திருந்தது.

"இந்த விவகாரம் முழுவதும் ரொம்ப அசாதாரணமானது" என்று யோசனையோடு கூறிய சிற்றம்பலம், சொல்லப்போனால் இதைபபற்றி என் மனதல் ஒரு புது அபிப்பிராயம் உருவாகி வருகிறது" என்றார்.

"நீங்களும் மைமனுவதி பாதிரிதான்!" என்றார் வேதாந்தம்.

"சே, சே! நான் சொல்ல வந்தது சொல்லுண்ட ரகசியம் கட்டற்றிய வஷயத்தல் பெயரைக் கேட்டதுமே

எனக்கு சட்டென்று அந்த தங்கக் கொள்ளையைப் பற்றிய நினைவு வந்தது. அந்தக் கொள்ளையில் மூன்று ஆட்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். சரபோஜி என்பவன் அந்தக்கூட்டத்தலைவன். இன்னொருவன் பெயர் சுந்தரம்... சருக்கு சுந்தரம். மற்றொருவன் ரங்கசாமி. எனக்கு இந்த விவரங்களை தெரியுமென்று கமலநாதியின் முன்னால் ஒப்புக்கொள்ள எனக்குத் துணிச்சல் கிடையாது. ஏனென்றால் அப்புறம் அவள் என்னைத் தனியே விடமாட்டாள். எனக்கும் இந்த பயங்கர விவகாரங்களில் அந்தக் காலத்தில் அக்கறை இருந்தது. கொலையுண்டவன் நிச்சயமாக அந்த ரங்கசாமி தானென்று எனக்குத் தோன்றுகிறது—" என்றார் சிற்றம்பலம்.

"நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா ஸார்?

சிற்றம்பலம் ஒரு புன்னகை பூத்தார். 'நிச்சயமாக அவன்தான்! உங்களுக்கும் அது தெரியும்' என்றார்.

"நீங்கள் பரஞ்சோதியை கேட்டீர்களா?" என்று கேட்டார் வேதாந்தம்.

"இல்லை"

"பரவாயில்லை. இன்றிரவு கமிஷனர் ஆபீஸிலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப் போகிறார்கள். அதனால் உங்களிடம் நான் சொல்வதில் தவறில்லை. கொலையுண்டவன் அந்த ரங்கசாமிதான்!"

சிற்றம்பலம் தன் புருவத்தை நெறித்தபடி "அவன் எவ்வளவு காலம் சிறைவாசம் செய்தானென்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அவன் சமீபத்தில்தான் விடுதலையாகி இருக்கவேண்டும்?" என்று நிறுத்தினார்.

"சமீபகாலத்தில் தான் விடுதலையானான்" என்று கூறிய வேதாந்தம், "அவன் விடுதலையாகி சில மணி நேரத்திலேயே சருக்கு சுந்தரமும் விடுதலையாகி விட்டான்" என்றார்.

சிற்றம்பலத்தின் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்தது. "நான் நினைத்தது சரியென்று எனக்குத் தெரியும்! எனக்கு நல்ல ஞாபக சக்தி உண்டு!" என்றார்.

பொழுது போகாததால் வேதாந்தம் அங்கேயே நின்று சிற்றம்பலத்திடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார். "இன்றைய இரவிற்குப் பிறகு நீங்கள் தங்கி இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக இப்படிப் பட்ட இடங்களில் கொலை நடந்தால் அங்கு தங்கியிருக்கும் விருந்தினர்கள் உடனே காலி செய்து கொண்டு கிளம்பி விடுவார்கள். அத்துடன் அதை நடத்தும் மனிதனும் நிர்மூலமாகிப் போய்விடுவது வழக்கம்!" என்றார்.

சிற்றம்பலம் தனது தலையை ஆட்டிவிட்டு "எனக்கே தெரியவில்லை, எனக்கு வயதாகி விட்டது, ஒண்டிக் கட்டை இந்த வயதில் அடிக்கடி இடம் மாற்றிக் கொண்டு அலைவது எனக்குப் பிடிக்காது! மற்றவர்களை பணத்தைப் பாதித்த அளவுக்கு இந்தப் படுகொலை என் மனதைப் பாதித்துவிடவில்லை. நான் சொல்லுவது ஓரளவு புதுமையாகவும் இருக்கலாம்!" என்று கூறிக்கொண்டே வந்தவர், விஷயத்தை மாற்றி "இந்தக் கொலைக்கும் அந்த தங்கக் கொள்ளைக்கும் சம்பந்தமிருக்குமென்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்தார்.

ஆனால் அந்த விஷயம் உத்தியோக சம்பந்தமுள்ளதாதலால், அதைப் பற்றி விவாதிக்க வேதாந்தம் விரும்பவில்லை.

"நீங்கள் சொல்வது சரிதான்—சரிதான்!" என்று அவசரமாக என்று ஒப்புக் கொண்ட சிற்றம்பலம், "நான் அந்த விஷயத்தை எடுத்திருக்கவே கூடாது!" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

அந்த சமயத்தில் மைனாக்ஷியும், திலகவதியும் அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அவர்களைப் பின்பற்றியே நாகநந்தி அடிகளும் உள்ளே நுழைந்தார்.

மைனாவதி அளவற்ற பரபரப்போடு காணப்பட்டாள். சிற்றம்பலத்திடம் ஏதோ விஷயம் சொல்ல வேண்டுமென்று அவள் தவித்தது நன்றாகத் தெரிந்தது.

"உங்களுக்கு ஒரு திடுக்கிடும் சமாச்சாரம் கூறப்போகிறேன். சிற்றம்பலம் என்று மைனாவதி ஆரம்பித்ததும் சிற்றம்பலம் ஆயாசத்துடன் அவள் பக்கம் திரும்பினார்." உங்களுக்கு நாகநந்தி அடிகள் ஒரு பெரிய தாந்திரீகர் என்று தெரியுமா? ஆவியுலக ஆராய்ச்சியில் அவர் நிபுணத்துவம் பெற்றவர் என்றும் உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டாள் மைனாவதி.

"நான் சாப்பாட்டில்தான் நிபுணத்துவம் பெற்றவன்" என்று சிரித்தபடி சிற்றம்பலம் "ஆவியுலக ஆராய்ச்சியா?—எனக்கு ஆவிகளைப் பற்றி எதுவும் தெரிய வேண்டாம்" என்றார்.

நாகநந்தி அடிகள் குறுக்கிட்டு "நான் ஆவியுலக ஆராய்ச்சியில் ஓரளவு ஈடுபட்டிருக்கிறேனே தவிர அதிக நிபுணத்துவம் வாய்ந்தவனல்ல! என்று அவையடக்கம் பாடிக் கொண்டார்.

அந்த சமயத்தில் பிரேமகுமாரி அந்த அறைக்குள் வந்தாள்.

"என்ன பயங்கரம்!" என்று ஆரம்பித்த நாகநந்தி அடிகள், உங்களுடைய ஆன்மா எவ்வளவு தூரம் கதிகலங்கிப்போய் தவிக்கிறது! எப்படித் துடிமாறித் தத்தளிக்கிறது! எப்படி—" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

பிரேமகுமாரியின் பார்வை திலகவதியின் மீதே நிலைக்குத்தாக நின்றது. ஜன்னல் பக்கம் திலகவதி வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்ததையும், அவள் முகம் சவம் போல வெளுத்ததையும் பிரேமகுமாரி பார்த்துவிட்டாள்.

திபீரென்று துள்ளி எழுந்த திலகவதி விறிட்டு அலறிய படி, "அப்பா—ஜன்னல் பக்கம் ஒரு முகம் தெரிந்தது!" என்று மூச்சு வாங்க கூறினள்.

"திரைச்சீலையை இழுத்து ஜன்னலை மூடுங்கள்" என்று எரிச்சலாகக் கூறினர் சிற்றம்பலம்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு குமரேசன் அந்த அறைக்குள் வந்தான். வெளியே கொட்டிக் கொண்டிருந்த மழையில் அவன் நனைந்திருக்கிருன் என்று பிரேமகுமாரி புரிந்து கொண்டாள்.

"வெளியே சென்றிருந்தீர்களா?" "ஆமாம் கொஞ்சம் தூரம் உலாவிவிட்டு வந்தேன்."

"மடான குருரனைப் பார்த்தீர்களா?" என்று வெறுப்புடன் கேட்டாள் திலகவதி.

குமரேசன் ஒரு பரந்த புன்னகை பூத்தான். அந்த மகானுபாவனை நான் நேரில் சந்தித்திருந்தால் அவரது மாயா வித்தைகளை விட்டு விடும்படி யோசனை கூறி இருப்பேன்" என்ருன்.

நாகநந்தி அடிகள் அவனை ஏறிட்டுப் பார்த்தார். அந்த பார்வையிலேயே அவனது பேச்சை அவர் அங்கீகரிக்கவில்லை என்ற பாவம் படர்ந்திருந்தது "எல்லாம் பயங்கரமாக நடந்துவிட்டது' இங்கு நடந்த படுகொலையைப் பற்றி இப்பொழுதுதான் யதேச்சையாகக் கேள்விப் பட்டேன்" என்று ஆரம்பித்தார்.

"தயவுசெய்து அதைப்பற்றி பேசாதீர்கள்" என்று ஓலமிட்டாள் திலகவதி.

"நம் இனத்தைச் சேர்ந்த ஒரு ஜீவன் நல்ல பிராயத்தில் கழுத்தறுக்கப்பட்டிருக்கிருன்" என்று கூறியபடி தனது

பேச்சை விடாமல் தொடர்ந்த நாகநந்தி அடிகள் இந்த பயங்கர நிகழ்ச்சியை கேள்விப்பட்டதிலிருந்து என் உடல் நடுங்கிவிட்டதென்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் அந்த மனிதன் யாரென்று தெரியவில்லையே!" என்று கேட்டார்.

"நன்றாகத் தெரியுமே!' என்று குறுக்கிட்ட குமரேசன் அதை உங்களுக்கு ஒருவரும் சொல்லவில்லையா!' என்று கேட்டான்.

இருவருடைய கண்களும் சந்தித்தன.

"கொலையுண்ட மனிதனின் பெயர் என்னவென்றால்" என்று நிதானமான குரலில் ஆரம்பித்த குமரேசன் அவன் பெயர் ரங்கசாமி சமீபத்தில் வெளிவந்த ரங்கசாமி என்றான்

அதைக் கேட்டதும் நாகநந்தி அடிகளின் கையிலிருந்த கமண்டலம் தடாலெனக் கீழே விழுந்தது. அவர் முகம் பயங்கரமாக வெளுத்தது.

ரங்கசாமீ" என்று தடுமாறிய அடிகள் சிறை சென்று வந்த ரங்கசாமி என்று நிறுத்தினார்.

அவரையே கவனித்துக் கொண்டிருந்த குமரேசன் தனது தலையை ஆட்டியபடி அவனை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டான்

'நான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'

நாகநந்தி அடிகள் சிறிது கஷ்டத்தோடுதான் பேசினார். அவருக்கு இலேசாக மூச்சு வாங்கியது.

ரங்கசாமி என்று மீண்டும் ஒரு முறை முணு முணுத்த நாசநந்தி அடிகள் அந்த அறையை விட்டு வெளியே நடந்தார்.

பிரேமகுமாரி இதை கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரே வியப்பாக இருந்தது. சிற்றம்பலமும் இதை கவனித்தாராவென்று திரும்பிப் பார்த்தாள் ஆனால் சிற்றம்பலம் அதை கவனித்ததாகத் தெரியவில்லை. அந்த நேரத்தில் அவர் கவனமெல்லாம் வேறுஇடத்தில் இருந்ததென்று பிறகு புரிந்து கொண்டாள் பிரேமகுமாரி. பிறகு தனியாக சிற்றம்பலம் அவளை சந்தித்தபோது அந்த விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

நான் சொல்வது உனக்கு நம்ப முடியாததாக இருக்கலாம். ஆனால் மைனாவதி இன்றிரவு சில சுவாரஸ்யமான தகவல்களை என்னிடம் கூறினாள் அதாவது இந்த ரங்கசாமியைப்பற்றி! அவள் புன்னகைப் படத்தை ஒரு பத்திரிகையிலிருந்து தேற்று காண்பித்தாள். அது மட்டுமல்லாமல் அவள் காண்பித்த வேறொரு புகைப்படமும் எனக்கு ரொம்ப சுவாரஸ்யத்தை அளித்தது என்று கூறிக் கொண்டே வந்த சிற்றம்பலம் இந்த குமரேசன் இங்கு வருவதற்கு முன்னால் நீ அவனைச் சந்தித்திருக்கிறாயா? என்று கேட்டார்.

'நீங்கள் கூறும் மற்றொரு புகைப்படம் அவருடையதா என்று கேட்டாள் பிரேமகுமாரி.

சிற்றம்பலம் தயங்கினார். பிறகு மெதுவாக ஆமாம் அவனுடையதுதான் என்று நினைக்கிறேன் என்று மெதுவாகக் கூறினார்.

அந்தச் சமயத்தில் பிரேமகுமாரிக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அன்று பகல் பொழுதில் அவள் ரூபாலாபீஸ் பக்கம் வந்துகொண்டிருந்தபோது அங்கிருந்த பொது டெலி

போன் பெட்டியில் சிற்றம்பலம் நின்றுகொண்டிருப்பதை அவள் கவனித்தாள். அவள் கவனிப்பதைக் கண்டதும் வெளிப்பக்கம் நின்றுகொண்டிருந்த போஸ்ட் மாஸ்டர் தானாகவே வலியவந்து சிற்றம்பலம் போலீஸ் கமிஷனர் ஆபீஸிற்கு டெலிபோன் செய்து ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார் என்று பிரேமகுமாரியிடம் கூறினார். அப்பொழுது அதைப்பற்றி பிரேமகுமாரி எதுவும் பிரமாதமாக நினைக்கவில்லை. ஆனால் இப்போது அந்த விஷயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அவளுக்குப் பட்டது.

தொடர்ந்து பேசினார் சிற்றம்பலம். நான் சில விசாரணைகள் நடத்தினேன் அதிலிருந்து சந்தேகமற எனக்குக் குமரேசனைப்பற்றிய விஷயங்கள் புலனாயின அதாவது நான் சொல்ல வருவது என்னவென்றால் அந்த குமரேசன் வெளிப்பார்வைக்குத் தோன்றும் அதேகர மனிதன் அல்ல என்பதுரன் என்று தடுமாறிவிட்டு சட்டென்று தவிப்புடன் எந்த காரணங்கொண்டும் இதை குமரேசனிடம் சொல்லிவிடாதே என்று பதறினார்.

அவரது பதட்டத்தைக் கண்டு பிரமித்துப்போன பிரேமகுமாரி சிரித்தாள். இல்லை அவரிடம் எதுவும் சொல்ல மாட்டேன் என்றாள்.

சுற்றிலும் ஒருமுறை கவனித்துக்கொண்ட சிற்றம்பலம் மெதுவான குரலில் பிரேமகுமாரி நீ ஏன் இந்த இடத்தை விட்டுக் கிளம்பி சென்னைக்குப் போய்விடக் கூடாது என்று தவித்தார்.

'என்ன வேடிக்கை!' என்று சிரித்தபடி கூறிய பிரேமகுமாரி இதையேதான் குமரேசனும் கூறினார்? என்றாள்.

''குமரேசன் அப்படி கூறியதற்குக் காரணம் வேறு' என்று கரகரத்த குரலில் கூறிய சிற்றம்பலம் தான் ஏன்

இதைக்கூறுகிறேன் என்றால் உன்மீது எனக்கு அளவற்ற அன்பு இருக்கிறது பைத்தியக்காரத்தனமாகவோ தளின உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டோ நான் இப்படிப் பேச வில்லை. நம்மிடையேயுள்ள அளவுகடந்த வயது வித்தியாசத்தையும் மீறி உன்மீது நான் காதல்கொண்டு தவிக்கிறேன் என் வாழ்க்கையிலேயே எந்த பெண்ணிடமும் நான் இவ்வளவு காதல்கொண்டு தவித்ததில்லை என்று ஈனஸ்வரத்தில் கூறினர்.

எதிர்பாராத இந்த தாக்குதலுக்கு பிரேமகுமாரி தயாராக இருக்கவில்லையாதலால் அவள் அவரை வியப்போடு வெறிக்கப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

இதை நன்றாக சிந்தித்துப்பார் பிரேமகுமாரி! நீ முடியாது என்று மறுத்துவிட்டாலும் அதையும் என்னால் சகித்துக் கொள்ள முடியும் அப்பொழுதும் உன்னைக் குறை கூற மாட்டேன்'

நல்ல வேளையாக அந்த சமயத்தில் ஏகாம்பரம் வந்து மாடியில் தந்தை அழைப்பதாகக் கூறினன் பிரேமகுமாரி எழுந்து சென்றாள்.

வெகுநேரம் வரையில் அவள் கீழ்த்தளத்திற்கு திரும்பிச் செல்லவில்லை. கடைசியாக ஏகாமபரம் அவள் இருந்த இடத்திற்கு வந்து எல்லோரும் படுக்கச் சென்று விட்டார்கள். குமரேசன் மட்டும் கீழ்த்தளத்தில் ஹாலில் இருக்கிறார். அவர் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன் என்றான்.

எனக்காக அவர் ஏன் காத்திருக்க வேண்டும்? என்று ஆத்திரமாகக் கேட்டாள் பிரேமகுமாரி.

ஆனால் ஏகாம்பரத்திற்கு அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

உள்ளபடியே குமரேசன் பிரேமகுமாரியின் வருகைக்காக கத்தான் காத்திருக்கிருன் என்று ஏகாம்பரம் யூகித்து ஒரு புத்திசாலித்தனமான யூகம்தான் பிரேமகுமாரியிடம் அவசர மாக ஒரு தகவலைக் கூறி எச்சரிக்கை செய்யவேண்டுமென்று தான் குமரேசன் காத்துக்கொண்டிருந்தான். எப்படியும் அவள் வருவாள் என்ற நம்பிக்கையோடு குமரேசன் காத்துக் கொண்டிருந்தபோது கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தான். நாகநந்தி அடிகள்தான் உள்ளே நுழைந்தார்.

'மன்னிக்கவேண்டும்'' என்று நிதானமாகக் கூறிய நாக நந்தி அடிகள் இங்கு ஒரு புத்தகத்தை வைத்துப்போய் விட் டேன் என்று கூறிவிட்டு ஆங்கிருந்த ஒரு திருவாசகத்தைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளியே செல்லத் திரும்பி ஞர்.

அந்த நரைமுடி அடிகளார் வாயிற்படி நெருங்கும்வரை காத்திருந்த குமரேசன் சட்டென்று நீங்கள் ரொம்பவும் கலங்கிப் போயிருக்கிறீர்கள் அடிகளே என்ருன்.

'கலங்கிப் போயிருக்கிறேனு?'' என்று கூறியபடி திரும்பி வந்து குமரேசனின் எதிரே இருந்த சோபாவில் அமர்ந்த நாகநந்தி அடிகள் நீ சொல்லுவது சரியல்ல அந்த அப்பாவி மனிதனின் மரணத்தைக் கேட்டு மனசங்கடப் பட்டுக் கொண்டிருக்கிறேன்' என்ருர்.

குமரேசன் இளித்தான் விதி எவ்வளவு பயங்கரமாக விளையாடுகிறது. பாவம். .பரிதாபத்துக்குரிய ஆன்மா!'' என்று புலம்ப ஆரம்பித்தார் நாகநந்தி அடிகள்.

"தனது முட்டாள் தனத்தால் ரங்கசாமி செத்தான்" என்று வெறுப்புடன் கூறிய குமரேசன், "தனது தோழனைப் போல அவன் அவ்வளவு புத்திசாலி அல்ல—அந்த மற்றொரு பேர்வழி இவ்வளவு காட்டுமிராண்டித் தனமாய் நடந்து கொள்ள மாட்டான்" என்றான்.

"மற்றொரு பேர்வழியா?" என்று வியப்புடன் கேட்டார் நாகநந்தி அடிகள்.

"தளுக்கு சுந்தரம்—அவனைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதில்லையா? சரபோஜியின் வலது கை சரபோஜியைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதே இல்லையா? நீங்கள் கேள்வி பட்டிருப்பது மட்டுமல்லாமல் அவனை இதுவரை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளப் போகிறீர்கள் என்றும் நான் பந்தயம் கட்டத் தயாராக இருக்கிறேன்.

நாகநந்தி அடிகள் தலையாட்டிவிட்டு, "நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை! நான் யார் அவனை அடையாளம் கண்டு கொள்ள?" என்று கேட்டார்.

"தளுக்கு சுந்தரத்திற்கு மூளை இருக்கிறது!" என்று கூறிக் கொண்டே வந்த குமரேசன், சட்டென்று நாகநந்தி அடிகளின் மீது பாய்ந்து அவரது நரைத்தாடியையும், நரைத்த தலைமுடியையும் பிய்த்து அப்பால் எறிந்தான்.

பொய்த்தாடியையும் பொய் முடியையும் பறிகொடுத்த தளுக்கு சுந்தரமாகக் காட்சி அளித்தார்!

தளுக்கு சுந்தரம் துள்ளி எழுந்தான். "நீ என்ன—" என்று ஆத்திரத்துடன் ஆரம்பித்தான்.

குமரேசன் சட்டென்று குறுக்கிட்டு பயங்கர நிதானம் படர்ந்த குரலில் மரியாதையாக இங்கிருந்து போய் விடு—

உயிருள்ள போதே தப்பிப் பிழைத்து ஓடி விடு! ரங்கசாமியை எப்படி எச்சரித்தேனோ அதேபோல உன்னையும் எச்சரிக்கிறேன்—நீ மரணத்தை மாலைபோட்டு வரவேற்கிறாய்—நிச்சயம் அது உன்னை தழுவிக் கொள்ளப் போகிறது!" என்றான்

"அக்கறையில்லை. எது வந்தாலும் வரட்டும்" என்று காட்டு முராண்டித்தனமாக கத்திய தனுக்கு சுந்தரம் "எல்லாவற்றிற்கும் துணிந்தே வந்திருக்கிறேன்! எது நடந்தாலும் நடக்கட்டும்" என்றான்.

குமரேசன் ஒரு தினுசாக தலையை ஆட்டிவிட்டு, "எச்சரிக்கையை ஏற்கமாட்டாய்?" அதி புத்திசாலியான தனுக்கு சுந்தரமே! உன்னுடைய புத்திசாலித்தனத்தின் மீது உனக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறது!" என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

"என்னை விரட்டி விடலாமெனக் கனவு காணாதே" என்று வேகமாக மூச்சு வாங்கக் கூறிய தனுந்த சுந்தரம், நான் எதற்காக வந்திருக்கிறேனென்று உனக்குத் தெரிகிறதா? கொள்ளையடித்த தங்கத்தில் என் பங்கு எனக்குக் கிடைக்க வேண்டும்—அது கிடைக்கும்வரை நான் இங்கிருந்து நகர மாட்டேன்" என்று முழங்கினான்.

"இங்கிருந்து நீ பிணமாகத்தான் போகப் போகிறாய்'! என்று நிதானமான குரலில் கூறினான் குமரேசன்.

"நானா......நானா? உன்னைப் பெரிய புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்! உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன்—ரங்கசாமியைப் பற்றி நீ பேசிய உடனேயே, நீ யார் என்று புரிந்து கொண்டேன். இந்த வீட்டில் உன்னை அறிந்தவர், என்னைத் தவிர வேறொருவரும் இருக்கிறார்.

அந்த நபர்தான் சிற்றம்பலம்! அவர் ஒரு முட்டாள் அல்ல— உலகத்தை அங்குலம் அங்குலமாக உணர்ந்தவர்! உன்னையே அவர் உற்று கவனித்துக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்! என்று உறுமினான் தனுக்கு சுந்தரம்.

குமரேசன் திடுக்கிட்டுப் போய் விட்டான்.

"சிற்றம்பலமா? உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?"

எனக்கா பைத்தியம்?" அந்த சிற்றம்பலம் தபால் ஆபீஸிற்குச் சென்று எங்கெங்கோ டெலிபோன் பேசிக்கொண்டிருந்தான். கீழ்ப் பாக்கத்திலும் உன்னைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தான். பிரேமகுமாரியைக்கூட தபால் ஆபீஸிற்கு அருகில் பார்த்தேன்—இதைக் கேட்டதும் திடுக்கிடுகிறாயா? இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் நண்பா! முதலில் சிற்றம்பலத்தை உன் விஷயத்தில் குறுக்கிடாமல் அப்புறப் படுத்து! உன் வேலைத்தனமெல்லாம் எனக்குத் தெரியும் பைத்தியக்கார வேஷம் போட்டு ஊரை ஏமாற்ற கனவு காண்பவன் நீ! என்று சரமாரியாகப் பேசினான் தனுக்கு சுந்தரம்.

குமரேசன் மீண்டும் நிதானமாக" அவனுக்கு அது தெரியுமோ தெரியாதோ, உன்னை நான் எச்சரிக்கைச் செய்கிறேன், நீயு ரங்கசாமி போன வழிதான் போகப் போகிறாய்!" என்று கடுமையாகக் கூறினான்

தனுக்கு சுந்தரம் அருகிலிருந்த கம்பி இல்லாத ஜன்னலை நோக்கி நடந்தான்! என்னை அழிக்க நினைப்பவன், உஷாராக என்னை மூடிக் கொள்ள வேண்டும்!" என்று கூறிவிட்டு ஜன்னலின் திரைச் சீலையை வேகமாக விலக்கி ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்து இருளில் மறைந்தான்,

கொஞ்ச நேரம் வரை குமரேசன் அங்கேயே உட்கார்ந்திருந்தான். அவன் அமர்ந்திருந்த ஹாலுக்கு வெளியே மெதுவாக யாரோ நடக்கும் காலடி சப்தம் கேட்டது.

வேறொரு கதவின் வழியாக வெளிப்பக்கம் சென்று கவனித்தான்.

சிற்றம்பலம் வந்து கொண்டிருந்தார்.

ஏதோ சாமானைத் தேடிக் கொண்டு ஹாலுக்குள் நுழைந்த சிற்றம்பலம் அங்கு தரையில் கிடந்த பொய்த் தாடியையும், பொய் மீசையையும் பார்த்து விட்டார். உடனே அதைக் குனிந்து எடுத்து வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தனுக்கு சுந்தரம் வெளியேறிச் சென்ற கம்பி இல்லாத ஜன்னலின் திரைச் சீலை விலகி இருப்பதைப் பார்த்து நன்றாக இழுத்து விடுவதற்கு அதன் அருகே சென்றார்.

திரைச் சீலையை அவர் இழுத்து விட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று இரண்டு முரட்டுக் கரங்கள் பாய்ந்து வந்து அவர் குரல் வளையை இறுகப் பிடித்து வேகமாக அவரை ஜன்னலுக்கு வெளிப்பக்கம் இழுத்துக்கொண்டன.

படுக்கைக்குச் செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த பிரேமகுமாருக்கு கீழ்த்தளத்தில் ஏதோ போராட்ட சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து அளவு கடந்த வேதனையில் ஒரு மனிதன் அலறும் சப்தம் கேட்டது. அளவு கடந்த பரபரப்போடு பிரேமகுமார் கீழ்த்தளத்திற்கு ஓடி வந்தான். வேகமாக ஹால் கதவைத் தள்ளித் திறந்தான். முந்திய தினத்தைப் போலவே ஹால் ஒரே இருட்டாக இருந்தது.

"ஒன்றுமில்லை" என்று ஒரு குரல் வந்தது. அதைத் தொடர்ந்தே திடீரென விளக்குகள் எரிந்தன.

குமரேசன் ஜன்னலுக்கருகே நின்று கொண்டிருந்தான் அவனது ஆடைகள் அலங்கோலமாக இருந்தன.

"திறம்பலம்!" என்று பெருமூச்சு வாங்க கூறிய பிரேம குமாரி, "அவர் குரலை நான் கேட்டேன்—அவர் எங்கே?", என்று பதறினாள்.

"எனக்குத் தெரியாது என்றான் குமரேசன்.

அந்த சமயத்தில் பிரேமகுமாரியின் பார்வை குமரேச னின் ஷர்ட்டின்மீது சென்றது. ஷர்ட்டின் முன் பக்கத்தில் இரத்தக் கறைபட்டிருந்தது—அதைப் பார்த்து மூர்ச்சையாகி பிரேமகுமாரியை தனது கரங்களில் தாங்கிப் பிடித்தான் குமரேசன். கொலையுண்ட மனிதனின் அந்த ரத்தம் அவள் புடவையிலும் சோர்ந்தது.

★ ★ ★

# அத்தியாயம் 13

நள்ளிரவு இரண்டரை மணிக்கு இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி மயானமாளிகை வந்து அதை ஒருமுறை பார்த்து விட்டு தோட்டத்து பக்கம்சென்று ஆராய்ந்தார்.

அவர் மாளிகைக்குத் திரும்பி வந்தபொழுது ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடி குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தாள் மைனுவதி.

அவளை எழுப்பிவிட்ட பரஞ்சோதி "பேசாமல் படுக்கைக்குப் போ" மணி மூன்ருகப் போகிறது என்ருர்.

விழித்துக் கொண்டதும் வைனுவதி மெதுவாகத் தேம்ப ஆரம்பித்தாள். "பாவம் சிற்றம்பலம்! அவரைப்போன்ற நல்ல மனிதர்களைக் காணவே முடியாது" என்று ஓலமிட்டாள்

"அவர் இறந்து விட்டாரா என்று இன்னும் நாங்கள் நிச்சயம் செய்யவில்லை" என்று கடுகடுப்புடன் கூறிஞர் பரஞ்சோதி.

"தரையெல்லாம் ஒரே ரத்தமாக இருந்ததே" என்று தேம்பிய மைனுவதி, "அந்த நாகதந்தி அடிகள்—

COMICS PDF TIMES

அவரும் உதிகமானவர்—அவரையாவது கண்டு பிடித்திர்களா? என்று நவித்தாள்.

"அந்த தங்கபரன நாகநந்தி அடிகள் இப்பொழுது சென்னையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிருர்" என்று எரிச்சலாகக் கூறிய பரஞ்சோதி "அவனைப்பற்றி நீ கவலைப் படவேண்டாம். அவன் ஒரு பழைய குற்றவாளி அவன் பெயர் தனுக்கு சந்தாம்" என்ருர்.

சட்டென்று மைனுவதி நிமிர்ந்து உட்கார்ந்து ஏகாம்பரத்தை விசாரித்திர்களா? அவன் இன்று இரவு ரொம்ப விசித்திரமாக நடந்து கொண்டான். இரண்டு தடவை இங்குள்ள சுரங்க அறைக்கு அவன் சென்று திரும்பினன். கடைசியாக அவன் வந்த பொழுது அவன் முழங்காலில் மண்ஒட்டிக்கொண்டிருந்தது—ஏன் தெரியுமா? அவன் இங்கு புதைக்கப்பட்டிருக்கும் தங்கத்தை தேடிக்கொண்டிருக்கிருன்" என்று பெருமிதத்துடன் கூறினள்.

'இந்த வீட்டில் தங்கம் இருக்கிறதா? சரபோஜியின் கதையை எனக்கு சொல்கிருயா!...பேசாமல் படுக்கப்போ! என்று கடிந்து அவளை படுக்கைக்கு அனுப்பினர் பரஞ்சோதி,

ஸப்இன்ஸ்பெக்டர் வேதாந்தம் ஒரு தகவல் கொண்டு வந்தார். அவரது சந்தேகம், காளல் வெள்ளையப்பாவின் பக்கம் திரும்பி இருந்தது.

"வெள்ளையப்பாவா, பைத்தியக்காரத்தனம்! அவர் எதர்காக" என்று அவநம்பிக்கையோடு ஆரம்பித்தார் பரஞ்சோதி

"அதைத்தான் உங்களுக்கு சொல்லப்போகிறேன். வெள்ளையப்பா ரொம்ப நொடித்துப் போயிருக்கிருர்.

சிற்றம்பலத்திடம் அவர் ஏராளமாகக் கடன் வாங்கி இருக்கிருர். சிற்றம்பலம் மாயமாக மறைந்தார். என்று கேள்விப் பட்டதும் கர்னல் வெள்ளையப்பா முதல் வேலையாக சிற்றம் பலத்தின் அறைக்குச் சென்று அதிலிருந்து ஒரு பிராமிசரி நோட்டை வெளியே எடுத்தார். அந்த நோட்டு இதோ என்னிடம் இருக்கிறது" என்ருர் கோவிந்தம்.

பரஞ்சோதி அந்த பிராம்சரி நோட்டை யோசனையோடு வாங்கிப்பார்த்தார்.

"வெள்ளையப்பாவை இங்கே கூப்பிடு?"

தடுமாறியபடி கர்னல் வெள்ளையப்பா வந்து சேர்ந்தார் அவர் வெகுவாக ஆடி போயிருப்பது தெளிவாக தெரிந்தது

தன்கையிலிருந்த பிராம்சரி நோட்டை வெள்ளையப்பா விடம் நீட்டியபடி, "இந்த மாளிகையில் நடமாடும் பிசாசைப் பற்றிய மர்மங்களெல்லாம் இதில் தான் அடங்கி இருக்கிறதா? இங்கு நடைபெறும் விபரீதங்களுக்கெல்லாம் இது தானு காரணம்? என்று கேட்டார்.

'நான் வாங்கிய கடனுக்கு எழுதிக்கொடுத்த நோட் அது" என்று மெதுவான குரலில் கூறினுர் வெள்ளியப்பா.

பரஞ்சோதி தலையாட்டியபடி, "பத்து வருஷங்களுக்கு முன்னுல் ராணுவத்தில் ஒரு நிதிக்கு நீங்கள் காரியதரிசியாக இருந்தீர்கள். அந்த கணக்குப் பரிசோதனை நடந்தபோது ஏராளமான பணம் மாயமாய் மறைந்திருப்பது தெரிந்தது நீங்கள் கைது செயப்படவிருந்த சமயத்தில் அந்த பணத் திற்கு எப்படியோ ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள். அதை சிற்றம்பலத்திடமிருந்து கடன் வாங்கினீர்களா? என்று கேட் டார்.

''ஆமாம்''

''இரண்டொரு மணி நேரத்திற்கு முன்னால் சிற்றம்பலத்தின் ரெக்கார்டுகளை தேடிபார்த்துக் கொண்டிருந்தீர்கள் அது இதற்காகத் தானா? '' என்று கண்டிப்பான குரலில் கேட்டார் பரஞ்சோதி.

மாஜி ராணுவக்காரரான கர்னல் வெள்ளையப்பா மமதையோடு ''என்னை நீங்கள் குறுக்கு விசாரணை செய்ய முடியாது. என் சொந்த விஷயங்களைப்பற்றிக் கேட்க நீங்கள் யார்? என்று சீறினார்.

''கர்னல் வெள்ளியப்பா '' என்று நிதானமாக ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ''முந்திய இரவு உங்கள் வீட்டில் ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். இன்றிரவு ஒரு நல்ல மனிதர் மாயமாய் மறைந்திருக்கிறார். உங்களை கேள்வி கேட்க எனக்கு எல்லா உரிமையும் உண்டு. நான் விரும்பினால் உங்களை கைது செய்யும் உரிமையும் எனக்கு உண்டு'' என்றார்.

''அப்படியானால் என்னை கைது செய்யுங்கள் என்றார் கர்னல் வெள்ளியப்பா. அவர் குரல நடுங்கியது.

''வெள்ளியப்பா! நீங்கள் இருக்கும் நிலையை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். யாருமே பார்த்தறியாத யாரோ ஒரு நபர் இந்த வீட்டில் இருக்கிறான்...அவனை நீங்கள் மறைத்து வைத்துப் பாதுகாக்கிறீர்கள்'' என்றார்

''நான் சொல்ல வந்தது இது தான்'' என்று ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ''சிற்றம்பலத்திடம் நீங்கள் கடன் வாங்கி இருப்பதாக கூறிக்கொள்வது ஒரு கண்கட்டு வேலை ஏனென்றால் நீங்கள் கடன் வாங்கிய அதை தோல்த்தி

உங்கள் கைவசம் தாராளமான பணம் இருந்தது. போலீஸா ரால் தேடப்பட்டு வந்த ஒரு பயங்கர குற்றவாளியை பாது காக்கத்தான் நீங்கள் இந்த மாளிகையை விலைக்கு வாங்கி னீர்கள்...இந்தக் குற்றவாளியின் பெயர் சரோஜி" என்று நிறுத்தினார்,

" சுத்த பொய்! "என்று கரகரத்த குரலில் கூறினார் கர்னல் வெள்ளியப்பா,

"அப்படியானால் இன்னொரு விஷயமும் உங்களுடன் கூறு கிறேன் "என்று விடாமல் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி" இந்த வீட்டில் எங்கோ ஒரு இடத்தில் பலலட் சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கம் புதைக்கப்பட்டி ருக்கிறது. பிரசித்தி பெற்ற தங்கக் கொள்ளையில் சம்பந்தப் பட்ட தங்கம் அது. இந்த மாளிகையிலுள்ள பாதாள அறை ஒன்றில் அரை நிதானமும், அரை பைத்தியமும் உள்ள ஒரு மனிதன் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான்" என்றார்.

"உண்மையை நாம் வெளிப்படையாக மனம் திறந்து பேசலாம்" என்றார் பரஞ்சோதி. கர்னல் வெள்ளியப்பாவும் பரஞ்சோதியும், வேதாந்தமும் வெள்ளியப்பாவின் பிரத்தி யேக அறைக்கு சென்று கதவை உட்புறம் தாளிட்டுக் கொண் டனர்.

குமரேசன் அந்த நேரத்தில் பிரேம குமாரியை எங்கோ தனியே அழைத்துக்கொண்டு சென்று உலாவிவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவன் ஆடைகள் செல்லாம் சுத்தமாக இருந்தன. தனது பழைய உடைகளை அவன் மாற்றிக்கொண்டிருந்தான். மாளிகையை நெருங்கி யதும் சுற்று முற்றும் கவனித்த குமரேசன், "நல்லவேளையாக யாரும் இல்லை, என்னோடு இந்த நேரத்தில் வெளியே

''ஆமாம்''

''இரண்டொரு மணி நேரத்திற்கு முன்னால் சிற்றம்பலத்தின் ரெகார்டுகளை தேடிபார்த்துக் கொண்டிருந்தீர்கள் அது இதற்காகத் தானா? '' என்று கண்டிப்பான குரலில் கேட்டார் பரஞ்சோதி.

மாஜி ராணுவக்காரரான கர்னல் வெள்ளையப்பா மமதையோடு ''என்னை நீங்கள் குறுக்கு விசாரணை செய்ய முடியாது. என் சொந்த விஷயங்களைப்பற்றிக் கேட்க நீங்கள் யார்? என்று சீறினார்.

''கர்னல் வெள்ளியப்பா'' என்று நிதானமாக ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ''முந்திய இரவு உங்கள் வீட்டில் ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். இன்றிரவு ஒரு நல்ல மனிதர் மாயமாய் மறைந்திருக்கிறார். உங்களை கேள்வி கேட்க எனக்கு எல்லா உரிமையும் உண்டு. நான் விரும்பினால் உங்களை கைது செய்யும் உரிமையும் எனக்கு உண்டு'' என்றார்.

''அப்படியானால் என்னை கைது செய்யுங்கள் என்றார் கர்னல் வெள்ளியப்பா. அவர் குரல் நடுங்கியது.

''வெள்ளியப்பா! நீங்கள் இருக்கும் நிலையை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். யாருமே பார்த்தறியாத யாரோ ஒரு நபர் இந்த வீட்டில் இருக்கிறான்...அவனை நீங்கள் மறைத்து வைத்துப் பாதுகாக்கிறீர்கள்'' என்றார்

''நான் சொல்ல வந்தது இது தான்'' என்று ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி ''சிற்றம்பலத்திடம் நீங்கள் கடன் வாங்கி இருப்பதாக கூறிக்கொள்வது ஒரு கண்கட்டு வேலை ஏனென்றால் நீங்கள் கடன் வாங்கிய அதை தோல்த்தி

உங்கள் கைவசம் ஏராளமான பணம் இருந்தது. போலீஸா ரால் தேடப்பட்டு வந்த ஒரு பயங்கர குற்றவாளியை பாது காக்கத்தான் நீங்கள் இந்த மாளிகையை விலைக்கு வாங்கி னீர்கள்...இந்தக் குற்றவாளியின் பெயர் சரோஜி" என்று நிறுத்தினார்,

"சுத்த பொய்! "என்று கரகரத்த குரலில் கூறினார் கர்னல் வெள்ளியப்பா,

"அப்படியானால் இன்னொரு விஷயமும் உங்களுடன் கூறு கிறேன் "என்று விடாமல் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பாஞ்சோதி" இந்த வீட்டில் எங்கோ ஒரு இடத்தில் பலலட் சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கம் புதைக்கப்பட்டி ருக்கிறது. பிரசித்தி பெற்ற தங்கக் கொள்ளையில் சம்பந்தப் பட்ட தங்கம் அது. இந்த மாளிகையிலுள்ள பாதாள அறை ஒன்றில் அரை நிதானமும். அரை பைத்தியமும் உள்ள ஒரு மனிதன் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான்" என்றார்.

"உண்மையை நாம் வெளிப்படையாக மனம் திறந்து பேசலாம்" என்றார் பாஞ்சோதி. காலல் வெள்ளியப்பாவும் பாஞ்சோதியும், வேதாந்தமும் வெள்ளியப்பாவின் பிரத்தி யேக அறைக்கு சென்று கதவை உட்புறம் தாளிட்டுக் ககாண் டனர்.

குமரேசன் அந்த நேரத்தில் பிரேம குமாரியை எங்கோ தனியே அழைத்துக்கொண்டு சென்று உலாவிவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவன் ஆடைகள் செல்லாம் சுத்தமாக இருந்தன தனது பழைய உடைகளை அவன் மாற்றிக்கொண்டிருந்தான். மாளிகையை நெருங்கி யதும் சுற்று முற்றும் கவனித்த குமரேசன், "நல்லவேளையாக யாரும் இல்லை, என்னோடு இந்த நேரத்தில் வெளியே

வந்ததை யாரிடமும் சொல்லாதே!" என்றான்.

இருவரும் ஹாலை அடைந்ததும் பிரேம குமாரி ஆயாசத்தோடு ஒரு நாற்காலியில் சாய்ந்தாள்.

"எனக்கு சமீப காலத்தில் தோன்றி இருக்கும் இரவு வியாதியின் எதிரொலி இது" என்று கூறிய பிரேம்குமாரி "இந்த வீட்டிற்குள் இருப்பதைவிட வெளியே எங்கு இருந்தாலும் பாதுகாப்பாக இருப்பது போல் எனக்கு தோன்றுகிறது" என்றாள்.

"எனக்கு எந்த இடமும் பாதுகாப்பாகத் தோன்றவில்லை" என்று கூறிய குமரேசன், "நான் மூன்றிரவு இந்த அறையிலேயே தூங்கப் போகிறேன்...ஏகாம்பரம் எங்கே?" என்று கேட்டான்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" "குடிக்க தண்ணீர் வேண்டும்" என்று குமரேசன் அங்கிருந்த ஒரு மணியை அடித்தான்.

கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்தவனைப் போல அவ்வளவு சீக்கிரம் உள்ளே வந்தான் ஏகாம்பரம். அவன் சட்டை ஈரமாக இருந்தது.

"ஓ" என்று அவனைக் கூர்மையாகப் பார்த்த குமரேசன் "எதற்காக நீ தோட்டத்தில் மோப்பம் பிடித்துக் கொண்டு அலைந்தாய்!" என்று கேட்டான்.

"சும்மா சுற்றிக் கொண்டிருந்தேன் ஸார்! அதில் தவறு ஒன்றுமில்லையே?" என்று சங்கடத்தோடு கேட்டான் ஏகாம்பரம்.

அப்போது பிரேம்குமாரிக்கு ஒருவித பயம் நினைவுக்கு வந்தது "ஏகாம்பரம்! நீ போலீசாருடன் இருந்தாயே அவர்கள் என்ன சொல்கிறார்கள்!"

குமரேசன் சிரித்தான். அந்த சிரிப்பிலே இகழ்ச்சி கலந்திருந்தது.

"நான் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்று பொறுமை இழந்து கூறினாள் பிரேம்குமாரி.

'அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறேன்" என்று அவளை வெறித்துப்பார்த்தபடி கூறிய ஏகாம்பரம்," இந்தக்கூடாரத்தில் எங்கோ ஒருபகுதியில் சிற்றம்பலம் இறந்து விட்டார் என்று அவர்கள் நினைக்கிறார்கள்... இது விசித்திரமாக இல்லையா?" என்று கேட்டான்.

பிரேமகுமாரி நடுங்கினாள்.

"அது மட்டுமல்ல. நாகநந்தி அடிகளும் தீர்ந்து விட்டார் என்று அவர்கள் நினைக்குறார்கள் என்று உற்சாகத்துடன் ரசித்து கூறிய ஏகாம்பரம்." வேதாந்தம் அந்த இன்ஸ்பெக்டரிடம் சொல்லிக்கொண்டிருந்ததை கேட்டேன் சிற்றம்பலத்துக்கும், மயானருத்திரனுக்கு சண்டை நடந்து கொண்டிருந்த போது நாகநந்தி அடிகள் உள்ளே நுழைந்திருக்க வேண்டுமென்றும், அப்பொழுது மயானருத்ரன் அவர்கள் இருவரையும் கொலை செய்திருக்க வேண்டுமென்றும் வேதாந்தம் அபிப்பிராயப்படுகிறார்" என்றான்.

"மயானருத்ரனா?" என்று திருப்பிக்கேட்டாள் பிரேம்குமாரி.

"அப்படித்தான் அவனை அழைக்கிறார்கள். ஒரு நாளில் இரண்டு மணிநேரம் அவனுக்குப் பைத்தியம் பிடித்துக் கொள்கிறதாம் இது ரொம்ப விசித்திரமாக இல்லையா? நம் மைச் சுற்றி ஒரு வைத்தியம் நடமாடிக் கொண்டிருக்கிறது... ஆனால் அந்தப் பைத்தியம் யாரென்றே ஒருவருக்கும் தெரியாது" என்று நிறுத்தினான்.

"சரி நீ போய் குடிக்க ஜலம் கொண்டுவா!" என்றான் குமரேசன்.

கொஞ்ச நேரத்தில் ஜலத்தைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டு வெளியே சென்றான் ஏகாம்பரம்.

குமரேசன் ஒரு சாய்வு நாற்காலியை சுவற்றிக்கு எதிர்புறமாக இழுத்துப்போட்டான். அந்த நாற்காலிக்கு எதிரே சுவற்றை யொட்டி ஒரு பெரிய ஸோபாவையொட்டி ஒரு பெரிய சோபாவை தள்ளிவைத்தான்.

"நீங்கள் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் பிரேமகுமாரி.

'தூங்கப் போகிறேன்."

அதற்கு சுவற்றின் அருகே அந்த ஸோபாவை ஏன் இழுத்துப் போட்டீர்கள்?"

'அங்குதான் சித்தர்வாசல் இருக்கிறது! அதைத் திறந்து கொண்டு பிசாசு வராமல் தடுக்கவே அம்மாதிரி செய்தேன்' என்று சிரித்தான்.

பிரேமகுமாரி தயங்கியபடி 'நான் அறைக்குள் நுழைந்த பொழுது நீங்கள் ஜன்னலருகே ரத்தக்கறை படிந்த சட்டை

புடன் நின்று கொண்டிருந்தீர்களே அப்பொழுது என்ன நடந்தது?" என்று இரண்டாவது தடவையாகக் கேட்டாள் பிரேமகுமாரி.

அதுதான் சொன்னேனே இருட்டிலே யாரோ இங்கு சண்டைபோரட்ட சமயத்தில் நான் உள்ளே நுழைந்து விட்டேன் என் முகத்திலே படீரென ஒரு குத்து விழுந்தது— அவ்வளவுதான்; அந்த ஆட்கள் யாரென்று நான் கண்டு பிடிப்பதற்குள் மறைந்து விட்டார்கள். என்று கூறிவிட்டு ஒரு பெரிய கம்பளியை எடுத்து உடல் முழுவதும் போர்த்தியபடி சாய்வு நாற்காலியில் படுத்தான் குமரேசன்.

COMICSPDF TIMES

அந்தச் சமயத்தில் பரஞ்சோதியும் கர்னல்வெள்ளியப்பாவும் அங்கே வந்தார்கள்.

'இங்கே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று குமரேசனிடம் சீறினார் வெள்ளியப்பா. ஹேமமாலினி விட்டுச் சென்றிருந்த போர்வையை அவன் எடுத்துப் போர்த்திக் கொண்டிருந்தது வெள்ளியப்பாவின் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தியது.

'உன் அறையில் போய் படுத்துத் தூங்கு!" என்று கடுமையாகக் கூறினார் கர்னல்.

'தொலைந்து போகட்டும் விடுங்கள்!" என்று ஆதரவாகக் கூறினார் இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி.

பிறகு பிரேமகுமாரியின் பக்கம் திரும்பிய இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி நாங்கள் மீண்டும் தோட்டத்துக்கு செல்லுகிறோம். நீ ஜாக்கிரதையாக தாளிட்டுக்கொண்டு இரு. உன் தந்தையின் குரல் கேட்டாலொழிய கதவை திறக்காதே" என்றார்-

'நீ உன் அறைக்கு போய்விடு பிரேமகுமாரி!' என்றார் கர்னல்.

'நான் இங்கேயே இருக்கிறேன் அப்பா!'

'வேண்டாம் பிரேமகுமாரி'

'சும்மா அவனை விட்டு விடுங்கள்' என்று பொறுமை யிழந்து கூறிய பரஞ்சோதி அவன் பிரேமகுமாரிக்கு எந்த தீங்கும் செய்ய மாட்டான்!' என்றார்.

குமரேசன் அந்தப் போர்வையை இழுத்து தலை முகம் எல்லாவற்றையும் மூடிக்கொண்டான். கொஞ்ச நேரத்தில் அவன் தூங்கி விட்டான் என்று முடிவு செய்த பிரேமகுமாரி மெதுவாக அங்கிருந்து கிளம்பி ஹால் கதவை திறந்தாள். இருளிலே வாட்ட சாட்டமாக நின்று கொண்டிருந்த ஒரு கரிய உருவத்தை அவள் கவனிக்கவில்லை, உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அந்த உருவம் ஒரு கருப்பு அங்கியைப் போர்த்திக் கொண்டிருந்தது

பிரேமகுமாரி சற்றும் எதிர்பாராத நிலையில் குபீரென பாய்ந்து ஒரு கையால் அவளது வாயைப் பொத்தி மற்றொரு கையால் அவள் இடுப்பை இறுக்கிப் பிடித்தது. தன்னைச் சிறை செய்த அந்த கரிய உருவத்தைப் பார்த்ததும் அளவு கடந்த கதிகலக்கத்தால் செயலற்றுப் போய்விட்டாள் பிரேமகுமாரி.

கொஞ்சங்கூட ஓசைப்படாமல் அவளை அலாக்காகத் தூக்கிக்கொண்டு நடந்து சென்ற அந்த உருவம் கர்னல் வெள்ளியப்பாவின் படுக்கையறைக்கு அருகாமையில் இருந்த ஒரு சிறு சாமான் அறையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது. பிறகு அந்தக் கதவை மூடிவிட்டு அந்த அறை யின் மத்தியிலிருந்த ஒரு பொறிக் கதவைத் திறந்துகொண்டு

அங்கு காணப்பட்ட கருங்கற் படிக்கட்டு வழியாக பாதாளத்தை நோக்கி நடந்தது. அப்படிச் செல்லும்போது பொறிக் கதவையும் இழுத்து சாத்தி உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டது அந்த உருவம்.

★ ★ ★

# அத்தியாயம் 14

'பிரேமகுமாரியை நீங்கள் சென்னைக்கு அனுப்பி விடுவது நல்லது! போலீஸ் காரிலேயே அனுப்பி விடுங்கள்'' என்றார் பரஞ்சோதி.

'அவளிடம் எப்படி நான் உண்மையைக் கூறுவது!'' என்று தயங்கினார் வெள்ளியப்பா.

எப்படி இருந்தாலும் சரபோஜியை இன்றிரவு கைது செய்யப் போகிறேன். அப்பொழுது அவனால் யாருக்காவது ஆபத்து நேரிடலாம். நீங்களும் ஒதுங்கி விடுங்கள் இந்த வீட்டை வாங்குவதற்கு அவன்தானே உங்களுக்குப் பணம் கொடுத்தான்?'' என்று கேட்டார் பரஞ்சோதி.

கொள்ளை நடப்பதற்கு முன்பே அவன் இந்த வீட்டை வாங்கி விட்டான்! என்று கூறிய வெள்ளியப்பா எந்த விநாடியிலும் கைதாகிவிடுவோம் என்ற திகிலில் நான் இருந்தேன். என் நிலைமை அவனுக்கு எப்படித் தெரிந்தது என்று என்னால் சொல்ல முடியவில்லை அவனைப் பற்றி நான் அதற்கு முன்னால் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால் அவன் எனக்குக் கடன் கொடுத்து நிரந்தர வருமானம் ஏற்படுத்தி ஒரு வீடும் வாங்கித் தருவதாக கூறியதால் நான் ஒப்புக் கொண்டேன். அந்தச் சமயத்திலெல்லாம் இவன்தான் சரபோஜி என்றே

எனக்குத் தெரியாது. ஒரு வருஷத்திற்கு முன்புவரை எனக்கு தெரியவே தெரியாது' என்றார்.

"இந்த இடத்திற்கு சரபோஜியை தேடிவந்த போலீஸ் அதிகாரிகளை அவன் கொலைசெய்து விட்டான்" என்று இன்ஸ் பெக்டர் பரஞ்சோதி கூறியதும் வெள்ளியப்பாவின் உடல் நடுங்கியது.

பேசிக்கொண்டே நடந்து வந்த அவர்கள் இதற்குள். மாளிகை வாசலை நெருங்கி விட்டார்கள். இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி மாளிகைக் கதவைத் தட்டினார். ஒரு பதிலும் வரவில்லை. மீண்டும் தட்டினார் அப்பொழுதும் பதில் இல்லை.

பின்புறமாகச் சென்று கதவைத் தட்டினார்கள். ஏகாம்பரம் கதவைத் திறந்து விட்டான்.

'பிரேமகுமாரி எங்கே?' என்று கேட்டார் பரஞ்சோதி.

'நான் பார்க்கவில்லையே!''

முன் ஹாலை அடைந்து விளக்கைப் பொருத்தியபோது நாற்காலியில் கம்பளியால் முகமெல்லாம் மூடிக்கொண்டு உறங்கிய அந்த உருவத்தைத் தவிர வேறு யாருமே இல்லை

திடீரென இன்ஸ்பெக்டர் மனதிலே ஒரு திகில் படர்ந்தது. அப்பொழுது வாயிற்படி பக்கம் வெள்ளியப்பாவின் பார்வை சென்றது. அங்கே பிரேமகுமாரி அணிந்திருந்த வளையல்கள்,இரண்டு நொறுங்கிக் கிடந்தன.

பரஞ்சோதியும் வெள்ளியப்பாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"மயான ருத்ரன் இங்கு வந்திருக்கிறான்!" என்று திகிலுடன் கூறினார் வெள்ளியப்பா.

இன்ஸ்பெக்டர் பரஞ்சோதி குமரேசன் படுத்திருந்த நாற்காலியை வேகமாக நெருங்கியபடி, "எழுந்திரு!, குமரேசன்! பிரேமகுமாரியைக் காணோம்!" என்று கூறியபடி வேகமாக அந்தப் போர்வையை இழுத்தார். போர்வைக்கு அடியிலே, கண்களை மூல விரித்தபடி ஒரு பிணம் இருந்தது. —அது தனுக்கு சுந்தரத்தின் பிணம்தான்!

★ ★ ★

# அத்தியாயம் 15

பிரேமகுமாரிக்கு ஸ்மரணை வருவதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது. அவள் கண்விழித்துப் பார்த்தபோது எங்கோ ஒரு சடப்பைக் கல் தரையில் படுத்திருப்பதை உணர்ந்தாள். அவளுக்கு நேரே உயரத்தில் ஒரு நீல நிற விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவளது காதில் சங்கநாதம் ஒலித்துக் கொண்டிருந்தது.

மெதுவாகப் போராடி எழுந்து உட்கார்ந்த பிரேமகுமாரி சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள். அவள் இருந்த இடம் ஒரு 'தரகாளி கோவிலை' போல் இருந்தது. சிறிது தூரத்தில இருந்த சிலைக்கு அருகாமையில், தரையில் உட்கார்ந்படி சங்கநாதத்தை முழங்கிக் கொண்டிருந்தான். அந்த கருட்பு உடை அணிந்த மனிதன்.

பிரேமகுமாரி மயக்கத்திலிருந்து எழுந்து விட்டதைக் கண்டதும், அந்தக் கருப்பு அங்கி மனிதன் அவளை நோக்கி மெதுவாக நடந்து வந்தான். அளவு கடந்த பயத்தினால் கதி கலங்கிப் போன பிரேமகுமாரியால்! கொஞ்சம்கூட நகரமுடியவில்லை.

"பயப்படாதே பிரேமகுமாரி," என்று மெல்லிய குரலில் கூறிய அந்த முகமூடி மனிதன் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை, என்தங்கமே" என்றான்.

உச்சந்தலையிலிருந்து காலவரை—கண்களுக்கு மட்டும் ஓட்டைகள்விட்டு—அவன் அங்கி அணிந்திருந்த படியால், அவனது குரல் சரிவரக் கேட்கவில்லை.

"நீ யார்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள் பிரேம குமாரி.

"உன் நண்பன்—உன் காதலன்—உன்னை வழிபடுபவன்!"

பிரேமகுமாரியால் தனது காதுகளையே நம்பமுடியவில்லை தான் காண்பது ஒரு பயங்கர கனவா என்ற சந்தேகம் அவள் உள்ளத்தில் எழுந்தது.

அந்தப் பாதாள அறைக்கு இரண்டு படிக்கட்டுகள் இருப் பது இப்பொழுது அவள் கண்களுக்குத் தெரிந்தது. இரண் டும், வெவ்வேறு திசைகளில் மேல் நோக்கிச் சென்றன.

'நீ யார்?" என்று மீண்டும் கேட்டாள் பிரேமகுமாரி அந்த உருவம் மெதுவாகத் தனது அங்கியைக் கழற்றியது.

பிரேமகுமாரியால் தன் கண்களை நம்பமுடியவில்லை அது சிற்றம்பலம்தான்! சிற்றம்பலத்தின் நரைமுடிகள் பறந்து கொண்டிருந்தன. அவர் கண்கள் தீப் பிழம்பைப் போல் ஒளி வீசிக்கொண்டிருந்தன.

"சிற்றம்பலம்!" என்று மூச்சு வாங்கக் கூறினாள் பிரேம குமாரி.

"பிரேமகுமாரி! அது புனைப்பெயர்—என்னை சரபோஜீ என்று அழை!" என்றான் மகா பயங்கரமான சரபோஜ்,

"பிரேமகுமாரி, என் அன்பே!" உனக்காக வெகுகாலம் காத்திருந்தேன்! இந்தத் தருணத்தை நோக்கிப் பல வருஷங்கள் காத்திருந்தேன்!" என்று அவளை நெருங்கினான்,

சட்டென்று துள்ளி எழுந்த பிரேமகுமாரி பின் வாங்கி நின்றாள்.

"என்னைக் கண்டு பயப்படுகிறாயா, பிரேமா?" என்றான் சரபோஜி.

"தனது முழு தைரியத்தையும் வரவழைத்துக் கொண்ட பிரேமகுமாரி தன்னை வெகுவாகச் சமாளித்துக் கொண்டு, "இல்லை! எதற்காக நான் உங்களிடம் பயப்பட வேண்டும்? நீங்கள் தற துவி டீ'கனா என்றுகாண் நான் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தேன், உங்களை உயிரோடு காணும்போது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி ஏற்படுகிறது!"

"எனக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது! என் கண்ணே!— உன் காதலனுக்கு ந்தத் தீங்கும் நேரி ாது! இந்த கிடைத் தற்கரிய ரிஷைப் பெறுவ ற்சாக, சிவனே என்னை இவ்வளவு காலம் பாளகாத்து வைத்திருக்கிறார்! என்றான் சரபோஜி.

பிரேமகுமாரியின் கால்கள் வெட வெடவென்று நடுங் கின. மயக்கமுற்று விழுந்துவிடாமலிருக்க அவள் வெகுவாகப் போராட வேண்டியிருந்தது!

"என்னைக் கண்டு பயப்படவில்லையே, நீ?" என்று மூச்சு வாங்கக் கேட்ட சரபோஜி, "உனக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் காதலனைக் கண்டு நீ பயப்பட வில்லையே?" என்று கேட்டபடி சட்டென்று அவள் கரத்தைப் பிடித்த சரபோஜி மற்றொருகையால் அந்தபாதாள அறையை சுட்டிக் காட்டிக் காட்டி, "இங்கே ஏராளமான செல்வம் இருக்கிறது! ஏராளமான தங்கம் புதைக்கப்பட்டிருக்கிறது! என் கையாலேயே அவற்றைப் புதைத்தேன்! இந்த காளி கோவிலின் அடியில் ஏராளமான சுரங்கங்கள் இருக்கின்றன. அவையெல்லாம், இங்கு அடக்கமான சித்தர்களின் சமாதி

மூட்டைகள்; அங்கிருந்த எலும்புக் கூடுகளையெல்லாம் தூக்கி வெளியே எறிந்துவிட்டு வெறறியெல்லாம் தங்கக்கட்டிகளைப் புதைத்தேன். அதோ, பராசக்தியின் இருபுறமும் உள்ள பிரமாண்டமான மரத்தூண்களுக்கு உள்ளேயும் தங்கக்கட்டிகளைப் போட்டு நிரப்பியிருக்கிறேன்" என்றான்.

சரபோஜிக்கு பைத்திய வியாதி உண்டென்று அறிந்த பிரேமகுமாரி அவனை பைத்தியம் பிடிக்காமல் வைத்துக் கொள்வதற்காக அவன் மனம் மகிழும் வகையில் பேசி நடிக்கத் தீர்மானித்தாள்.

"இது எந்த இடம் சிற்லம்பலம்? இதை நான் இதற்கு முன்னால் பார்த்ததே இல்லையே?"

சரபோஜி அவளை விசித்திரமாகப் பார்த்தான். அவன் முகத்திலே மெதுவாக ஒரு புன்னகை மலர்ந்தது.

"இதுதான் நமது மணமண்டபம்! இங்குதான் நாம் மணம் செய்துகொள்ளப் போகிறோம்! இங்கு ஏராளமான பேர் மணம் செய்து கொண்டிருக்கிறார்கள்! இங்கு ஏராளமான பேர் இறந்தும் இருக்கிறார்கள்! நாமும் இங்குதான் இறக்கப் போகிறோம்!" என்று கூறிவிட்டு கடகடவெனச் சிரித்தான். பயங்கரமான அந்தச் சிரிப்பொலியை, இரவு நேரங்களில் கேட்ட நினைவு பிரேமகுமாரிக்கு எழுந்ததும் அவளது இரத்தம் உறைந்து விடுவதுபோல் இருந்தது.

என் கையாலேயே இந்த இடத்தில் ஆட்களைப் புதைத்திருக்கிறேன் இங்கே! என்று ஒரு இடத்தை சுட்டிக்காட்டிய சரபோஜி அதோ அங்குதான் என்று வேறொரு இடத்தையும் சுட்டிக்காட்டி விட்டு அவர்கள் இருவரும் என்னைத் தேடிப் பிடிக்க வந்தார்கள், போலீஸ் கமிஷனர் ஆபீஸிலிருந்து வந்த பிரகஸ்பதிகள்." என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

பிறகு ஒரு புதை குழியின் அருகில் முழந்தாளிட்டு அமர்ந்த சரபோஜி அப்பா கைலாசம் போனவனே காதில் விழுகிறதா? இந்த சரபோஜியை பிடிக்கத் துடித்துக்கொண்டு வந்தாயே! நான் உயிரோடு இருக்கிறேன் நீ எங்கேடா இருக்கிறாய் என் கண்ணே?" என்று மீண்டும் சிரித்தான்.

பிறகு நடுங்கிக் கொண்டிருக்கும் பிரேமகுமாரியின் பக்கம் திரும்பி என்னை மயானருத்ரன் என்று அழைக்கிறீர்கள் அப்பாவி மனிதனுக்கு அவ்வளவு பெரிய பெயர்? ஒன்றும் அறியாத சிற்றம்பலத்திற்கு அந்த பொன்னம்பல நாதனின் பேயர்? என் எதிரிலேயே மயானருத்ரனைப் பற்றி அந்த ஹேமமாலினி பேசுவாள்! நான் மனதிற்குள் சிரித்துக் கொள்ளுவேன்!" என்று கூறியபடி சட்டென்று அவளது கரத்தைப் பற்றினான் சரபோஜி.

'சிற்றம்பலம்" என்று தவிப்புடன் கூவிய பிரேமகுமாரி இப்பொழுது என்னை போகவிடுவீர்கள் அல்லவா! நீங்கள் விரும்பும் எதையும் என் தந்தை உங்களுக்குக் கொடுப்பார் அவர் ஒரு டாக்டர் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா!" என்று கேட்டாள்.

'உன் தந்தை!" என்று விழுந்து விழுந்து சிரித்தசரபோஜி நான் சொல்கிறபடி அவர் செய்வார்! ஏனென்றால் என்னைக் கண்டு அவர் நடுங்குகிறார். உனக்கு அது தெரியாமலிருக்கலாம் எனக்குப் பைத்திய வியாதி பிடித்திருப்பதாக அவர் நினைக்கிறார். அதனால்தான் அவர் என்னை சந்தோஷமாக பாதுகாக்கிறார். அவர் ஒரு டாக்டர்தான். சில சமயங்களில் அவர் என்னை ஒரு அறையில் அடைத்து விடுவார். அப்பொழுதெல்லாம் நான் வீறிட்டலறி அமளி துமளிப்படுத்துவது வழக்கம். இருந்தாலும் அவர் விட மாட்டார். அவருக்கு பைத்தியம். அவர்கள் எல்லோருக்குமே பைத்தியம்! என்றான்'

பிரேமகுமாரிக்கு கலவரம் எல்லைமீறிப் போய்விட்டது. தனது முழு பலத்தையும் கொண்டு தன் கையை வேகமாக இழுத்து உதறியபடி சரபோஜியை விட்டு தப்பி படிக்கட்டை நோக்கி ஓடினாள், ஆனால் அவள் ஒரு படி ஏறுவதற்கு முன்பே அவளது கரத்தைப் பற்றி இழுத்தான் சரபோஜி.

'அவசரப்படாதே அவசரப்படாதே!" என்று கெஞ்சிய சரபோஜீ என்னுடைய சங்கநாதத்தைக் கேள்!" என்று கூறியபடி அவளைப் பழைய இடத்திற்கு இழுத்துச்சென்று நிறுத்திவிட்டு சங்கத்தை எடுத்து நாத முழக்கம் செய்ய ஆரம்பித்தான்.

அந்தச் சங்கநாதம் பாதாள அறையையே கிடுகிடுக்கச் செய்தது.

'இந்த நாதத்தைக் கேட்டிருக்கிறாயா? இறந்து போனவர்களை உயிர்பெற்று எழச்செய்ய இதை நான் ஊதுகிறேன். இதைக் கேட்டு இறந்தவர்களெல்லாம் வரிசை வரிசையாக இந்தப்பக்கம் நடந்து செல்வார்கள். அவர்களில் பலர் எனக்குத் தெரிந்தவர்கள். பலர் எனக்குத் தெரியாதவர்கள் என்று கூறிவிட்டு மீண்டும் மீண்டும் சங்கநாதம் செய்ய ஆரம்பித்தான் சரபோஜீ.

அந்த பயங்கர ஒலி பிரேமகுமாரியின் இதயத்தை அலறச் செய்தது. திடீரென சங்கநாதத்தை நிறுத்திய சரபோஜீ சட்டென்று எதிரே சுட்டிக் காட்டியபடி அதோ பார் ரங்கசாமி!" என்று அளவு கடந்த உற்சாகத்தோடு கூறிவிட்டு அந்த அரூபத்தோடு பேச ஆரம்பித்தான். வா ரங்கசாமி உன்னோடு நான் பேசவேண்டும் நீ சிறைக்குச் சென்றாயல்லவா? பரிதாபத்துக்குரியவனே; எல்லாம் அந்த மகாதுஷ்டன் சரபோஜீக்காகத்தானே? வா உன் பங்கைப் பெற்றுக் கொள். நிச்சயமாக உனக்கு பங்கு தருகிறேன் எல்லா தங்க

மும் இங்குதான் இருக்கிறது. ரங்கசாமி அந்தத் தங்கத்தைப் புதைப்பதற்காகத்தான் பல மாதங்களுக்கு முன்பே இந்தக் கட்டடத்தை வாங்கினேன் ரங்கசாமி இரவோடு இரவாக நானே அந்த தங்கலாரியை ஓட்டி வந்தேன். நான் ஒருவனாகவே இருந்து சித்தர்களின் புதை குழிகளைத் தோண்டினேன். அவற்றிலெல்லாம் தங்கத்தை நிரப்பினேன் இதை வேறு யாருக்கும் நான் சொல்ல மாட்டேன் நீ செத்துப் போய் விட்டதால் இந்த ரகசியத்தையெல்லாம் உனக்குச் சொல்லுகிறேன் ரங்கசாமி! இந்த வீட்டு அதிகாரியான நான் கர்னல் வெள்ளியப்பாவைத் தேடிப் பிடித்து அமர்த்தியது ஊரார் கண்ணை மறைக்கத்தான்!" வெள்ளியப்பா என்னிடம் சிக்கிக் கொண்டிருக்கிறார் நான் விசித்திரமாக மாறும் பொழுது அவர் எனக்கு மருத்துவம் பார்க்கிறார் அதற்காகத் தான்! அவருக்கு பணம் கொடுத்தேன்! மயானமாளிகையின் முதலாளி அவர்தான் என்று போலீஸார்கூட ஏமாந்திருக்கிறார்கள் நான்தான் சரபோஜி என்று கனவில்கூட நினைக்கவில்லை! என்னிடம் பங்கு கேட்க தந்தாயா? அயோக்கியா நாயே உன் குரல்வளையை நெறித்து விடுவேன்! என்று வீறிட்டுக் கத்தினான்.

அந்த நேரத்தில் அவன் முகம் பைசாசத்தின் முகம் போல் இருந்தது.

பிறகு திடீரென பிரேமகுமாரியின் நினைவு வந்தவனாய் அவள் பக்கம் திரும்பி உன்னை நன் பயமுறுத்தி விட்டேன் என்று மிருதுவாகக கேட்டபடி அவள் கரத்தை மீண்டும் பற்றினான்

பிரேமகுமாரி வீறிட்டு அலறினாள்,

அலறாதே! உன்னை நான் பயமுறுத்தவில்லை உன் மீதுஇருக்கும் காதலில் என்னால் உன்னைப் பயமுறுத்த முடியாது. இதோ பார் விஜயகுமாரி! நீ என்னைக் காதலிக்கிறாயல்லவா? இதோ அந்த வெற்றிச் தெரியும் சுரங்க வாயிற்படிகளை கவனித்தாயா? அங்குதான் சித்தர்கள் வாழ்ந்தார்கள் நமது ஸோபன அறையையும் அங்கேயே வைத்துக் கொள்வோம்! என்று தவித்தான்.

'கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் உங்களிடம் நான் பேசவேண்டும் சிற்றம்பலம் என் கையை விடுங்கள்! என்று தளுக்காக தன்னை விடுவித்துக் கொண்ட பிரேமகுமாரி நீங்கள் என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னீகள் அல்லவா? என்று பசப்பலாகக் கேட்டாள்.

'நீ என் தெய்வம்!" என்று பக்திப் பரவசத்தோடு கூறினான் சரபோஜி.

'நான் வேறு யாரையாவது காதலித்தால் என்னை நீங்கள் காதலிப்பீர்களா? மாட்டீர்களா?

அதைக் கேட்டதும் அவன் முகம் மாறியது. வேறு யாரையாவது காதலிப்பதா? சே! சே அப்படி இருந்தால் நான் உன்னைக் காதலிக்க மாட்டேன்! ஆனால் நீ வேறு யாரை யாவது காதலிக்கிறாயா?"

'ஆமாம்! 'நான் நான் குமரேசனை அளவுகடந்து காதலிக் கிறேன்!"

விநாடி நேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை. நிட சென்று சரபோஜியின் கை அவளது குரல்வளையை நோக்கிப் பாய்ந்தது அன்றோடு அழிந்தோமென்று தீர்மானித்து விட் டாள் பிரேமகுமாரி. ஆனால் அதே விநாடி மற்றொரு முரட்டுக் கரம் அவனை அப்பால் இழுத்து விட்டது. அடுத்த விநாடியே ஒரு கைத்துப்பாக்கி சரபோஜியின் நெஞ்சுக்கு நேராக நீண் டது)

'உன்னைக் கைது செய்திருக்கிறேன் சரபோஜி." என்று முழங்கியது குமரேசனின் குரல்,

'நீ யார்?" என்று பிரமிப்புடன் கேட்டான் சரபோஜி.

'நான்தான் இன்ஸ்பெக்டர் கந்தப்பா உன்னைப் பிடிப்ப தற்கு மூன்று வருஷங்கள் காத்திருந்தேன் சரபோஜி. நான் தெரிந்துகொள்ள வேண்டிய ரகசியங்களையெல்லாம் இப் பொழுது தெரிந்து கொண்டேன்!" என்று பெருமிதத்துடன் கூறினார் குமரேசனின் உருவிலிருந்த இன்ஸ்பெக்டர் கந்தப்பா.

'தனுக்கு சுந்தரத்தை நான் என்ன செய்தேனென்று உங் களுக்குத் தெரியுமா என்று கேட்டான் சரபோஜி.

'அவனை நீ கொன்று விட்டாய்!''

'அவன் என் கழுத்தை நெறிக்கப் பார்த்தான். என்னை அவன் அடையாளம் கண்டு கொண்டு விட்டான் என்று நினைக்கிறேன் அவன் உடல் என்று நிறுத்தினான் சரபோஜீ.

'சித்தர்வாசல் கதவுக்கு உட்புறமாக அது எனக்குக் கிடைத்தது! அதையும் எடுத்து என் நாற்காலியில் போட்டு வைத்திருக்கிறேன்! அவனும் ரங்கசாமியும் என் புத்திமதியைக் கேட்டிருந்தால் இன்று உயிரோடு இருந்திருப்பார்கள்''

சரபோஜீ ஒரு நெடுமூச்சு விட்டான். பிறகு புன்னகை பூத்துக்கொண்டான். நான் எல்லோருக்கும் நிறைய தொல்லை கொடுத்து விட்டேன் நீங்கள்தான் இன்ஸ்பெக்டர் கந்தப்பாவா ரங்காமியையும் தனுக்கு சுந்தரத்தையும் கைது செய்தவரா? என்னையே நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள் உங்களை அடையாளம் கண்டு கொள்ளாததற்கு சரியான தண்டனை எனக்கு கிடைத்தது. மன்னித்துக்கொள் பிரேமகுமாரி. உன்மீது எனக்கு கோபமில்லை. இந்த இளைஞரை நீ மணந்து கொள்! உங்களுக்கு ஒரு சிறு திருமணப்பரிசை அளிக்கிறேன்,

இதைக் கூறிவிட்டு மின்னல் வேகத்தில் குபீரெனத் திரும்பிய சரபோஜி அருகாமையில் கிடந்த ஒரு வெட்டுக் கத்தியை எடுத்து வேகமாக கந்தப்பாவின் மீது வீசினான்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கந்தப்பா அப்பால் நகராமலிருந்ததால் அவர் பிணமாகி விழுந்திருப்பரர்.

உயிர்தப்பிய அவரை ஓடிப்போய் கட்டிப் பிடித்துக் கொண்டாள் பிரேமகுமாரி. இதற்குள் மற்ற போலீஸார் அங்கு வந்து சரபோஜீயின் மீது பாய்ந்து அவன் கைக்கு விலங்கிட்டார்கள்.

'தம்பதிகள் வாழ்க!'' என்று கூச்சலிட்டபடி கடகட வெனச் சிரித்தான் சரபோஜி.

'என் கையில் போடப்பட்டிருக்கும் விலங்கை கழற்றி விடுவார்கள். ஆனால் நீங்களாகப் போட்டுக் கொள்ளும் திரு மண விலங்கைக் கழற்றவே முடியாதது நீங்கள் நாசமாய்ப் போக! என்று விழுந்து விழுந்து சிரித்தார் சரபோஜி.

சென்னை மத்திய சிறைச் சாலையில் அவனைக் கொண்டு போய் அடைக்கும் வரையில் அவன் வழி நெடுக சிரித்துக் கொண்டு சென்றான்.

சுபம்

# எங்கள் வெளியீடுகள்

1. பேய்க்காட்டுப் பங்களா 1-50
2. காதலிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் 1-00
3. நிர்மலா நீ என் எதிரி! 1-00
4. இன்ப பசி! 1-00
5. காதலை திருடியவள்! 1-00

1. மீன்கன்னி மேகலா! 0-50
2. கொலைஞனோடு கூட்டுச் சேர்ந்த கோதை! 0-50
3. ரத்த வெறிகொண்ட ரம்பா! 0-50
4. மாயம் நிறைந்த மர்ம மாளிகை! 0-50
5. திருடனை சுற்றி அலைந்த தேவமகள் 0-50